


கல்கி
KALKI
27.9.1964
30 காசு



கற்பனை உருவின் அற்புத மென்மை

ஸான்போரைஸ்ட் பாப்ளின்ஸ் :
கோல்ட் ட்ரிங்க், ப்ளுபர்ட், எவர் ப்ரைட், குட் ஷைன்

ஷர்ட்டிங்ஸ் :
ஸ்டிரைப், டாப்பி, செக்ஸ், பைஜாமா

தோதீஸ் :
ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல், ப்ளாடினம், காம்ராஜ்

ஸூட்டிங்ஸ் :
காபர்டின்

டெசவான கலர் புட்டாக்கள் :

ப்ரிண்ட்ஸ் :
ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்,
ஸ்கிரீன் ப்ரிண்ட் ஸாரீஸ்

2x2 கவர்ச்சியான முழு வாயில்கள்—லினோவிலும் புட்டாக்களிலும்








Arvind Quality Fabrics

·SANFORIZED·

அரவிந்த்
மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்



குழந்தையின் மார்புச் சளியை அகற்ற ...

குழந்தையின் வளர்ச்சிக்கு சத்தான உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம், ஆழ்ந்த நித்திரையும். ஆகவே மார்பு சளியினால் இரவெல்லாம் தூக்கமின்றி உங்கள் குழந்தை சிரமப்பட விடாதீர்கள். இதமான அனோலியத்தை அவன் மார்பில் தடவுங்கள். விரைவில் குணமடைந்து அவன் அமைதியாகத் தூங்குவான்; காலையில் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் துயில் எழுவான்.

அனோலியத்தின் சக்திவாய்ந்த மருந்துகள் ஜலதோஷம், தலைவலி, சுளுக்கு மற்றும் தசைவலிகளைத் துரிதமாகக் குணப்படுத்துகின்றன. நீங்களும் அதைப் பயன்படுத்தலாம். எப்போதும் கைவசம் ஒரு டியூப் வைத்திருங்கள்.



அனோலியம்

சிக்கனமான, சுத்தமான 'டின்'னிலும் கிடைக்கிறது



அனோலியம்


விரைவாகப் பலனளிக்கும் இதமான வலிநிவாரணி

அமிர்தாஞ்சன் லிமிடெட், மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி

JWT-AM-AN-2008A


மொரமொரப்பும்
ருசியும் உள்ள
போஷாக்கான
ஸாத்தே
பிஸ்கெட்டுகள்
ORANGE
ஸாத்தே பிஸ்கட் அண்டு சாக்லேட் கம். லிட்., பூனா-2
heros' SBC-229 TAM


இன்பம் தருபவை
டவர்
பிளாங்கெட்
கம்பளிகள்



Aiyars SB. 361 TM A

பூவின் விருந்து

வண்டெனும் பாவலர் வந்தார்;
மலரெனும் வள்ளலைத் தேடி
வண்டெனும் பாவலர் வந்தார்.

வண்டரின் வருகையைக் கண்டார்;
மலர்தனர் தாமரை வள்ளல்!
கண்டெனும் வண்டமிழ்ப் பாடல்
களிப்புடன் பாடிடக் கேட்டார்

இந்தமிழ்ப் பாநன் றென்றார்
தேனினை விருந்தாகத் தந்தார்
பூந்தாது தன்னையும் பொழிந்தார்
பொன்னுடை யாயிற்றும் அங்கே

ஆழ்குளத் தாமரை வள்ளல்
அன்புக்கு நன்றியைக் கூறி
வாழ்கவென் றேவாழ்த்தும் பாடி
வண்டெனும் பாவலர் சென்றார்.


— தணிகை உலகநாதன்

கல்கி

பொருளடக்கம்

குரோதி புரட்டாசி 11 — செப்டம்பர் 27

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


கேரள காங்கிரஸ்
தலைமை பீடம்
அப்படியே முன்னேறுங்கள்! பின்புறம் திரும்பாதீர்கள்!
நேரு மார்க்கம்
PK



மலர் 24

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 9

தேர்தல் முறைக்கு ஒரு மாற்றுத் திட்டம்

சில நாட்களாகத் தேசம் முழுவதிலும் தற்போதைய தேர்தல் முறையைப் பற்றி அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது. வேறெதேனும் ஒரு தேர்தல் அமைப்பைப் பற்றி இப்போது அவசியம் சிந்தித்தேயாக வேண்டும். இச் சமயத்தில் தேர்தல் கமிஷனர் பல கட்சித் தலைவர்களைக் கூட்டி நடத்திய ஆலோசனையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இந்த ஆலோசனையால் நல்ல முடிவு எதுவும் ஏற்படாது என்றே தோன்றுகிறது.

வாக்குச்சாவடி தொலைவில் இருப்பதால்தான் பலர் வாக்கைப் பிரயோகிப்ப தில்லை என்று கருதி வாக்குச்சாவடிகளை இன்னும் அதிகமாக அமைக்க வேண்டும் என்று இக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாட்டால் வாக்காளர்களின் நெரிசல் குறையும்; எனவே இப்போது நடக்கும் ஊழல்களில் ஒரு சில குறையக்கூடும். எனினும் இதனால் முழு பரிகாரமும் காண்பது முடியாத காரியம்.

வெகு நாட்களாக ராஜாஜி கூறிவரும் யோசனையை ஆட்சியாளர்கள் நிர்க்கமாக ஆலோசித்துப் பார்க்க வேண்டும். மோட்டார் வான்களை வாக்குச்சாவடிகளாக்கி வீட்டுக்கு வீடு சென்று வாக்குச் சேகரிக்க வேண்டும் என்பதே ராஜாஜியின் யோசனை. இதனால் வாக்குச்சாவடிக்கு அழைத்துச் செல்ல வாகனம் தருவதிலுள்ள தீய விளைவுகளும் ஆள் மாறாட்டங்களும் குறையும். கடைசி நிமிஷ லஞ்சமும், வீட்டிலிருந்து வாக்குச் சாவடிக்கு வாகனம் தருவதும்தான் இன்றைய தேர்தல் முறையின் முக்கியமான ஊழல். கூட்டம் கூட்டமாக இயக்குவிக்கப்படும் மக்கள் மட்டும் பெருமளவில் வாக்குச் சாவடிக்குச் செல்வதும், பொருளாதாரத்தில் மத்தியதர — உயர்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் வாக்கை உபயோகிப்பதில் அலட்சியமா யிருப்பதும் தற்போது நாம் சகஜமாகக் காணும் உண்மை. வீட்டுக்கு வீடு சென்று வாக்குச் சேகரித்தால் இவ்வாறு பலர் தங்கள் வாக்குரிமையைப் பிரயோகிக்காமலிருக்கும் நிலை மாறும். தொகுதி வாக்காளர்களில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றவர்தான் சட்டசபையில் தொகுதிப் பிரதிநிதியாக இருப்பார்.

இந்தச் சீர்திருத்தத்தோடு, வாக்காளர்களுக்கு அடையாளச் சீட்டு தருகிற பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டால், அரசியல் கட்சிகளும் அபேட்சகர்களும் ஊழல்கள் செய்ய வாய்ப்பளிக்கும் மற்றொரு வழியையும் அடைத்ததாக ஆகும்.

மோட்டார் வான்களில் சென்று வாக்குச் சேகரிப்பதானால், ஆளும் கட்சியினர் தேர்தல் அதிகாரிகளைக் கொண்டு இப்போதை விடத் துணிவாக வாக்குகளை மாற்ற முடியும் என்று சிலர் பயப்படுகிறார்கள். ஆனால் ராஜாஜியின் யோசனைப்படி, வாக்குச் சேகரிக்கும் வான்களில் தற்போது வாக்குச்சாவடியிலுள்ளது போலவே எல்லா அபேட்சகர்களின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். இப்போதுள்ள எல்லாக் கண்காணிப்பும் அப்போது இருக்கும். எனவே இந்தப் பயத்தில் பொருளில்லை.

வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரிப்பதால், ஊழல் குறைவதோடு, தேர்தல் செலவுகளும் குறையும்.

அரசியல் கட்சிகளுக்கும், அபேட்சகர்களுக்கும் பதிலாக அரசாங்க ஊழியர்களுக்கு ராஜாஜியின் யோசனை அதிகப் பொறுப்புத் தருகிறது. அரசாங்க ஊழியர்கள் ஊழல் செய்வதையும், கோண்டாவில் இந்த அநீதம் எல்லைமீறிப் போனதையும்

நாம் அறிவோம். என்றாலும் இருப்பதற்குள் நமக்கு நம்பகமானவர்கள் அரசாங்கச் சிப்பந்திகள்தான். அவர்களிடம் ஒரு மொத்தமாக அவநம்பிக்கை கொண்டோமானால் சட்டத்தின் ஆட்சிக்கே நாட்டில் இடமில்லை.

அரசாங்க ஊழியர்கள் ஊழல் செய்வதற்குக் காரணம் ஆளும் கட்சியின் செல்வாக்குத்தான். ராஜாஜியின் மற்றொரு முக்கியமான யோசனை ஆளும் கட்சியின் இந்தச் செல்வாக்கைத் தேர்தலின்போது மிகவும் குறைத்துவிடுகிறது. தேர்தலுக்கு ஆறு மாதம் முன்பே ஆள்கிற கட்சி அரசாங்கத்திலிருந்து விலகி, ராஷ்டிரபதி அல்லது கவர்னர் ஆட்சி ஏற்பட வேண்டும் என்பது அவர் யோசனை. இந்த யோசனை அமுலானால் அரசாங்க ஊழியர்கள் எந்த ஒரு கட்சியிடமும் தாங்கள் விசேஷமாகக் கடமைப்பட்டிருப்பதாக எண்ண மாட்டார்கள். சர்க்கார் ஊழியர்களைக் கொண்டு ஆள்கிற கட்சி செய்யும் முறையீனங்கள் தொலைந்து போகும்.

கோண்டா தேர்தல் விதிவிலக்கான ஓர் அசாதாரண சம்பவமல்ல; அம்பலத்துக்கு வராமல் பல இடங்களில் நடந்திருக்கக் கூடிய சகஜமான சம்பவத்துக்கு அது ஓர் உதாரணம்தான். ஆட்சி அதிகாரம் பெற்றிருப்பதால் ஓர் அரசியல் கட்சி பெற்றுள்ள அபரிமிதமான சக்திதான் **கோண்டா** ஊழலுக்குக் காரணம். தேர்தலின்போது ஆள்கிற கட்சி சிம்மாசனத்திலிருந்து இறங்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த **கோண்டா** ஒரு திருஷ்டாந்தம்.

மக்கள் மனத்தில் தெளிவான அரசியல் கருத்துக்கள் உருவாகி, ஆளும் கட்சி வேறு, சர்க்கார் வேறு என்ற பேருண்மை பதிவதற்கு ராஜாஜியின் யோசனையை விடச் சிறந்த ஏற்பாடு கிடையாது. ஆட்சி நிர்வாகம் என்பது எல்லாக் கட்சிக்கும் பொதுவான ஒன்று என்பது அப்போதுதான் சந்தேகமற விளங்கும். சர்க்கார் அதிகாரிகளின் சுதந்திரம் வளரவும் பட்ச பாதமின்றிச் செயல்படவும் இம்முறை வசதி செய்யும்.

இன்னொரு யோசனை: வாக்கு சேகரிப்பதற்கு ஒரு வாரம் முன்னரே தேர்தல் பிரசார மெல்லாம் முடிய வேண்டும். வாக்காளர்கள் அமைதியுடன் சிந்தித்துப் பார்ப்பதற்கு இந்த அவகாசம் அவசியம்.

இவையெல்லாம் என்ன, நூதனமான யோசனைகளாக இருக்கின்றனவே, இதுபோல் கேள்விப்பட்டதே யில்லையே எனலாம். ஆனால் நிகழ்கால இந்தியாவின் நிலைமையைப் போல் நாம் எங்காவது கேள்விப்பட்டிருக்கிறோமா? நாற்பத்தைந்து கோடி மக்கள் கொண்ட ஒரு நாட்டில் வயது வந்த யாவரும் நேரடி வாக்குரிமை பெற்றிருப்பது இந்தியாவிலன்றி வேறு எங்கும் காண முடியாத நிலை. எழுத்தறிவின்மை, ஏழைமை, ஆள்கிற கட்சியின் ஊழல் போக்கு இவை யாவும் இந்தியாவைப் போல் தேர்தல் முறையுள்ள வேறெந்த ஜனநாயக நாட்டிலும் கிடையாது. எனவே, இவ்விஷயங்களில் 'தனித் தன்மை' பெற்று விளங்கும் நம் நாட்டில் நமக்கு மட்டும் பொருந்தும் தனித் தன்மை வாய்ந்த ஒரு புதிய தேர்தல் முறையைப் பின்பற்றத்தான் வேண்டும்.

இந்த யோசனைகளை ஏற்பதால் ஆளும் கட்சிக்கும் நன்மை உண்டாகும். காங்கிரஸைத் தற்போது பிடித்துள்ள 'உட்பூசல்' நோவு தீரும். அக்கட்சியிடமுள்ள தேர்தல் நிதியையும் அதிகார பலத்தையும் நம்பியே அங்கத்தினர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இது காரணமாகவே போட்டியும் பூசலும் ஏற்பட்டு உட்பிளவுகள் அதிகரிக்கின்றன. பணமும், அதிகார பலமும் தேர்தலில் செல்லாமல் போய்விட்டால் இந்தப் பூசல்கள் கணிசமாகக் குறையும். காங்கிரஸின் நோவைப் பற்றிக் 'கல்கி'க்கு இவ்வளவு கரிசனம் என்ன என்று எண்ணலாம். ஆனால் காங்கிரஸின் நோவு தனியொரு அரசியல் கட்சிக்கு மட்டும் பிடித்த நோவல்ல. சுதந்திரம் ஈட்டித் தந்த பழைய இந்திய தேசிய காங்கிரஸின் நினைவை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை. அந்த மாபெரும் ஸ்தாபனத்தின் பெயரையும், கொடியையும் வைத்துக்கொண்டுள்ள இன்றைய ஆளும் கட்சியை அப்பழம் பெரும் கட்சியிலிருந்து பூரணமாக விலக்கிப் பார்க்க மக்கள் அறியவில்லை. நிகழ்கால காங்கிரஸின் ஊழல்களைத் தேச சரித்திரத்தோடு ஒன்றிவிட்ட ஒரு சீலம் வாய்ந்த கட்சியுடன் தொடர்புறுத்துவதால் நாடு முழுவதுமே தயக்கமின்றி ஊழல்களில் ஈடுபடுகிறது. காங்கிரஸின் தாழ்ச்சியோடு மக்களுடைய மனோபாவமும் தாழ்ச்சியடைகிறது. எனவே காங்கிரஸ் கட்சியின் நோவையும், அந்த நோவுக்குக் காரணமான பண பலம், அதிகார பலம் இவற்றையும் அகற்றுவது தேசத்துக்கே நன்மையாகும்.

தேர்தல் செலவுகள் குறைவதற்கும் ஊழல்கள் நீங்குவதற்கும் உபயோகமான இந்த யோசனைகள் ஏக – கட்சியின் நிரந்தர ஆட்சியை நீக்கி உண்மையான ஜனநாயகத்தை நிறுவ உதவும். தேசத்துக்கு இதை விடத் தலையாய தேவை எதுவுமில்லை.

என்ன சேதி?

பிரதமர் அபயமளிக்கிறார்

ஆங்கிலத்தை வெகு அவசரமாக நீக்கி, பிடிக்காதவர்கள் மீது ஹிந்தியைத் திணிப்பது தவறு என்று லால்பஹாதூர் அவர்கள் சமீபத்தில் கூறினார். விவேகமான பேச்சு. இந்தப் பேச்சு எந்த அளவுக்குச் செயலாகும் என்பதுதான் கேள்வி. பிரதமரால் தணிக்க முடியாத அளவுக்கு ஹிந்தி வெறியர்களுக்கு ஜன்னி பிறந்திருப்பது நமக்குத் தெரிந்த விஷயம். எனவே பிரதமரின் வெறும் பேச்சைச் சட்டமாக்கினால்தான் சிறுபான்மையினருக்கு விமோசனம் உண்டு.

1965க்குப் பின்னரும் ஆங்கிலத்தை நீடிக்க உதவும் மசோதா ஒன்று நேரு அவர்களின் ஆட்சியில் நிறைவேறியதல்லவா? இந்த மசோதாவுக்குத் தாமே காரணம் என்று லால்பஹாதூர் அவர்கள் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறார். நாமோ வேறு விதமாக அறிந்திருந்தோம். **"ஹிந்தியை ஆட்சி மொழியாக்கும் விஷயத்தை ஹிந்தி பேசாதவர்களின் கருத்துக்கே விட வேண்டும்"** என்று நேரு அவர்கள் பலமுறை கூறியிருந்தார். இதுவே சட்டபூர்வமாக உறுதிப்படும் என்றும் அப்போது எதிர்பார்த்திருந்தோம். அவ்வாறு சட்டம் வராமல் புண்ணியம் கட்டிக் கொண்டவர் லால்பஹாதூர் அவர்கள்தான் என்று நாம் கேள்விப்பட்டிருந்தோம்!

தேசபக்தரின் மறைவு

சென்னை, கொருக்குப் பேட்டை திரு பு. மா. ஆதிகேசவலு நாயக்கர் என்றாலே சென்னைவாசிகளுக்கு அந்நாட்களில் ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டு. கதர் தலைப்பாகையும், கழுத்தை நெருக்கிப் பிடிக்கும் கோட்டும், பஞ்சகச்ச வேட்டியுமாக அவர் வெளிவரும் கம்பீரத் தோற்றம் மட்டுமின்றி அவருடைய சிறப்பான கடவுள் பக்தியும் தேசப் பணியும் சேர்ந்து இவர் மதிப்புக்குரியவர் என்று கட்டியம்கூறும். காங்கிரஸில் சேருவது என்றால் சிறைவாசத்துக்கும், தியாக வாழ்க்கைக்கும் தயாராக இருக்கவேண்டும் என்றிருந்த நாட்களில் திரு பு. மா. ஆதிகேசவலு நாயக்கர் சென்னை காங்கிரஸ் கட்சியில் ஒரு முக்கியமான தலைவர். சென்னையில் உப்பு சத்தியாக்கிரகம் இவர் தலைமையில் சிறிது காலம் வெற்றியுடன் நடந்ததால்



திரு ஆதிகேசவலுவும் ஜயப்பிரகாசரும்

நகர மக்களிடம், 'ஸர்தார்' என்ற அன்புப் பட்டமும் பெற்றார். சென்னை நகராட்சி மன்றத்தில் பலகாலம் உறுப்பினராக இருந்து சிறந்த பணியாற்றியிருக்கிறார். காலஞ்சென்ற எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் சென்னை மேயராக இருந்த காலத்தில் இவர் உதவி மேயராக இருந்து, திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தில்லி முதலிய இடங்களுக்குச் சென்றுவிடும் காலங்களில் வெற்றிகரமாகச் சென்னை நகராட்சி மன்ற அலுவல்களை நடத்திப் பெரும் புகழ் பெற்றார். காலஞ்சென்ற ஸ்ரீமான் எஸ். சீனிவாச அய்யங்கார் அவர்களிடம் நெருங்கிப் பழகி அவருடைய அன்பைப் பெற்றிருந்தார்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் தியாகிகள் பாராட்டு விழா கொண்டாடப்பட்ட போது, ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயணர் அவர்களிடம் சென்னையின் முதல் தியாகியாகக் கதராடை பெறும் கௌரவத்தையும் பெற்றார். ராஜாஜியும் இவரிடம் விசுவாசமும் மதிப்பும் கொண்டிருந்தார்.

இத்தகைய நல்ல தேசபக்தர் தமது அறுபத்தைந்தாவது வயதில் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். அவருடைய குடும்பத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"நேருஜியின் வழியில்"

'நேருஜி காட்டிய வழியை விட்டு இம்மியும் பிறழ மாட்டேன்' என்று பிரதமர் லால்பஹாதூர் அவர்கள் திரும்பத் திரும்பக் கூறிவருகிறார். 'தவறுகளைத் திருத்தவே மாட்டேன்' என்று இவர் அடித்துக் கூறுகிறாரே என்று வருந்தியிருக்கிறோம். நம் வருத்தத்தைப் போக்கும் வகையில் ஆசாரிய கிருபளானி அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். 'இந்தியாவில் எப்போதுமே எந்தப் பெரியவருமே தாங்கள் புது வழியில் போவதாகச் சொல்வது கிடையாது. பழைய மரபைத் தொடருவதாகச் சொல்லிக் கொண்டே, புதிய மார்க்கங்களில் செல்வதுதான் நம் சம்பிரதாயம். காந்திஜியின் வழியிலேயே செல்வதாகக் கூறிக்கொண்டிருந்த நேரு அவர்கள் உண்மையில் அதற்கு நேர்மாறாகச் செல்லவில்லையா? எனவே நேருஜிக்குப் பின் ஆட்சிபீடம் ஏறியவர்கள், 'நேரு காட்டிய பாதையிலேயே போவோம்' என்று கூறுவதைப் பற்றி விசாரப்பட வேண்டாம்' என்று பொருள்பட அக் கட்டுரையில் ஆறுதல் கூறியிருக்கிறார்.

திட்டங்களை வெட்ட வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு அவசியமான பண்டங்களுக்கே திட்டத்தில் முதலிடம் தரவேண்டும் என்றும் லால் பஹாதூர் சமீபத்தில் கூறியதை நினைவு கொள்ளும்போது, ஆசாரிய கிருபளானியின் சமாதானம் சரியே என்ற நம்பிக்கை பிறந்தது.


அந்த நம்பிக்கையைக் குலைக்கும் வகையில் மத்திய நிதி மந்திரியவர்கள், பிரதமர் பேசியதற்கு முற்றிலும் முரணாகப் பேசியிருக்கிறார். 'திட்டத்தைச் சிறிதும் வெட்ட மாட்டோம். நான்காவது திட்டம் 22,000 கோடி ரூபாய்க்கே வகுப்போம். இதில் கனரக ஆலைகளுக்கே முக்கிய இடமளிப்போம். ராணுவச் செலவில் இம்மியும் குறைக்க முடியாது' என்றெல்லாம் வெடியைப் போட்டிருக்கிறார். வாஸ்தவமாகவே நேருஜியின் வழியில் புது சர்க்கார் செல்லப் போவதாக உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆறுதல் மறைந்து மீண்டும் கதிகலங்குகிறோம்.

வெள்ளித்திரை — நேயர் விமர்சனம்

அடுத்து விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் படம்:

பூம்புகார்

விமர்சனம் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி: 3—10—64









செய்திப் படங்கள்

1. சிறந்த அச்சுத் திறமைக்காக பம்பாய் கமர்ஷியல் பிரிண்டிங் பிரஸ் ஸ்தாபனத்துக்கு இந்திய சர்க்கார் செய்தி—தகவல் இலாகாவினர் அளித்துள்ள முதல் பரிசை அதன் உதவி ஜெனரல் மானேஜர் கப்பு, உதவி ஜனாதிபதியிடமிருந்து பெறுகிறார்.

★

2. சென்னை கவர்னர் ஸ்ரீ ஜயசாமராஜ உடையாரின் கல்கத்தா விஜயத்தின்போது கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு தியாகராஜன் சங்க வெளியீடுகளை அவரிடம் அளித்தார்.

★

3. மல்லிகைப் பதிப்பகத்தின் நூறாவது புத்தகமான நேருஜி நூல்: 'மனித குல மாணிக்கம்' வெளியீட்டு விழா தியாகராய நகரில் விமரிசையாக நடந்தது. திருமுருக கிருபானந்த வாரியார் கலந்து கொண்டார்.



★

4. கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் ஈசுவர சந்திர வித்யாசாகர் பற்றிக் கல்கத்தா மாநிலக் கல்லூரி வங்க மொழித் துணைத் தலைவர் டாக்டர் ஹரபிரசாத் மித்ரா அவர்கள் பேசினார். பேராசிரியர் நிர்மல் சந்திர பட்டாசார்ஜி தலைமை தாங்கினார்.

★

5. சமீபத்தில் ராஜாஜி புது தில்லி சென்றிருந்தபோது ஸப்ரூ மன்றத்தில் ஓர் அற்புத உரை ஆற்றினார். ராஜாஜியுடன் ஸ்ரீ தாண்டேகரும் தில்லியில் சுதந்திரக் கட்சிக்காக அருந்தொண்டாற்றிவரும் ஸ்ரீமதி ரேகி அவர்களும் காணப்படுகிறார்கள்.


உயரிய பண்போடு
உபயோகிப்பதற்கும்
உதவுவதற்கும்
உகந்தது
பனாமா
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
பனாமா
இழுக்க
இழுக்க
இன்பம்
இறுதிவரை
பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.
பம்பாய்.56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT. (P) 634 TH
Greens' Advtg.

[இம்மாதம் 26, 27 தேதிகளில் திருச்சியில் சுதந்திரக் கட்சியின் தமிழக மாநில மகாநாடு நடைபெறுகிறது. இச்சமயத்தில் சுதந்திரக் கட்சி நாட்டுக்கு எவ்வளவு தேவையானது என்பதை நிர்வாக ஆற்றலும், அரசியல் அறிவும் மிக்க ஸ்ரீ வி. பி. மேனன் அவர்கள் இக்கட்டுரை வாயிலாக விளக்கி வைக்கிறார். —ஆசிரியர்]

சுதந்திரக் கட்சியின் அவசியம்

வி. பி. மேனன்

அரசியல் கட்சிகளில் பல ரகங்கள் உண்டு. ஒரு குறிப்பிட்ட பிரிவுக்கு நிரந்தரமாகப் பிரதிநிதித்துவம் தாங்குவதற்காகச் சில கட்சிகள் நிறுவப்படுவதுண்டு. ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தை அடைவதற்காகக் கட்சியொன்றை அமைத்து விட்டு, நோக்கம் நிறைவேறியபின் கட்சியைக் கலைப்பதுண்டு. சில கட்சிகள் தங்களது குறிக்கோள்களையோ, விருப்பங்களையோ நிறைவேற்ற வில்லை எனக் கருதி அவற்றின் அங்கத்தினர்கள் பழைய கட்சிகளிலிருந்து விலகிப் புதுக் கட்சிகள் அமைப்பதும் உண்டு.

வரையறை செய்யப்பட்ட குறிப்பிட்டதோர் இலட்சியத்தை அடைவதற்கென்றே ஆதியில் நிறுவப்பட்ட ஒரு பெரும் கட்சி இன்று நம் நாட்டில் உள்ளது. அக்கட்சியின் இலட்சியத்தை அடைந்தாகி விட்டது. ஆனால் கட்சியைக் கலைத்தபாடாக இல்லை. மூல நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொண்டபின் கட்சியின் கொள்கை பற்றிச் சிலகுழப்பங்கள் ஏற்பட்டன. இது இயற்கையே. என்றாலும், 'இதுவே அதிகாரத்திலுள்ள கட்சி' என்ற காரணத்தினால் அதன் கொள்கையைப் பற்றிக் கவனம் செலுத்தாமல் ஏராளமானவர்கள் தொடர்ந்து அந்தக் கட்சியில் சேர்ந்து வந்தார்கள். பழக்க விசேஷம் காரணமாகவே பலர் சேர்ந்தார்கள். சுய முன்னேற்றத்தைக் கருதி, இதையே பிழைப்பாக்கிக் கொள்ளலாம் என்ற ஒரே காரணத்துக்காகப் பலர் சேர்ந்தார்கள். ஆனால் எவ்வளவுதான் அதிகாரம் பெற்றிருப்பினும், ஒரு கட்சியால் அதன் எல்லா அங்கத்தினர்களுக்கும் பிழைப்பு அளிக்க முடியாதல்லவா? இதனால் பலர் ஏமாற்றமடைந்தனர்.

இந்நிலையில், பழைய கட்சியிலிருந்து விலகிப் போட்டிக்கட்சி அமைக்க வேண்டும் என்ற சபலம் சிலருக்கு எழுவது இயற்கைதானே? இதே காரணமாக, எந்தப்புதிய கட்சி ஸ்தாபிக்கப்பட்டாலும் ஆளும் கட்சியினால் தங்கள் ஆசை ஈடேறப் பெறாத பேராசைக்காரர்களின் புகலிடம்தான் புதுக் கட்சி என்று மக்கள் சந்தேகிப்பதும் சகஜமாயிற்று. வெறும் சுய ஆசைக்காக இன்றி, கொள்கையில் முற்றும் மாறுபட்ட ஒரு கட்சி அமைக்கப்பட்டாலும், அது ஏமாற்றமடைந்து மனமுடைந்தவர்களின் கட்சி என்றே தவறாக எண்ணிப் பலர் அதில் சேருவதும் சகஜம்தான்.

ஆனால் சுயநலக் கலப்பில்லாமல் மகத்தான இலட்சியங்களை அடையவே அரசியல் கட்சிகள் அமைக்கப்படுவதுமுண்டு. அப்படிப்பட்ட கட்சிதான் சுதந்திரக் கட்சி. நம் கட்சி குறிப்பிட்ட ஒரு பிரிவினருடையதோ, குறிப்பிட்ட ஒரு நோக்கத்தைக் கொண்டதோ அல்ல. அறிஞர்கள் கண்ட நல்வாழ்வு முறையை உய்த்துணரவும், அதற்கொவ்விய ஒரு சமூக அமைப்பை உருவாக்கவும் ஏற்பட்டது நம் கட்சி.

பழைய அரசியல் சர்ச்சைகளில் பெரும்பான்மையானவை நிகழ்காலத்தில் முக்கியத்துவம் இழந்து விட்டன. உடனடியாக நடைமுறையில் தீர்க்க வேண்டிய பிரச்னைகளை முக்கியமாகக் கொண்டே இன்று கருத்து மாறுபாடுகள் எழுகின்றன. சமூகம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதைக் குறித்து இரண்டு விரிவான அரசியல் கொள்கைகளே இன்று உள்ளன. ஒன்று சமத்துவம் என்ற இலட்சியத்தை மையமாகக் கொண்டது; மற்றது, அடிப்படைக் கொள்கையான சுதந்திரம் என்பதை மையமாகக் கொண்டது.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில் ஸ்டூவர்ட் மன்னர்களின் கொடுங்கோன்மையை எதிர்த்தவர்கள், ஜான் லாக், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் சாஸனம், பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகள், பின் நூற்றாண்டுகளின் தோன்றிய அரசியலாரின் லிபரல் கொள்கை இவையே சுதந்திரக் கட்சியின் மூலம். ராஜா ராம்மோஹன் ராய், ரானடே, கோகலே, காந்திஜி ஆகியோரும் இந்த லிபரல் கொள்கையை ஒப்புக் கொண்டவர்கள். கடந்த இரு நூற்றாண்டுகளில் பிரான்ஸிலும், பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் உருவாயுள்ள அற்புத சாதனையாகிய நாகரிக வாழ்வு அரசியல் சாஸனத்துக் குட்பட்டச் சுதந்திரங்களை அனுபவிப்பதன் மூலமே ஏற்பட்டதாகும். சாஸனத்துக் குட்பட்டச் சுதந்



வி. பி. மேனன்

திரத்தைக் காத்துக்கொள்ளும் இக்கொள்கை தான் சுதந்திரக் கட்சியின் முன்னேடி.

இதற்கு மாறான சமத்துவக் கொள்கை இவ்வளவு பழைமையானதல்ல. அது பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தோன்றிற்று. உணர்ச்சிகளைத் தூண்டி விடும் இந்தக் கொள்கை இந்திய மக்கள் பலரை வலுவாகக் கவர்ந்திருக்கிறது. என்றாலும், இக்கொள்கை ஒரு கானல் நீராகவே பல இடங்களில் நிரூபணமாகி யுள்ளதை நான் காண்கிறேன். இந்தக் கொள்கைக்கு ஏராளமான அபிமானிகள் சேர்ந்ததுண்டு; அது பெரும் செல்வாக்குப் பெற்றதுமுண்டு; ஆனால் நடைமுறையில் அது அடக்குமுறையிலும், மனிதனின் ஆக்க ரீதியான உந்தல்களை நசுக்குவதிலும்தான் முடிந்திருக்கிறது. கம்யூனிஸத்தைத் தழுவிய நாட்டு மக்களின் பிரமை தெளிந்து சுதந்திரத்துக்காக அவர்கள் மீண்டும் போராடத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதைக் கூடவே காண்கிறோம்.

சமத்துவம் என்ற கொள்கையை நம்மில் யாருமே ஆட்சேபிக்க மாட்டோம். அதை வளர்க்கத்தான் நாம் விரும்புகிறோம். ஆனால் யாருடைய நியாயமான சுதந்திரமும் பறிமுதலாகாத முறையில், சுதந்திரவாழ்வை இழக்காமலே சமத்துவம் நிறுவுவதுதான் நம் நோக்கம். சட்டத்தின் முன் எல்லோரும் சமமாக மதிக்கப்படுதல் வேண்டும்; எல்லோருக்கும் சமமான வாய்ப்புக்கள் இருக்க வேண்டும் — இவ்விரு அம்சங்களில் சுதந்திரத்துக்கு ஊறு நேராமலே சமத்துவத்தைக் காக்க முடியும். ஆனால் எல்லோரும் சமமான ஊதியம் பெற்றிருக்க வேண்டும் என்பதும், சமமான சொத்துரிமை பெற்றிருக்க வேண்டும் என்பதும் சுதந்திரத்துக்குப் பங்கம் விளைவிக்கும்.

சுதந்திரத்தை மையக் கொள்கையாகக் கொண்டால்தான் மனித இயல்புக்குத் திருப்தியளித்து, பலவிதமான மனப் போக்குள்ள மனிதர்களும் பலவிதமான நாகரிக மரபுகளும் ஒத்து வாழ இடமளிக்க முடியும். இப்போது இந்தியா அடைந்துள்ள அபிவிருத்தி நிலையில் சுதந்திரக் கொள்கைதான் பொருந்தும். நம் பண்டைய சமூக அமைப்பு பாரம்பரிய அந்தஸ்தின் அடிப்படையில் உருவானது. ஒவ்வொருவனும் வாழ்க்கையில் தனக்கென்று ஒரு குறிப்பிட்ட அந்தஸ்தில் பிறந்ததாகக் கருதப்பட்டது. அவன் தன் வாழ்முறையை நிர்ணயித்துக்கொள்வதில் புது முடிவுகள் எடுப்பதற்கு அதிக இடமே இல்லை. அவனது வேலை, விவாகம், வாழவேண்டிய இடம் முதலிய யாவும் முன்பே நிச்சயிக்கப்பட்டிருந்தன. இது சௌகரியமான அமைப்புத்தான். ஆனால் இதில் சுய முயற்சிக்கு இடமில்லை. குறிப்பாக, உயர்ந்த வகுப்புக்களில் பிறந்தவர்களில் சில அசாதாரணமான மனிதர்களைத் தவிர மற்ற எல்லோரும் சுய இச்சைப்படி வாழ இம்முறை தடங்கலாக இருந்தது. இம்முறையை விட்டுச் செல்ல நாம் இப்போது முயல்கிறோம். ஒவ்வொரு மனிதனும் தனது திறனுக்கேற்பப் பூரணமாக வளருவதற்கு வசதி தரும் சமூக அமைப்பை உருவாக்க முயலுகிறோம். தானே தன் வாழ்வை யொட்டிய பொறுப்புக்களுக்கு முடிவெடுத்துத் தோள்கொடுக்க அவன் வாய்ப்புப் பெற்றிருந்தால்தான் அவன் சுதந்திர வாழ்வு வாழ்வதாகக் கருத முடியும். ஆனால் சமத்துவம் என்பதை வலியுறுத்தும் சோஷலிஸ்டுகளோ, மக்கள் தம் வாழ்வு குறித்து எவ்வித முடிவெடுக்கவும், பொறுப்பேற்கவும் இயலாத ஒரு சமூக அமைப்பை நிறுவ விரும்புகிறார்கள். சோஷலிஸக் கொள்கைப்படி மக்களின் பிரத்தியேக வாழ்வு உள்பட யாவும் சர்க்கார் வசமாகி விடுகிறது. சோஷலிஸம் வேறு எவ்விதத்திலும் அமைய இயலாது. இந்த சோஷலிஸ வாழ்முறை நம்மைப் பழைய பிடிப்புக்களிலிருந்து விடுவிக்காது. பழைய முறையில் கண்டதைவிடப் பெரிய சமுதாயச் சிறைச்சாலையாக நாடு மாறும். ஒருகால் முன்பிருந்த அறைகளைவிட இந்தச் சிறையின் அறைகள் பெரிதாக இருக்கக் கூடும். ஆனாலும் சிறை சிறைதான்.

இன்றைய நிலையில் இந்தியாவுக்குச் சுதந்திரக் கொள்கை அவசியமென்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. இது பொருளாதாரம் குறித்தது. இப்போது பொருளாதாரப் பிரச்னை மிகவும் முக்கியமாக உள்ளது. பொருளாதாரத்தில் நாம் உலகிலேயே மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறோம். இந்நிலையை நாம் எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் உயர்த்தியாக வேண்டும். இந்த இலட்சியத்தையே தான் சோஷலிஸ்டுகளும் கூறுகிறார்கள். ஆனால் அவர்களை இயக்குவிக்கும் சக்தியும் அவர்கள் அடையக் கூடிய இலட்சியமும் இதற்கு முற்றிலும் மாறானவை. முதலாளித்துவ முறை உற்பத்தி செய்த செல்வத்தை சம **விநியோகம்** செய்ய சோஷலிஸம் மார்க்கமாகும் என்றே முதலில் கருதப்பட்டது. அதாவது, செல்வத்தை **உற்பத்தி** செய்ய உதவும் சமூக முறையை உருவாக்குவது சோஷலிஸத்தின் நோக்கமல்ல. முன்பு போலவே தான் இன்றும் சோஷலிஸத்தினால் பழைய செல்வங்களை விநியோகிக்க முடிகிறதே அன்றி, புதிதாகச் செல்வம் உற்பத்தி செய்ய இயலவில்லை. இந்தியாவிலும், மற்ற இடங்களிலும் இதைத்தான் நாம் அநுபவபூர்வமாகப் பார்க்கிறோம். செல்வ உற்பத்திக்கு மக்களை ஊக்கி, பயிற்றுவித்து, ஒன்று சேர்த்து நிர்வகிக்க சோஷலிஸத்தினால் இயலாது.

இதற்கு மாறாக, சுதந்திர முறையானது தனிமனிதனின் திறமைகளும், அபிலாஷைகளும் சுதந்திரமாக வெளியாக வசதியளிக்கிறது. இந்தச் சக்தியில்தான் சோஷலிஸச் சார்பற்ற நாடுகளில் நவீன முறை உற்பத்தி பெருகியுள்ளது. இந்தியாவிலும் இந்தப் பலனை நாம் பெற முடியும்.

சுதந்திரக் கட்சிக் கொள்கையானது, சுதந்திரமா சமத்துவமா என்ற தத்துவரீதியமைந்த நீண்டகால இலட்சியங்களைப் பூர்த்தி செய்யும். அதே சமயத்தில் பழைய சமூக அமைப்பின் நெருக்கும் சூழலிருந்து மக்களை விடுவித்து, நமது பொருளாதார நிலையை உயர்த்தி நாட்டின் உடனடிப் பிரச்னைகளையும் குறுகிய காலத்தில் தீர்த்து வைக்கும்.



கயல்விழி

அகிலன்

· பத்தாம் அத்தியாயம்

சதியாலோசனை

பொன்னி வளநாட்டு மக்கள் இயல்பாகவே குதூகலமான வாழ்க்கை முறைகளில் ஊறித் திளைத்தவர்கள். தேர்கள், திருவிழாக்கள், ஆடல்கள், பாடல்கள், கும்மி, கோலாட்டம், கூத்து இப்படி ஏதாவது ஒன்று அவர்களுக்குத் தொடர்ந்தாற்போல் இருந்து வரவேண்டும். குலோத்துங்கர் இப்போது அவர்களுடைய குதூகலத்துக்கு வீரநரசிம்மரையும் அவரது புதல்வி *பாமினியையும் கொடுத்து விட்டார். தலைநகரமெங்கும் பாமினியைப் பற்றிய பேச்சுத்தான். வண்ணக் கிளி என்றார்கள், சொர்ண விக்கிரகமென்றார்கள், மயில் என்றார்கள், மான் என்றார்கள்—யாழும் கையுமாக அவள் வந்த கோலத்தைக் கண்டவர்கள் இசையிலும் கலைகளிலும் வல்ல கந்தர்வ மங்கை என்று சொல்லி வாய் ஊறிப் போனார்கள்.

நகரத்தின் விழாக் குதூகலம் அன்றைக்கு ஒருவாறு முடிந்தது. இரவில் அரண்மனையில் விருந்தினர்களுக்குச் சாப்பாடு நடைபெற்றது. பாமினி இதற்கு முன்பு சின்னஞ் சிறு வயதில் விவரமறியாப் பருவத்தில் அங்கு வந்திருக்கிறாள். இப்போது அவளுடைய வாழ்வில் வசந்தம் குலுங்கும் பிராயத்தில், அவள் கண்ட சோழ நாட்டின் இயற்கை வளம் அவளை மதுவுண்ட பொன் வண்டாக மாற்றியிருந்தது.

''பாமினிக்கு இரண்டு கண்கள் போதவில்லை இந்த நாட்டின் அழகைப் பருகுவதற்கு!'' என்று பெருமையாகத் தொடங்கினார் அவளுடைய தந்தை. ''வழியெங்கும் 'இதோ பாருங்கள்! இதோ பாருங்கள்!' என்று என்னைப் படாத பாடுபடுத்தி விட்டாள். இயற்கையின் பேரழகைப் பருகுவதில் அவ்வளவு மயக்கம் இவளுக்கு! கம்பரின் கவிதைகளை வேறு எனக்குப் பாடிக் காட்டத் தொடங்கிவிட்டாள். இந்த நாட்டு மண் வளந்தான் அவரை அவ்வளவு கம்பீரமாகப் பாட வைத்திருக்கிறதாம்!''

''இளவரசியார் விரும்பினால் இந்தப் பொன்னி வள நாட்டையே அவர் எடுத்துக் கொள்ளலாம். அவருடைய நாடுதானே இது?'' என்று உட்பொருளோடு பேசினார் சக்கரவர்த்தி.

கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் பாமினி பைந்தமிழையும் ஆர்வத்துடன் படித்து வைத்திருந்தாள். கவிச் சக்கரவர்த்தி

* பாமினியின் பாத்திரத்துக்கு ஆதாரம்: 'The Hoysala Vamsa' by William Coelho - Indian Historical Research Institute, Bombay.

கம்பர் அவர்களுடைய அரண்மனைக்கு வந்திருந்த போது அவரை விட்டு அவன் அகலவே யில்லை. அதை யெல்லாம் வீர நரசிம்மர் சக்கரவர்த்தியிடம் கூறினர். ஆடல், பாடல், ஓவியம், கவிதை முதலிய கலைகளுக்கென்றே பிறந்தவ ளாம் அவள்.

அவள் தமிழ் பேசுவது குழந்தை யின் மழலை போல் இருந்தது; குரலோ அவள் மீட்டும் யாழின் இனிமையை ஒத்திருந்தது. இராஜ ராஜன் உணவை மறந்தான். பிறர் ஏதும் நினைப்பார் களே என்பதையும் மறந்து அவளையே நோக்கிய வண்ணம் இருந்தான்.

''திரும்பிய திசைகளில் எல்லாம் தாமரை பூத்த தடாகங்கள், கூட்டங் கூட்டமாய்க் கண் விழித்து நோக்கும் குவளை மலர்கள், இன்னிசை மகர யாழ் மீட்டும் தேன் வண்டுகள், அலை பாய்ந்து குளிர் தென்றல் வீசும் ஆறுகள்..... அடடா! கம்பரிடம் இன்னும் சில நாள் நான் பாடம் கேட்காமல் போய் விட்டேனே!'' என்று குயிலின் குரலில் குதூகலம் பொங்கக் கூறினாள் பாமினி.

''கேட்டிருந்தால் இவளும் கவி பாடத் தொடங்கியிருப்பாள்!'' என்று கூறிச் சிரித்தார் வீர நரசிம்மர்.

''தண்டலை மயில்கள் ஆட,
தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளைகண் விழித்து நோக்க,
தெண்டிரை எழினி காட்ட,
தேன்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம் வீற்றிருக்கு மாதோ!''

பாமினி மெல்லிய குரலில் கம்பரின் கவி இன்பத்தை உருக்கமாக முணு முணுத்துக் கொண்டே புன்னகை பூத் தாள். குலோத்துங்க சோழருக்குப் புல்லரித்தது. கம்பரின் வாயாலேயே அந்தப் பாடலைக் கேட்டு இன்புறும் பாக்கியத்தைப் பெற்றவர் அவர். இப்போது அதை ஒரு கன்னடத்துப் பெண்ணழகி தன் இன்பம் தோய்ந்த இதயத்திலிருந்து இசைக்கிறாள்.

''ஆஹா! ஆஹா!'' என்று மெய்ம் மறந்து கூவினார் குலோத்துங்கர். ''கம்பர் தம் கவிச் சித்திரத்தில் தீட்டிய அரச சபையை அப்படியே கண் முன் கொண்டு வந்து விட்டீர்களே, இளவரசி! மருத நிலத்தரசன் கொலு வீற்றிருக்கும் வனம் நிறைந்த மண்டப மாம் இந்தத் திருநாடு. தாமரைகள் விளக்கேந்தி ஒளி சிந்துகின்றனவாம்; மயில்களாகிய அரம்பையர் ஆடுகின்றன ராம்; கார்மேகங்கள் முழவதிரச் செய் கின்றனவாம்; ஆறுகளின் மெல்லிய அலைகள் திரைச் சீலைகளாகத் தொங்கு கின்றனவாம்; தேனுண்ட வண்டுகள் மகர யாழ் மீட்ட, கோடானுகோடி குவளை மலர்கள் சபையோர்களின் கண்களாக மலர்ந்து அந்த அற்புதக் காட்சியை விழித்து நோக்குகின்றன வாம்! என்ன கற்பனை! என்ன சொல் நயம்! அடடா!''

இளவரசன் இராஜ இராஜன் தன் னையே விழித்து நோக்கிக் கொண்டிருந் தது சிறிது எரிச்சலூட்டியது பாமினிக்கு. அவனுடைய விழிகளில் குளுமை யில்லை; கற்பனையில்லை; கனிவில்லை. ஒரே வெப்பம் வீசத் தொடங்கியது அவனிடமிருந்து.

''இளவரசரும் கம்பரின் கவிதை களை ஆழ்ந்து படித்திருப்பாரோ?'' என்று கேட்டு, நேருக்கு நேர் அவன் முகத்தை ஊடுருவிப் பார்த்தாள் பாமினி. சட்டென்று தன் தலையைக் குனிந்து கொண்டான் இராஜ ராஜன். அதே இடத்தில் அவனை வாளால் இரு துண்டுகளாக வெட்டிப் போட்டுவிட வேண்டும் போல் தோன்றியது குலோத் துங்கருக்கு. 'பைந்தமிழில் பயிற்சியில் லாமல், அது கூறும் அறநெறியில் சிந்திக்கத் தெரியாதவனுக்கு அரசியல் வாழ்வாம், அரசியல் வாழ்வு!'

''குலோத்துங்கனுக்குப் பிறந்தவன் கம்பரைப் பயிலாமல் இருப்பானா?'' என்று மேலெழுந்தவாறு மழுப்பிவிட்டு, ''இளவரசியாருக்கு முன் நாணம் வந்து விட்டது அவனுக்கு!'' என்றார் சக்கர வர்த்தி.

'கண்களில் மருந்துக்குக் கூட நாணத்தைக் காணுமே!' என்று நினைத்துக் கொண்டாள் பாமினி. வீர நரசிம்மர் அவளைச் சோழ நாட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்ததன் நோக் கமே நாடு பார்ப்பதற்காகத்தான் என் றாலும், அதற்குள் மற்றொரு நோக்கமும் கலந்தே யிருந்தது. குலோத்துங்கரின் வற்புறுத்தலை வீரநரசிம்மரின் தந்தை யான வல்லாளதேவராலும் அடியோடு புறக்கணிக்க முடியவில்லை. அவருடைய அண்டை அயல் நாடுகளும் பகை நாடுகளாக இருந்தன. ஆகவே, ஒரு வேளை பாமினிக்கு விருப்பம் ஏற்படு மானால், இராஜ இராஜனுக்கே மணம் முடிக்கலாம் என்ற யோசனையும் ஒரு மூலையில் அவர்களுக்கு இருந்தது. நாட் டின் இயற்கை வளத்தில் அவளுக்கு ஏற்பட்ட பற்றுதலை நரசிம்மர்கூட வேறு விதமாக நினைக்கத் தொடங்கினர்.

பிரயாணக் களைப்பு, வரவேற்புக் களைப்பு, உண்ட களைப்புத் தீர விருந்தினர்கள் உறங்கத் தொடங்கினார்கள். குலோத்துங்கருக்கு இராஜ இராஜ விடம் ஏற்பட்ட சிறு கோபம் இன்னும் அடங்க வில்லை. எப்படியாவது இன்னும் சிறிது காலத்துக்குள் அவன் விருந்தினர்களுடைய அன்புக்குப் பாத்திரமாகி விட்டால் அதனால் பலன் உண்டு. இல்லையேல் அது அவனுடைய தலைவிதி; நாட்டின் தலைவிதி.

அ [illegible] டத்தில் அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபரைக் காத்திருக்கச் சொல்லி யிருந்தார் குலோத்துங்கர். நடுச்சாமமாகி விட்டது. மற்ற அலுவல்களை முடித்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார்.

''எப்படி இருக்கிறது பாண்டிய நாடு?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''நாம் மதுராந்தகம் செய்துவிட்டு வந்தோம். ஆனால் மதுரையோ ஆதியி விருந்ததைவிட இப்போது அதிகமான வலிமையோடு தலை தூக்கி விட்டது.



நாம் அச்சத் தக்க வகையில் அது வளர்ந்து கொண்டிருக்கிறது!''

''என்ன?'' என்று திடுக்கிட்டார் குலோத்துங்கர்.

சயங்கொண்ட சோழ வல்லபர் திருக்கொடுங் குன்றத்துப் புலவனின் செயல்களை வரிசைக்கிரமமாக அவரிடம் சொல்லத் தொடங்கினர். எல்லாவற்றையும் விவரமாய்க் கூறி, அவன் மீது பாண்டியர் பரிவு கொண்டிருக்கும் நிலையையும் விளக்கினர்.

''சக்கரவர்த்திகளே! அந்தப் புலவன் பாண்டியருக்குப் பொருட் குவைகளை அனுப்பி வைத்தானே, அது போன்ற ஒரு காட்சியை நான் என் வாழ்நாளில் கண்டதில்லை. சக்கரவர்த்திகளுக்கும் எவ்வளவோ சிற்றரசர்கள் நிறையப் பொருள் அனுப்புவதுண்டு. போர்களில் நாம் வெற்றி பெற்றுப் பிறநாட்டுப் பொருட்களை நம் நாட்டுக்குக் குவியல் குவியலாகக் கொண்டு வருவதும் உண்டு. ஆனல் அவைகளெல்லாம், அந்தப் புலவன் அனுப்பிவைத்த பொருளுக்கு முன் அற்பம்தான்!''

நம்ப முடியாத கூற்று இது குலோத்துங்கருக்கு. 'ஒரு புலவன் இவ்வளவு செல்வாக்குப் பெற்று விட்டானு? செல்வம் திரட்டி மன்னனுக்கே வழங்கும் அளவுக்குச் செல்வாக்கு!'

''அடிமைகளைச் சில நாட்டரசர்கள் தங்கள் சக்கரவர்த்திகளுக்குத் திரட்டி அனுப்பி வைப்பது வழக்கமல்லவா? இவனே, தாங்களே விரும்பி உழைக்கக்கூடிய ஆயிரக்கணக்கான இளைஞர்களை மதுரைக்கு அனுப்பி வைத்திருக்கிருன். அவர்கள் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் மதுரையைப் புதுப்பித்துக் கட்டுகிருர்கள்!''

''ஆட்களை வேறு திரட்டி அனுப்புகிருனு?'' என்று தம்முடைய மீசை துடிக்கக் கேட்டார் குலோத்துங்கர்.

''ஆமாம்.''

நெடு நேரம் சிந்தனையில் ஆழ்ந்து விட்டார் சக்கரவர்த்தி. சுந்தரபாண்டியனை ஒழித்துக் கட்டியதோடு, பாண்டியப் பூண்டின் ஆணி வேரையேஅறுத்து விட்டதாக நம்பிக் கொண்டிருந்தவர் அவர். ஆனல் குடிமக்களின் இயக்கம் ஒன்று எங்கிருந்தோ ஒரு புலவனின் தலைமையில் முளைத்து விட்டது.

''என்ன செய்வது?'' என்று ஒற்றர் தலைவரிடமே கேட்டார் சக்கரவர்த்தி.

''மேலும் சில நம்பிக்கையான ஆட்கள் எனக்கு வேண்டும். அவனை யாரும் அறியாமலே கொன்று தீர்த்து விடுகிறேன். அல்லது, அவனைப் பாண்டிய நாட்டின் எல்லையை விட்டாவது உடனே அப்புறப்படுத்த வேண்டும்.''

''எப்படியாவது ஒழிக்கத்தான் வேண்டும்!'' என்று உறுதியோடு கூறினர் சக்கரவர்த்தி. ''ஆனல், புலவனைக் கொல்வதைப் போல் கொடிய பாவம் உலகத்தில் வேறெதுவும் இல்லை. கல்வித் கடவுளை வழிபடுகிறேம் நாம்; அவனுடைய சொல்லில் அவர் குடியிருக்கிருர். இதை நாம் மறந்துவிடக் கூடாது.''

புலவர்களிடம் பரிவு காட்டும் இந்தப் பண்பு ஒன்றுதான் அமைச்சருக்கு வேம்பாக இருந்தது. அவர்கள் அறம் பாடினுல் அது பலித்து விடும் என்ற நம்பிக்கை குலோத்துங்கருக்கு உண்டு.

''வல்லபரே! புலவனுடைய உயிரைக் கொல்வதுதான் பாவமென்கிறேன். அவனுடைய புலமையைக் கொல்ல வேண்டும்; கற்பனையைக் கொல்ல வேண்டும். அவனுடைய உணர்ச்சிகளை நம்முடைய அன்பால் கொன்று தீர்க்க வேண்டும்!''

இரவோடு இரவாகத் தம்முடைய திருமந்திர ஓலை நாயகரைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு, பாண்டியருக்கு ஒரு பெரிய ஓலை எழுதலானர் சக்கரவர்த்தி. பாண்டிய நாட்டு இளம் புலவரின் பெரும் புகழ் சோழநாட்டுக்கு எட்டி விட்டதாம்! வடக்கே கோசல நாட்டிலிருந்து வந்திருக்கும் வீரநரசிம்மரும் அவருடைய புதல்வியும் தமிழ்க் கவி கேட்டு இன்புறத் துடிக்கிருர்களாம்! புலவரைத் தக்க மரியாதைகளுடன் உடனடியாகத் தம்முடைய சபைக்கு அனுப்பி வைக்க வேண்டுமாம்!

சயங்கொண்ட சோழ வல்லபர் வெற்றிப் புன்னகையுடன் தம்முடைய ரதத்தில் ஏறினர்.

பதினென்ரும் அத்தியாயம்

காயல் பட்டினத்தில்....

காலம் காலமாகக் கடல் வாணிபத்தில் தலைசிறந்து நின்ற பாண்டிய நாட்டுக்கு அதன் இரு கண்களைப் போல் விளங்கி வந்த துறைமுகங்கள் தொண்டியும் கொற்கையுமாகும். கிழக் கடற்கரையின் வட பகுதியில் தொண்டிப் பட்டினம் முத்துக் கொழித்தது; தெற்கில் கொற்கையில் விளைந்த நன்முத்

துக்கள் மேற்கத்திய நாடுகளிலிருந்தெல்லாம் செல்வங்களைக் கொண்டு வந்து பாண்டிய நாட்டில் குவித்தன.

காலம் மாறி விட்டது. சோழ சாம்ராஜ்யத்துக்குப் பாண்டிய நாடு அடிமைப்பட்ட பிறகு, தொண்டிப் பட்டினத்தின் வாணிபத்தை முறியடித்து அதை நொண்டியாக முடக்கி விட்டார்கள் சோழர்கள். கொற்கைச் சலாபத்தில் விளைந்த நன் முத்துக்களோ மேற்கே அரபு நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான குதிரைகளை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக, நேரே கங்காபுரிக்குத் திறைப் பொருளாகப் போகத் தொடங்கின. கொற்கையும் தனது செருக்கழிந்து தடுமாறியது.

இந்த நிலையில்தான் கொற்கையை அடுத்த காயல் பட்டினத்தை, ஒரு முக்கியமான துறைமுகமாக்குவதில் கவனம் செலுத்தினார் குலசேகர பாண்டியர். போர் முடிந்த பிறகு மறவப் படைத் தலைவரான மழுவச் சக்கரவர்த்தியிடம் காயல் பட்டினத்தின் பொறுப்பைக் கொடுத்தார். ''நம்முடைய நாட்டின் கடல் வாணிபத்தை எந்த அளவுக்குப் பெருக்க முடியுமோ பெருக்குங்கள்; தெற்குக் கோடியில் இருப்பதால் சோழர்களின் பொறாமைக்கு இலக்காகாமல் தப்பி, சிறிது சிறிதாக வளர்த்து வாருங்கள். கொற்கையில் அவர்கள் கவனத்தைத் திருப்பி விட்டு, காயல் பட்டினத்து வாணிபத்தை முழு மூச்சோடு கவனியுங்கள்.''

காட்டு அரணும் கோட்டை மதில்களும் நிறைந்த 'கானப் பேரெயில்' என்ற பெயருடைய காளையார் கோவிலைச் சேர்ந்தவர் மழுவச் சக்கரவர்த்தி. குலசேகர பாண்டியர் பட்டத்துக்கு வந்த காலத்தில் அவர்தாம் அந்தப் பகுதியிலிருந்த மறவர்குடி மக்களைஒன்று திரட்டி மிகப் பெரிய மறவர் படையை உருவாக்கியவர். அந்தப் படையினரின் வீரமும் எண்ணிக்கையும் அந்தக் காலத்தில் குலோத்துங்கர் என்ற யானைக்குச் சிம்ம சொப்பனமாகிவிட்டது. ஆகவேதான் உடனடியாக அவர் பாண்டியருக்குப் படைக் கலைப்பு உத்தரவு அனுப்பினார். மீண்டும் படை திரட்டுவதற்குத் தடை விதித்தார்.

மழுவச் சக்கரவர்த்தி இப்போது நாட்டுக்காகப் பொருள் திரட்டும் பணியில் ஈடுபடலானார். காயல்பட்டினத்தை அடுத்துப் புதிய புதிய முத்துச் சலாபங்கள் தோன்றின. புதிய கலங்கரை விளக்கமொன்று எழும்பி அதன் கரைக்குப் பல நாட்டு மரக்கலங்களையும் ஈர்த்தது. பல நாட்டு வணிகர்களும் மாலுமிகளும், பொருள்களும் வந்து குவிய நகரம் புதுக் களை பெற்றுத் துலங்கியது.

சில தினங்களாகவே காயல்பட்டினத்தில் புலவர் படையும் தனது முரக்

குட்டிக் கதை

அன்று காத்தவரம்பேட்டை கிராமப் பஞ்சாயத்து சபை முக்கியமான விஷயமொன்றைப் பற்றி ஆலோசிக்கக் கூடியது. என்ன முக்கிய விஷயம் என்றுதானே கேட்கிறீர்கள்?

ஸ்ரீ கே. எம். முன்ஷி அவர்கள் பாரத அரசாங்கத்து உணவு மந்திரியாக இருந்த பொழுது ஆண்டுதோறும் மரம் நடு விழா (வனமஹோத்சவம்) நடத்த வேண்டும் என்று ஒரு திட்டம் வகுத்துச் செயலாக்கினார் அல்லவா?

அந்த ஆண்டே தொடங்கியது அந்த ஊரிலும் வனமஹோத்சவ விழா. ஆண்டு தவறினாலும் தவறலாம். மரம் நடுவிழா மட்டும் காத்தவரம் பேட்டையில் தவறியதேயில்லை. ஆண்டுதோறும் யாராவது பிரமுகர்களைப் பிடித்து மரம் நடு விழா நடத்திப் புகைப் படம் பிடித்துப் பத்திரிகைகளில் வெளியிடச் செய்து மகிழ்வார்கள், அவ்வூர்வாசிகள். இல்லை, இல்லை; அந்த ஊர்ப் பஞ்சாயத்துச் சபை அங்கத்தினர்கள்.

அந்த ஆண்டும் அதே போல் மரம் நடு விழாவுக்கு யாரை வரவழைப்பது என்று ஆலோசிக்கவே, அந்த அவசரக் கூட்டம் கூடியது. எப்படியும் முன்கூட்டியே ஏற்பாடு செய்து முதன்மந்திரியைத் தருவிப்பது என்று தீர்மானித்துச் சபை கலைந்தது.

திட்டமிட்டபடி காரியங்கள் செவ்வனே நடைபெற்றன. விமரிசையான விஸ்தாரமான ஏற்பாடுகள் நடைபெற்றன.

மரம் நடு விழாவன்று மந்திரி வருவதற்கு அரை மணி இருக்கும்பொழுது மரம் நடு விழாவை எங்கு வைத்துக் கொள்ளலாம் என்ற பிரச்னை வந்தது.

அவரவர், அவரவர்களுக்குத் தோன்றிய இடத்தைக் கூறினார்கள். ஆனால் நிரந்தர அங்கத்தினர் என்று கூறுமளவுக்குச் சபை அங்கத்தினராகவே வாழ்ந்து வந்த சுந்தரமூர்த்தி நயினார் ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி முத்தாய்ப்பு வைப்பது போலக் கூறினார்.

''ஆண்டுதோறும் இந்த இடத்தில்தான் மரம் நடுதல் வைத்துக் கொண்டிருக்கிறோம். இதே இடத்தில்தான் குழி தோண்டி மரம் நட்டு வந்திருக்கிறோம். 'ஆகி வந்த இடம்' இது. இந்த இடத்தை மாற்றி வேறு இடத்தில் வைக்க நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன்!''

களை அதிரச் செய்து கொண்டிருந்தது. கயல்விழியின் கூத்தைக் கண்டு அரபு நாட்டு வணிகர் கூட்டமும் வியப்பில் ஆழ்ந்தது. வணிகர்களின் தலைவன் தான் கொண்டு வந்திருந்த குதிரைகளில் தலைசிறந்த ஒன்றைப் பொறுக்கி எடுத்துக் கயல்விழிக்குப் பரிசளித்தான். செல்வம் கொழித்த நகரமாதலால் அங்கே அவர்களுக்குக் கிடைத்த பரிசுகள் ஆதிச்ச தேவரையே திகைக்க வைத்தன. கயல்விழியும் கலைக் குழுவினரும் நெல்லைக்குத் திரும்பினர்; புலவனின் வேலை இன்னும் முடியவில்லை.

மழவச் சக்கரவர்த்திக்குப் புலவனைப் பற்றிய செய்தி எட்டியது. தம்முடைய மாளிகைக்கு வரும்படி அவனுக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். இரவு நேரத்தில் தனியாக வந்து சேர்ந்தான் பைந்தமிழ்க்குமரன். நெடுநேரம் அவர்களிருவரும் தனிமையில் அளவளாவியும் அவரால் அவனை இனம் கண்டு கொள்ள முடியவில்லை.

''மறவப் படைத் தலைவரே, இன்னுமா என்னை உங்களால் அடையாளம் காண முடியவில்லை?'' என்று சரேலென்று கேட்டுவிட்டு அவர் அருகில் சென்று நின்முன். திடுக்கிட்டு அவன் முகத்தை உற்றுப் பார்த்தார் அவர்.

தாடியும் மீசையுமாக இருந்த கோலத்தைத் தன் கரத்தால் மறைத்துக்கொண்டு சிரித்தான். அப்படியும் அவருக்கு விளங்கவில்லை. சரேலென்று தனது இடது கரத்தால் அவரது உடைவாளை உருவி, வலது கரத்தால் ஓங்கி அவருடைய வயிற்றில் குத்தினான்.

அவ்வளவுதான்! அவருடைய உருண்டு திரண்ட சரீரம் ஆனந்த மிகுதியால் இரு மடங்கு பெரிதாகப் பூரித்தது. இரு கரங்களாலும் அவனை உயரே தூக்கிப் பிடித்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடத் தொடங்கி விட்டார். ''இளவரசே!....இளவரசே!''

சொற்கள் தடுமாறின. கண்களில் நீர் வெடித்தது. அப்படியே சிறு குழந்தையை அணைத்து முத்தமிடுவது போல் அவனை நெஞ்சாரத் தழுவி அவனுடைய நெற்றியில் முத்தமிட்டார். மாண்டுபோன அவருடைய மைந்தன் ஒருவன் மீண்டு வந்துவிட்டால் அவர் எவ்வளவு களிப்படைவாரோ அது போல் நூறு மடங்கு களிப்பு அவருக்கு.

பயிற்சிக் களத்தில் முன்பெல்லாம் அவன் அவருடைய வயிற்றில் ஓங்கிக் குத்தி விளையாடுவான். அவருடைய வாளைப் பற்றி இழுத்து அவரைப் போருக்கு அழைப்பான். அந்த விளையாட்டுத்தான் இப்போது அவனை அவருக்குக் காட்டிக் கொடுத்தது.

''பெரிய பாண்டியருக்குத் தெரியுமா?'' என்று மெல்லக் கேட்டார்.

''இப்போது தெரிய வேண்டாம்!''

இரவு முழுவதும் அவர்கள் ஒன்றாக இருந்தார்கள். தம்முடைய கரத்தாலேயே அவனுக்கு உணவு எடுத்துக் கொடுத்து அவன் சாப்பிடுவதை வேடிக்கை பார்த்தார் மழவச் சக்கரவர்த்தி. அவனுடைய மார்பகத்தில் பரவியிருந்த தழும்புகளை விளையாட்டாக எண்ணிப் பார்த்து மகிழ்ந்தார். ''இனி என் கவலை பறந்து விட்டது. இந்த உயிர் உடலில் இருக்கும் காலத்திலேயே பாண்டிய சாம்ராஜ்யம் தலை நிமிர்ந்து நிற்பதைப் பார்த்து விடுவேன்!'' என்று பூரிப்படைந்தார்.


மளமளவென்று தன் திட்டங்களையும், அதில் அவர் நிறைவேற்றவேண்டிய பங்கையும் விவரித்தான் சுந்தர பாண்டியன். அதுவரையிலும் விழுப்பரையரின் உதவியோடு தான் செய்திருப்பதையும், இனி செய்யப் போவதையும் கூறினான். மழவச் சக்கரவர்த்தி அயர்ந்து போனார். சின்னஞ் சிறிய பிள்ளை என்று தாம் எண்ணிக் கொண்டிருந்த பிள்ளைதானா இது?

''எப்படி இவ்வளவு காரியங்களை முடித்தீர்கள்! எப்படித் திட்டம் போட முடிகிறது உங்களால்?''

''ஒரே சொல்லில் சொல்லி விடட்டுமா? துன்பமும் தோல்வியும்தான்! நம்முடைய தோல்வியைத் தொடர்ந்தாற்போல் வந்த துன்பங்களே எனக்கு வழிகாட்டிகள்!'' என்முன் இளைஞன்.

''சுட்ட சங்கு வெண்மை ஒளி வீசுகிறது; புடம் போட்ட பொன் மேலும் மின்னுகிறது. தோல்வியையே வெற்றியின் ஆயுதமாக்கும் கலையைக் கற்றுக் கொண்டுவிட்டீர்கள் நீங்கள். தெய்வம் உங்களுக்குத் துணை நிற்கும்.''

மறுநாட் காலையில் அரபு நாட்டு வணிகர்களின் தலைவனை அப்துல்லுக்கு ஆள் அனுப்பி வரவழைத்தார் மழவச் சக்கரவர்த்தி. அவன் வந்தபோது அவருடைய மாளிகைக் கூடத்தில் புலவன் மட்டுமே உடன் இருந்தான். வணிகனின் நெடிய உருவமும், அவனது விசித்திரமான உடையலங்காரமும் அவனைப் பார்ப்பதற்கே வேடிக்கையாக இருந்தது. குனிந்து தனக்குரிய வகையில் வணக்கம் செலுத்திவிட்டு, மழவச் சக்கரவர்த்தி சுட்டிக் காட்டிய இருக்கையில் அமர்ந்தான். **(தொடரும்)**







வீராங்கனைப் படம் பார்த்தேன். இது ஒரு குடும்பப் படம். ஆம், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பத்மினி, ராகினி, குமாரி, சத்யபால் ஆகியோர் நடித்த படம்! இவர்களுடன் பாலாஜி, பகதூர் ஆகிய மலையாளிகளும் நடித்திருப்பதால் இதை ஒரு மலையாள(வி)ப் படம் என்றும் கூறலாம்.

இது ஒரு ராஜா ராணிக் கதை. எனவே அதைப் பற்றி உங்களுக்கு அக்கறை இருக்காது என நினைக்கிறேன். ஆனால் ஒரு விதிவிலக்கு. வழக்கமாக இக்கதைகள் கதாநாயகனைச் சுற்றி ஓடும். இதன் கதை கதாநாயகியைச் சுற்றுகிறது. கதாநாயகியாக நடிப்பவர் பத்மினி. சமாளித்துவிடுகிறார். ஆனால் பாவம், ஜெமினி கணேசன் என்ன பாவம் செய்தாரோ? இப்படிப் பழி வாங்கியிருக்க வேண்டாம். விழலுக்கு இறைத்த நீராக உள்ளது பாலாஜி, அசோகன், மனோகரின் நடிப்புக்கள்.

தாங்கள் எவ்வளவோ பாடுபட்டு எடுத்த சண்டைக் காட்சிகளை இப்படித் தமிழ்ப் படத்தில் காப்பி அடித்து இழிவுபடுத்துவார்கள் என்று தெரிந்திருந்தால் மேல் நாட்டார் அந்தச் சண்டைக் காட்சிகளைப் படமாக ஆக்கியிருக்க மாட்டார்களோ, என்னவோ ?

மொத்தத்தில், அதற்குள் என்ன மொத்தத்தில் என்று வந்து விட்டீர்கள், பாட்டைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே என்று நீங்கள் கேட்கிறீர்களா, அதைப் பற்றிக் கூற ஒன்றுமே இல்லை.

சமீபத்தில் வந்திருக்கும் ஒன்றிரண்டு நல்ல படங்களுக்கு இந்தப் படம் ஒரு கண் திருஷ்டியாகும்.

எஸ். எஸ். மணி
சபாபதி கோவில் தெரு,
சாலை, திருவனந்தபுரம்.

✲

சில படங்களை நோக்குகையில் இப்படத்தை எவ்வாறு மக்கள் இவ்வளவு ஆர்வத்துடன் பார்க்கிறார்கள் என வியக்கத் தோன்றுகிறது.

''வீராங்கனை''யைப் பார்த்தவுடன் எனது எண்ணங்கள் இவ்வாறுதான் பறந்தன. இப்படத்தின் கதையைப் பொறுத்த மட்டில், அதில் நம்பமுடியாத பல நிகழ்ச்சிகள் இருப்பினும் இது இன்று இந்தியா உள்ள நிலைமையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட கதை என்பதை அறிய வேண்டும். நம் நாட்டின் இரு பக்கமிலும் எதிரிகள் சூழ்ந்துள்ளதையும் அமெரிக்கா அவர்களை எதிர்க்க நேசக் கரம் நீட்டுவதையும், இந்தியாவினும் அதனை ஏற்றுக் கொள்ள இயலாத நிலைமையையுமே, இக்கதையில் சுல்தான், மாரப்பன், மங்களபுரி, அரசி, கலிங்க மன்னன் ஆகிய பாத்திரங்களின் மூலம் காட்டப்படுகிறது. இதில் குறிப்பிட வேண்டிய அம்சம் என்னவெனில், கலிங்க நாட்டானின் துணையோடுதான் அரசி இறுதியில் வெற்றி பெறுகிறாள்.

மங்களபுரியின் அரசியாக வரும் பத்மினி பழைய தோற்றத்துடன் நன்கு நடித்திருந்தாலும், அவரது நடையுடைகளில் அரச கம்பீரத்துக்குப் பதிலாகச் சில இடங்களில் ஆண்மைத் தன்மை நிரம்பியுள்ளது அவ்வளவாக நன்றாயில்லை. பாவம் பெண் நடிகைகள்! கண் வீச்சு போதாது என்று கத்தி வீச்சு வேறு இப்படத்தில். ஆனால் படத்தின் ஆரம்பத்தில் அநீதியை அழித்து அறத்தை நிலை நிறுத்தும் கதை என்பதைக் குறிப்பிட, பத்மினி — ராகினியின் 'கீதை உபதேச நடனம்' சேர்க்கப்பட்டுள்ளது. அபிநயங்களின் மூலம் தேர் ஓட்டுவதும், விற்சண்டையிடுவதும், மிக நன்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. பாராட்ட வேண்டிய பகுதி.

கலிங்கத்தின் இளவலாக வரும் ஜெமினி கணேசன் வாள் ஏந்தித் திறமையாக நடித்துள்ளார். இவர் ஏற்ற பாத்திரத்துக்கு அதிக வேலையில்லை என்றாலும் குறைகூற இடமின்றி நடித்துள்ளார். மங்களபுரியின் இராணுவ தளபதியாக வரும் அசோகன், மந்திரி குமாரியாக வரும் ராகினி, மாரப்ப பூபதியாக வரும் மனோகர், சத்யபால் மற்றும் பாலாஜி ஆகியோர் நடித்துள்ளனர். இவர்களுள் ராகினியின் நடிப்பு மெருகிட்டுக் காணப்படுகிறது.

ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு ஆகியவற்றில் குறிப்பிடத் தக்க அம்சம் ஒன்றும் இல்லை. இசை: வேதா. ஒன்றும் நினைவில் தங்கவில்லை.

மொத்தத்தில் சண்டைப் பிரியர்களும், கலாரசிகர்களும், விமர்சகர்களும் ஒரு முறை பார்க்க வேண்டிய படம்.

பா. இராகவேந்திரன்
12—32ஜி. பாரதி ரோடு,
சுப்பிரமணிய புரம், மதுரை — 11

ராஜயோகம்.2

கதை: தம்பு ✳ சித்திரம்: செல்லம்




ஓடி வந்த வாலிபர்கள் பெண்ணின் சமீபம் வந்து விடுகிறார்கள். அவர்கள் பையை வைத்திருக்கும் வாலிபனைத் திட்டுகிறார்கள். அவன் திகைத்துப் போய் நிற்கிறான்.
'பிக் பாக்கெட்'
கேடி.
தவறிப்போய் என் பையை எடுத்து வந்துவிட்டீர்கள். அதில் வெட்டுச் சாவி இருக்கிறது. இந்த ரயில் தவறிவிட்டால் அடுத்த ரயிலில் போகுல் போகிறது. அதற்காக இப்படி கூப்பிடுகிறது காதில் விழாமல் வேகமாக ஓடுவார்கள்!
எதற்காக எங்களைத் துரத்திக் கொண்டு வருகிறீர்கள்? மரியாதையாகப் போய்விடுகிறீர்களா? போலீஸைக் கூப்பிடட்டுமா?
மன்னிக்கணும். நாங்கள் தவறாக எண்ணிவிட்டோம்! நாங்கள் போய்விடுகிறோம்.
அந்தப் பார்க்கிற்குப் போகலாம் வாருங்கள்.
தாங்கள் என்னைக் காப்பாற்றினதற்கு வந்தனம். இந்தப் பை என் கையில் எப்படி வந்தது?
அது என் கையிலிருந்து பாய்ந்து வந்து உங்கள் கையில் மாட்டிக் கொண்டது.


தாங்கள் என்னைப் பரிகசிக்கிறீர்கள். சத்தியமாகச் சொல்கிறேன். அதைதான் திருடவில்லை. அது எப்படியோ...
உண்மையிலேயே அதில் என் வீட்டுச் சாவி இருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளட்டுமா?
அட கடவுளே! என்னை நீங்களுமா 'பிக்பாக்கெட்' என்று நினைக்கிறீர்கள்? ஹா... வலி தாங்க முடியவில்லையே?
அடடா! அதை மறந்து விட்டேனே? அதற்காகத் தானே நான் தங்கள் பின்னால் ஓடி வந்தது! இதற்கு ஏதாவது மருந்து போடணும். பெண்டராவது...
எனக்கு ஒன்றுமில்லை. என்னை விட்டுவிடுங்கள். தங்களுக்கு ஒரு கோடி வந்தனங்கள்.
நன்றாயிருக்கிறது. நெற்றி புடைத்திருக்கிறது. தங்களுக்கு முதல் வைத்திய உதவி செய்தாக வேண்டும்! நான் ஒரு 'கேர்ல் கைய்ட்' சமூக சேவகி, தாதிகூட. தாங்கள் என் உதவியைப் பெற்றுத்தான் ஆக வேண்டும். போகவிடமாட்டேன்.
தொடரும்



வித்யாவின் பரதவித்யை

கலைக்காகவே பரத நாட்டியம் பயில வேண்டும் என்ற உண்மையான ஆர்வம்; சங்கீதத்தைக் குல தனமாகப் பெற்றுள்ள குடும்பத்தின் பின்னணி; பரத நாட்டியத்தை அதன் லட்சியம் குன்றாது தகுந்த சிஷ்யைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்ட ஆசான்; இம்மூன்றும் ஒருங்கே இணைந்தால் எத்தகைய பரத நாட்டியம் உருப் பெறும் என்பதற்கு இம்மாதம் 7-ம் தேதியன்று தியாகராயநகர் கிருஷ்ணகான சபா மேடையில் அரங்கேறிய குமாரி வித்யா மூர்த்தியின் பரத நாட்டியம் ஓர் உதாரணம்.

குமாரி வித்யாவின் தாயார் கர்நாடக இசை உலகில் பிரசித்திபெற்று விளங்கும் ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரி; தந்தை விகடம் ஸ்ரீ ஆர். கே. மூர்த்தி நல்ல கலா ரஸிகர். வித்யாவின் கலை வளர்ச்சிக்கு இதைக் காட்டிலும் உயர்வான சூழ்நிலை கிடைப்பது அரிது.

வித்யா, பள்ளியில் படிக்கும் சிறுமிதான். எனினும், நாட்டியத்தில் ஏற்பட்ட பற்று பல ஆண்டுகளுக்கு முன்னமே தோன்றியது. ஒரு சமயம் பேராசிரியர் கல்கி அவர்கள் ஸ்ரீமதி வஸந்தகுமாரியைக் காண்பதற்காக அவர் வீட்டுக்குச் சென்றிருந்தார். முன்கூடத்தில் ரேடியோவைத் திருப்பி விட்டு அதனின்று வெளிப்பட்ட ஒரு நாடோடிப் பாட்டுக்குச் சரியாகக் குதித்துக் கொண்டிருந்தாளாம், குழந்தை வித்யா. அவளுக்கு அப்போது நான்கு வயதுகூட நிரம்பவில்லை. இதை ரசித்துக் கொண்டே சுமார் பதினைந்து நிமிடங்கள் தாம் வந்த காரியத்தைப் பற்றிப் பேசாமல் அங்கேயே தங்கி விட்டார் பேராசிரியர். பின்னர் ஹாலுக்கு வந்த மூர்த்தி தம்பதிகளிடம் குழந்தை வித்யாவின் ஆர்வத்தைப் பற்றிச் சிலாகித்துப் பேசி விட்டு அதை வளர்க்க முயற்சி செய்யும்படி சிபாரிசும் செய்தாராம்.

இதை நிறைவேற்றி வைப்பதற்கு வாய்ப்பாக அமைந்தவர் பரத நாட்டிய வித்துவான் ஸ்ரீ கே. என். தண்டாயுதபாணி பிள்ளை. உயர்ந்த மரபில் தோன்றியவர். கலையின் தரத்தை இம்மியளவும் குன்றாமல் பாதுகாப்பவர். நவீன அம்சங்களுடன் வித்வத் அம்சங்களையும் தமது போதனைகளில் புகுத்திச் சிறப்பிக்கச் செய்பவர்.

குமாரி வித்யாவின் நடனத்தில் சில அசாதாரண அம்சங்கள் பளிச்சிட்டுப் பிரகாசித்தன. லயத்தைப் பிரதானமாகக் கொண்ட பரத நாட்டியத்தில், ''அதிசுத்தம்'' என்று சொல்லும் அளவுக்கு நெருடலான லய ஜதி விந்யாசங்களும், தீர்மானங்களும் அமைந்திருந்தன. அபிநய பாவங்களுக்கு வழக்கமாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஜாவளி, பதங்களுக்குப் பதில் தியாகராஜருடைய பஞ்சரத்ன கீர்த்தனங்களில் ஒன்றான ''ஜகதானந்தகாரகா''வையும் தீட்சிதர் கிருதியான ''மீனாட்சி மேமுதம்'' என்ற கீர்த்தனையையும் தேர்ந்தெடுத்ததைப் பாராட்ட வேண்டும். இவ்விரண்டு உருப்படிகளுக்கும் அபிநய பாவங்களும் அடவுகளும் ரஞ்சகமாகவும் மனத்துக்குச் சாந்தி அளிப்பனவாயும் இருந்தன. இதற்கு நாட்டியமாடி வெற்றிகரமாக நிர்வகித்து 'சபாஷ்' பெற்றாள் என்பதிலிருந்தே குமாரி வித்யாவின் பரத நாட்டியத்தின் சிறப்பு விளங்கும். ரசிகர்களுடைய கருத்துக்களையும் ஆசிகளையும் சொல்லில் வடித்துப் பாராட்டினர் முதல் அமைச்சர் கனம் பக்தவத்ஸலம், பிரதம நீதிபதி ராமச்சந்திரய்யர், சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாச அய்யர், ஆலத்தூர் வேங்கடேச அய்யர் முதலியவர்கள்.

குமாரி வித்யாவின் பரத நாட்டியம் வருங்காலத்தில் வளர்பிறை போல் விருத்தியடைந்து நிறைமதிப் பொலிவுடன் பரத நாட்டிய உலகில் பிரகாசிக்கும் என்று எதிர்பார்க்கலாம். — எம். எஸ். சிவஸ்வாமி

தொழில் நினைவுகள்



சிட்டடக் கலைக்குச் சம்பந்தப்படாத ஆனால் பல கட்டடங்களையும் பாலங்களையும் உப கதாநாயகர்களாகக் கொண்ட அமெரிக்க நகைச்சுவைத் துணுக்கு ஒன்று உண்டு.

ஆங்கிலேய யாத்திரிகன் ஒருவன் முதல் தடவையாக அமெரிக்காவுக்குப்



போய்ச் சேர்ந்தான். நியூயார்க் நகரைச் சுற்றிப் பார்க்க டாக்ஸி ஒன்றில் ஏறி அமர்ந்தான். டாக்ஸி ஓட்டிக்கு, வழி காட்டியாக விளக்கம் கொடுக்கும் பணியும் சேர்ந்தது.

டாக்ஸி முதலில் நியூயார்க் நகர முனிசிபல் கட்டிடத்தின் வாசல் வழியாகப் போயிற்று. அமெரிக்க டிரைவர் பெருமையுடன், ''இந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க நூற்றிமுப்பத்திஇரண்டே நாட்கள்தான் ஆயின'' என்றான்.

ஆங்கிலேய யாத்திரிகன் அலட்சியமாகச் சூள்கொட்டினான். ''இது என்ன பிரமாதம்? எங்கள் லண்டன் சிட்டி ஹாலை தொண்ணூறே நாட்களில் எழுப்பினார்கள்'' என்றான்.

அடுத்தாற்போல டாக்ஸி 'வில்லியம்ஸ் பார்க்' பாலத்தின் வழியாகப் போயிற்று. பாலத்தின் அமைப்பை விவரித்த கார் ஓட்டி, ''இந்த மாபெரும் பாலத்தை நான்கே மாதங்களில் கட்டி விட்டார்களாக்கும்'' என்றான்.

இந்தத் தடவை பிரயாணி பெரிதாகக் கொட்டாவி விட்டான். ''இது என்ன பிரமாத சாதனை! உலகம் புகழும் எங்கள் 'வாட்டர்லூ' பால வேலை இரண்டரை மாதங்களில் நடந்தது'' என்றான். டாக்ஸி ஓட்டி மரியாதைக்காரன். உடனடியாகப் பதில் ஏதும் சொல்லவில்லை.

உலகத்திலேயே உயரமானதும் நூற்றுக்கணக்கான தளங்களைக் கொண்டதுமான 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ்' இருக்கும் பகுதி வழியாக டாக்ஸி ஓடியது. யாத்திரிகப் பிரயாணி பிரமித்துப் போனான். தானாக டிரைவரைக் கூப்பிட்டு, ''இக் கட்டிடத்தை எத்தனை நாட்களில் கட்டினார்கள்?'' என்று கேட்டான் வியப்புடன்.

டாக்ஸி ஓட்டி சர்வ அலட்சியத்துடன் அந்த மாபெரும் கட்டிடத்தை ஏற இறங்கப் பார்த்தான். ''நேற்று சாயங்காலம் இந்தப் பக்கமாக வந்தபோது இந்த இடம் பொட்டலாகத்தான் இருந்தது. இன்றைக்குக் காலையில்தான் இதைக் கட்டி முடித்திருக்க வேண்டும்'' என்றான் நிதானமாக. யாத்திரிகன் தன் அவசரக்குடுக்கைத்தனத்துக்கு நல்ல பாடம் கற்றுக்கொண்டதை உணர்ந்து டாக்ஸி டிரைவரின் சாமர்த்தியப் பழிவாங்கலைச் சாந்தமாகவே ரசித்தான்.

பெரிய கட்டிடங்களைக் குறுகிய காலத்தில் திட்டத்தின்படி கட்டி முடிப்பது என்பது சாதாரண விஷயமில்லை. கட்டி முடித்தவர்களும் கண்டு வியப்பவர்களும் உரிமையுடன் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய விஷயம்தாம்.

பம்பாய் நகரிலுள்ள சர்ச்கேட் ரயில்வே நிலையம் ஓர் ஏழடுக்கு மாடிக் கட்டிடம். நாளொன்றுக்கு ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட பிரயாணிகளின் உபயோகத்திலிருக்கும் மின்சார ரயில் வண்டி நிலையம். ஏழே மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது அது என்ற செய்தியில் வியப்பில்லை. ஆனால் பிரதி வருடம் ஜூன் மாதம் பத்தாம் தேதி கண்டிப்பாகத் தொடங்கும் பருவ மழைக்கு

முன்னதாகக் கட்டிடம் முடிந்து உபயோகத்துக்கு வந்து விடும் என்ற உறுதியுடன் வேலையை ஆரம்பித்துப் பூர்த்தி செய்து, ஜூன் மாதம் ஒன்பதாம் தேதியன்று திறப்பு விழா நடத்த வழி செய்து கொடுத்தாரே ஒரு பொறியியல் நிபுணர்! அவருடைய திறமையும் வெற்றியும் வியப்புக்கு உரியவைதானே! அவரை கௌரவிக்கும் முறையில் அந்த ஆண்டில் மாத்திரம் பருவ மழை மூன்று நாட்கள் காத்திருந்து பதின்மூன்றாம் தேதியன்று வருகைதந்ததாம்!



திரு எம். கணபதி

1956ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ந் தேதி புது சர்ச்கேட் ரயில் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டிய அந்த நாள் பம்பாய் ராஜ்ய முதன்மந்திரி மொரார்ஜி தேசாய் அவர்கள் தணிந்த குரலில் "ஏழு மாதங்களில் இந்தப் பெரிய திட்டத்தைப் பூர்த்தி செய்து விடுவேன் என்று வேறு யாரும் சொல்லியிருந்தால் நான் நிச்சயம் நம்பியிருக்க மாட்டேன். பைத்தியக்காரத்தனம் என்றுகூடச் சொல்லி விருப்பேன். ஆனால் திரு கணபதி அவர்கள் சொல்வதால் நம்பவேண்டியிருக்கிறது" என்றாராம். அவர் நம்பிக்கை பொய்யாகவில்லை. அந்த நாட்களில் மேற்கத்திய ரயில்வேயின் ஜெனரல் மானேஜராகப் பணியாற்றிய பொறியியல் நிபுணர் திரு எம். கணபதி, தாம் ஆரம்பித்த சர்ச்கேட் ரயில் நிலைய நிர்மாண வேலையைக் குறிப்பிட்ட காலத்தில் முடிக்கச் செய்து 1957ம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்பதாம் தேதியன்று அந்த நாள் மத்திய ரயில்வே மந்திரி திரு ஜகஜ்ஜீவன்ராமைக் கொண்டு ஜாம் ஜாம் என்று திறப்பு விழா நடத்தி விட்டார்!

பாரதத்தில் பல புகழ்பெற்ற பாலங்களையும் கட்டிடங்களையும் எழுப்புவதில் சம்பந்தப்பட்டிருந்த திரு எம். கணபதி அவர்களின் அந்த நாளையத் தொழில் நினைவுகளையும் அனுபவங்களையும் கல்கி நேயர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமைகொள்கிறோம். நான்கு வருடங்களுக்கு முன் சர்க்கார் விதிகளின்படி ஓய்வு பெற்றவராக இருந்தும், இன்றுகூட, நிர்வாக வேலைகள் நடக்கும் இடங்களில் நின்று சக ஊழியர்களை ஊக்குவிக்கும் வேகத்தையும் துறுதுறுப்பையும் அவரிடம் காண முடிகிறது. அவருடைய உடல் ஓய்வு பெற்றிருக்கலாம். ஆனால் அவர் உள்ளம் சூர்க்கேலாவையும், சித்தரஞ்சனையும், காண்டலாவையும், கங்கைப் பாலத்தையும் சுற்றிச் சுற்றி வருகின்றது.

ஆம்! அவைகள் எல்லாமே அவர் கைவண்ணம் பட்டவைகள் தானே!

பள்ளி நாட்களிலேயே திரு கணபதி அவர்களுக்குத் தாம் 'ஒரு பொறியியல் விற்பன்னராக வர வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. ஆனாலும் எப். ஏ. பரீட்சை தேறியவுடன் ரசாயன ஹானர்ஸ் வகுப்பில் சேருவதற்காக அனுப்பப்பட்டார். அவர் செய்த நல்வினையோ, அல்லது எதிர்காலம் செய்த அதிருஷ்டமோ அவருக்கு அந்த வகுப்பில் இடம் கிடைக்கவில்லை. அப்புறம்தான் அவர் கிண்டி பொறியியல் கல்லூரியில் போய்ச் சேர்ந்தார். அவர் எடுத்துக் கொண்ட பாடங்கள் 'மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல்' பிரிவுகளைச் சேர்ந்தவை. ஆனால் பிற்காலத்தில் அவருடைய திறமையை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொண்டது 'சிவில்' பிரிவுதான்.

நல்ல மார்க்குகள் வாங்கி 'இஞ்சினீயரிங்' பரீட்சையில் அவர் தேறிப் பட்டம் பெற்ற வேளையில் பைக்காரா மின்சார உற்பத்தி ஸ்தாபனத்தை உருவாக்க நாட்டில் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார்கள். அந்தத் திட்



டத்தில் பங்கு எடுத்துக் கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்ற எண்ணத்தில் பம்பாயிலுள்ள 'டாட்டா ஹைட்ரோ எலக்டிரிக் பிராஜெக்டி'ல் உயர் பயிற்சி பெறப் போய்ச் சேர்ந்தார். பயிற்சிக் காலம் முடிந்தது. ஆனால் பைக்காரா திட்டம் முன்னேறவில்லை. ஆகவே அப்போது தொடங்கப்பட்டிருந்த மேட்டூர் — அணைத் திட்டத்தில் ஒரு 'சிவில்' மேற்பார்வையாளராகப் பணியேற்றுக் கொள்ள வந்தார்.

அந்தக் காலத்தில்தான் ரயில்வே நிர்வாகம் பொறியியல் பட்டதாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்திய போட்டிப் பரீட்சையில் பங்கு கொண்டு வெற்றி பெற்றார். மேட்டூர் அணை விடை கொடுத்தது.

ரயில்வே நிர்வாகத்தில் அவர் பணி 'சிவில்' துறையில்தான் தேவைப்பட்டது. பாதைகள் பராமரிப்பிலும் ஸ்டேஷன் கட்டிடங்கள் எழுப்புவதிலும் அவர் கவனம் செலுத்தி வந்தார்.

ஆரம்பகால ரயில்வே இலாகாப் பயிற்சியில் அவர் லக்னோ — கல்தான்பூர் ரயில்வேயிலும், கான்பூர் — சோன் பால அமைப்பு வேலையிலும் சம்பந்தப்பட்டிருந்தார். அந்த அனுபவத்தின் அடிப்படையில்தான் கல்கத்தா நட்சினேசுவரத்துக்கு அருகில் ஹூக்ளி நதியின் மேல் கட்ட ஆரம்பிக்கப்பட்டிருந்த ரயில் ரஸ்தா பால அமைப்பு வேலைக்குப் போய்ச் சேர்ந்தார். இந்த அனுபவம் பிறகு கங்கை நதியின் மேல் அமைக்கப்பட்ட மாபெரும் மாளவியா பாலத்தை அமைக்க வெகுவாக உதவியது.

''ஓர் இளம் எஞ்சினியருக்குத் தேவையான மன உறுதியும் உற்சாகமும் எனக்கு ஹூக்ளிக் கரையில்தான் கிடைத்தன. ஒரு திட்டத்திலிருந்து மற்றொரு பெரிய திட்டத்துக்கு மாறி மாறிப் போய் அயராமல் உழைக்கும் அனுபவத்துக்கு அஸ்திவாரம் எனக்கு இங்குதான் அமைந்தது'' என்றார் திரு கணபதி.

இந்தப் பால வேலையைத் தொடர்ந்து கிழக்கிந்திய ரயில்வேயில் உள்ள அத்தனை பாலங்களையும் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அப்புறம் கங்கைப் பால வேலையில் சேர்ந்தார்.

இரண்டாவது உலக யுத்தம் நடந்த காலம். அது கங்கைப் பால வேலையிலும் கையை வைத்தது. சிறிது கால இடைவெளிக்குப் பிறகு 1945ல் மீண்டும் அந்த வேலை தொடங்கியது.

திரு கணபதிக்கு மேலதிகாரியாகப் பிரதான பொறுப்பேற்றிருந்தவர் ஓர் ஐரோப்பியர். அவர் அடிக்கடி கணபதியின் வேலையில் குறுக்கிட்டார். இவருக்குப் பொறுமை கரைந்து விட்டது. ''ஐயா! என்னை விட்டு விடுங்கள்! உமக்கும் நமக்கும் இனி கட்டி வராது! நான் என்னுடைய வழக்கமான பாதை மேற்பார்வை வேலைக்குத் திரும்பி விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டார். அந்த ஐரோப்பியர் திறமையின் மதிப்பை உணர்ந்தவர். கணபதியை விட்டுவிடவில்லை. தமது குறுக்கீட்டை விட்டுவிட்டார். அது மாத்திரமில்லை. தாம் ஓய்வில் போகும் போது தமது பொறுப்பைத் திரு கணபதி தான் ஏற்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிவிட்டார். இதனால் மற்றொரு 'சீனியர்' ஐரோப்பியப் பொறியியல் நிபுணர் மனம் குமுறியதையும் அவர் பொருட்படுத்தவில்லை.

தலா முந்நூற்றி ஐம்பது அடி நீளமுள்ள ஏழு வளைவுகளும், தலா நூற்றிப் பத்து அடி நீளமுள்ள ஒன்பது வளைவுகளும் உள்ள அந்த ஒற்றை ரயில் பாதை 'டஃபின்' பாலம் குறுகிய காலத்தில் இரட்டை வழிப் பாதையுடன் கூடிய ரஸ்தாப் போக்குவரத்து 'மாளவியா' பாலமாக மாறி, 1947ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதியன்று காலம் சென்ற பண்டிட் கோவிந்த வல்லப பந்த் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பாலத்தின் உருவம் மாறியது. பெயர் மாறியது. அகலம் கூடியது. உபயோகம் பன்மடங்காகியது. ஆனாலும் வழக்கமாக அந்தப் பழைய பாலத்தில் தினசரி இருபக்கத்திலிருந்தும் ஓடிக்கொண்டிருந்த ஐம்பத்திரண்டு ரயில் தொடர்களில் ஒன்று கூட ஒரு நாளும் பால வேலை நடக்கிறதே என்று அநுதாபப்பட்டு நின்றுவிடவில்லை!

இஞ்சின்கள் வண்டித் தொடரை இழுத்துக்கொண்டு ஓடும் பாலத்தை விஸ்தரித்த சூட்டோடு இஞ்ஜின்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை நிர்மாணிக்கும் பொறுப்பு வந்து சேரவே கணபதி சித்தரஞ்சனுக்குச் சென்றார்.

'இந்தியாவிலாவது ரயில் எஞ்சின் தயாரிப்பதாவது' என்று அலட்சியமாகப் பல நிபுணர்கள் கூறிவந்த காலம் அது. 1948ல் துணிவுடன் ஆரம்பிக்கப்பட்ட அந்தச் சித்தரஞ்சன் திட்டம் வெற்றிச் சின்னமாக மாறியது. மூன்று ஆண்டு காலத்துக்குள்ளாகவே முதல் இஞ்ஜின் ஓட ஆரம்பித்தது. இன்று அங்கே இரண்டு தினங்களுக்கு ஓர் இஞ்சின் வீதம் தயாரிக்கிறார்கள். வளர்ந்து வரும் நாட்டின் தேவைகளை அநுசரித்து மின்சார ரயில் போக்குவரத்துக்கான இஞ்சின்களையும் தயாரிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்.

சித்தரஞ்சன் இஞ்சின் தொழிற்சாலையைச் சிறப்புடன் முடித்த வேகத்திலேயே சென்னை ரயில் பெட்டிகள் தயாரிக்கும் 'இன்டெக்ரல் கோச் பாக்டரி'யை உருவாக்கும் பதினேழு கோடி ரூபாய்த் திட்ட வேலை திரு கணபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. இஞ்சினிலிருந்து இறங்கிப் பெட்டிக்கு வந்தார்; கோச் பாக்டரி கோபுரமாக உயரத் தொடங்கியது. அப்போதுதான் அந்த நாள் மத்திய ரயில்வே மந்திரியாக இருந்த லால்பகாதூர் சாஸ்திரியிடமிருந்து அவசர அழைப்பு வந்தது.

1949ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டு அப்படியே நான்கு ஆண்டுகளாக நின்றுவிட்ட காண்ட்லா துறைமுகத் திட்ட வேலையைப் பூர்த்தி செய்ய அழைக்கப்பட்டார் திரு கணபதி. அது ஒரு பதினைந்து கோடி ரூபாய்த் திட்டம். 1953ல் கணபதி கட்ச் பகுதியில் உள்ள காண்ட்லாவுக்கு விரைந்தார். இரண்டே ஆண்டுகளில் துறைமுகம் பூர்த்தியடைந்துவிட்டது!

1955ம் ஆண்டு செப்டம்பரில் காண்ட்லா வேலைக்குக் கரம் கூப்பிவிட்டு மேற்கத்திய ரயில்வேயின் ஜெனரல் மானேஜராகப்

பம்பாய் வந்து சேர்ந்தார். அப்போது அவர் செய்த சாதனைதான் புதிய ஏழு மாத சர்ச்கேட் ரயில்வே நிலையம்! இந்தப் பதவியில் அவர் இருந்தபோது ஏறத்தாழ ஐம்பது கோடி ரூபாய் வரையிலான புதிய திட்டங்களை மேற்கத்தி ரயில்வேயில் அமுலாக்கி யிருக்கிறார். அவைகளில் ஒன்றுதான் சர்ச் கேட் ஸ்டேஷன்.

1958ம் ஆண்டு ஜூன் மாதம் மீண்டும் அவருக்கு இடப் பெயர்ச்சி. காரணம் ரூர்கேலா எஃகுத் தொழிற்சாலை எதிர்பார்த்த வேகத்தில் வளரவில்லை. வேகத்திற்கும் திரு கணபதிக்கும் நிறையத் தொடர்பு உண்டு என்ற காரணத்தால் அரசாங்கம் அவரை ரூர்கேலாவுக்கு அழைத்தது.

எண்ணூற்றுக்கும் மேலான இஞ்சினியர்கள் ஆயிரத்து அறுநூறு ஜெர்மானியத் தொழில் நிபுணர்கள், ஐம்பதினாயிரத்துக்கு மேலான தொழிலாளர்கள் அனைவரும் திரு கணபதிக்குத் துணையாக நின்று உதவினார்கள். காண்போர் பிரமிக்கும் வகையில் ரூர்கேலா எஃகு உற்பத்தி ஸ்தாபனமும் ரூர்கேலா நகரமும் குறிப்பிட்ட காலத்தில் எழுந்தன. மனத்தில் உன்னதமான இருப்தி நிலவும் வேளையில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறும் வாய்ப்பும் கிட்டியது.

திரு கணபதி அவர்களைப் பேட்டி கண்ட போது கீழ்க்கண்ட விஷயங்களையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

கே: தாங்கள் கல்லூரியில், மெக்கானிக்கல், எலக்டிரிக்கல் இஞ்சினீயரிங் பாடங்களைத் தானே விரும்பிப் படித்தீர்கள். ஆனால் பிற்காலத்தில் முழுக்க முழுக்க சிவில் துறையில் தானே கவனம் செலுத்தி யிருக்கிறீர்கள்?

பதில்: பெரிய அளவான வேலைகளில் அப்படி வரையறை பார்க்க முடியாது. அந்த இரண்டு பிரிவுப் பயிற்சிகளும் எனக்கு வெகுவாக உதவின.

கே: தாங்கள் கலந்து கொண்டுபணி செய்த பல நிர்மாண வேலைகளில் தங்களுக்கு மிகவும் பிடித்தது எது?

பதில்: அதெப்படிக் குறிப்பாகச் சொல்ல முடியும்? காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு. எல்லாக் குஞ்சுகளுமே பொன் குஞ்சுகள்தாம்.

கே: தாங்கள் பணியில் ஈடுபட்டிருந்த போது தங்களுக்குத் திகைப்பை ஊட்டும் சம்பவங்கள் ஏதாவது நிகழ்ந்ததுண்டா?

பதில்: ஒரு சம்பவம் நன்கு நினைவிலிருக்கிறது. ஹரித்வாரத்தில் நடந்த அர்த்த கும்பமேளாவுக்குப் பல லட்சக்கணக்கான யாத்திரீகர்கள் கூடுவார்கள். அந்த விழாக் கூட்டத்தினர் தேவையைச் சமாளிக்கப் பெரிய குடி தண்ணீர் டாங்க் நிர்மாணிக்க வேண்டியிருந்தது. தேவையான பெரிய 'டாங்க்' ஒன்று ராணுவ முகாமிலிருந்து வந்தது. அதை உயரே ஏற்றிப் பொருத்த வேண்டியது தான் பாக்கி. அன்று மாலை நான் அவசரமாக டில்லி வரை போய் மறுநாளைக்கு மறு நாட் காலை திரும்ப வேண்டியிருந்தது. என் உதவியாளர்களிடம் மறுநாள் அதைப் பொருத்தி அதில் தண்ணீர் நிரப்பி உபயோகத்தில் கொண்டு வரும்படி சொல்லி விட்டுக் கிளம்பினேன். மூன்றும் நாட் காலை நான் வந்து கொண்டிருக்கும் ரயில் ஹரித்துவாரை நெருங்கியபோது ஆவலுடன் முதல் நாள் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் தண்ணீர் 'டாங்கை'ப் பார்க்கத் தலையை ஜன்னலுக்கு வெளியே நீட்டினேன். ஆஹா! என்ன ஏமாற்றம். உயர்ந்த இரும்புக் கம்பங்கள் மேல் கோரமாக வளைந்து நெளிந்து உருக்குலைந்த டாங்கு உட்கார்ந்திருந்தது. அப்புறம் விசாரித்ததில் அந்தப் பழைய, படை முகாம் டாங்க் தண்ணீர் அழுத்தத்தைத் தாங்க முடியாமல் அப்படி உருக்குலைந்து போயிற்று என்று தெரிய வந்தது. உடனே வேறு 'டாங்கி'ற்கு ஏற்பாடு செய்தோம்.

கேள்வி: புராதனக் கட்டிடக் கலைக்கும், இன்றைய நாகரிகக் கட்டிடக் கலைக்கும் இருக்கும் பேதங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: முன்பு இடம் நிறைய இருந்தது. அவகாசம் நிறைய இருந்தது. உழைப்பு சுலபமாகக் கிடைத்தது. ஒவ்வொரு தூணுக்கும் முகப்புக்கும் பட்டை தீட்டி மெருகு ஏற்றினார்கள். இப்போது அவசர யுகம். இடப் பஞ்சம். பக்கவாட்டில் போவதைவிட மேலே வளரத்தான் முடியும். தாஜ்மகாலுக்கும் சர்ச் கேட் ரயில் நிலையக் கட்டிடத்துக்கும் இதுதான் வித்தியாசம்.

கேள்வி: ஓய்வு பெற்ற நீங்கள் எப்படிப் பொழுது போக்குகிறீர்கள்?

பதில்: பொழுது போகவில்லையே என்று நினைப்பவர்களுக்குத்தான் அந்தக் கவலை. நான் நிறையப் புத்தகங்கள் படிக்கிறேன். அவகாசம் கிடைத்தபோது தியானத்தில் ஆழ்கிறேன்! ஏன்? ஆசனப் பயிற்சிகளைக்கூட இன்னும் கடைப்பிடிக்கிறேன்! நேரம்போதவில்லையே என்பதுதான் என் குறை.



பாவம், சர்வாதிகாரி!

ஸ்பெயின் சர்வாதிகாரி ஒருவன் மரணப் படுக்கையில் கிடந்தபோது, இறக்கும் போதாவது கடவுளின் பெயரைக் கூறி வணங்கட்டும் என்பதற்காக ஒரு பாதிரியார் வரவழைக்கப்பட்டார். அவரும் வந்து சில மந்திரங்களைச் சொன்னார். அதன்பின் இப்போதாவது சர்வாதிகாரி தம் பகைவர்களை மன்னித்தால், அவர் பாவங்களைக் கர்த்தர் மன்னிப்பார் என்றெண்ணிப் பாதிரியார் ''பகைவர்களை மன்னித்து விடுங்கள்'' என்று கூறினார். சர்வாதிகாரி, ''நானும் அதையே தான் நினைத்தேன். ஆனால் என் பகைவர்கள் யாரும் இப்போது இல்லையே. எல்லோரையும் கட்டுத் தீர்த்து விட்டேனே. என்ன செய்வது?'' என்றார். பாதிரியாருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை பாவம்!

பாமினிப் பாவை



கௌசிகன்

9. பெண் புலியும் பேடைப் புறவும்

விஜய நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. வெற்றியோடு திரும்பிய வீரர்களை வரவேற்க வீடுகளையும் வீதிகளையும் விதம் விதமாக அலங்கரித்திருந்தார்கள் விஜயநகரத்து மக்கள். மகர தோரணங்கள் கட்டி, மங்கல வாத்தியங்களை முழக்கி, மலர்களைத் தூவி மகிழ்ச்சி பூத்த முகத்தோடு வழி நெடுக நின்று வரவேற்றார்கள். குலை தள்ளிய வாழை மரங்களையும், கொத்துக் கொத்தாகக் கமுகு, பாக்கு, ஈச்சை ஆகியவைகளையும் செவ்விளநீர்க் குலைகளையும் கொண்டு தங்கள் கலைத் திறன் துலங்க நகரின் பிரதான வாயில்களையும், வீதியின் திருப்பங்களையும் வெற்றி விழா மண்டபங்களாக்கியிருந்தார்கள். இந்த மண்டபங்களிலும், வளைவுகளிலும் மங்கல ஆரத்தி ஏந்தித் தோகை மயிலையொத்த சாயல் கொண்ட கோதையர் வாகை சூடி வரும் வீரர்களை வாழ்த்தி வரவேற்கவந்து கூடியிருந்தார்கள்.

விஜய நகரம் தன் பெயருக்கேற்ப வெற்றி நகரமாகவே விளங்கியது.

மக்கள் மகிழ்ச்சி பொங்க அளித்த வரவேற்பை ஏற்றுக் கொண்டு அரண்மனைக்கு வந்த அர வீட்டு வீரர்களான ராமராயரும் வேங்கடாத்திரியும் அந்தப்புரத்துக்குச் செல்லவில்லை. போர்க்களத்திலிருந்து திரும்பிய அலுப்பைப் போக்கிக் கொள்ளப் பஞ்சணை மெத்தையை நாடிப் போகவில்லை. துங்கபத்திரையின் தூய நீரிலே ஸ்நானம் செய்து உடை மாற்றிக் கொண்டு விரூபாட்சரின் ஆலயத்துக்குக் கிளம்பினார்கள். விஜய நகர சாம்ராஜ்யம் விரூபாட்சரின் உடைமை. ஆண்டவனின் பிரதிநிதிகளாகவே அரசர்கள் அதை நிர்வகித்து வந்தார்கள். சாம்ராஜ்யத்தை நிறுவிய வித்யாரண்யரின் ஏற்பாடு அது. அப்படியே அதன் பின் வந்தவர்கள் தாம் ஆண்டவனின் பிரதிநிதி என்ற நினைப்பு மாறாமல் ஆண்டு வந்தார்கள். பகையரசன் மீது படையெடுத்தோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ நாட்டை விட்டு வெளியே சென்று திரும்பினால், மன்னர் மன்னவரான மகேசுவரனிடம் முதலில் தங்கள் வருகையைத் தெரிவித்து வணங்கி, மேற்கொண்டு சென்ற காரியத்தின் வெற்றி தோல்விகளை விளக்கி, அதற்கு ஆண்டவனின் அங்கீகாரத்தைப் பெற்றதாகப் பாவித்த பிறகே வேறு காரியங்களைக் கவனிக்கச் செல்ல வேண்டும். அந்த விதியிலிருந்து விலகாமல் ஆண்டையான ஆண்டவனைப் பேட்டி காணப் புறப்பட்டார் ராமராயர்.

மகா மண்டலேசுவரர் வருகை தரப்போகிறார் என்று விரூபாட்சர் ஆலயத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஆண்டவனுக்கு விசேஷ அபிஷேக அலங்காரங்கள் செய்திருந்தார்கள். ராமராயர் வந்தார், தம் தம்பி வேங்கடாத்திரி பின் தொடர. சம்பிரதாயப்படி தாம் கொண்டு வந்திருந்த ஓலையைக் கோயில் குருக்களிடம் கொடுத்து விட்டு ஆண்டவனை வணங்கி நின்றார். விரூபாட்சருக்கு அடுக்குத் தீபாராதனை நடத்தி ஆராதித்தபின், அரசருக்கு முன்னே தூதுவன் செய்தியைப் படிப்பது போல, ஆண்டவனிடத்தில் அர்ச்சகர் ராமராயர் அளித்த ஓலையைப் படித்துக் காட்டினார்.

இதன் பிறகு ஆடல் கலையில் வல்ல அழகிகள் ஆண்டவன் சந்நிதியிலே நாட்டியமாடலாயினர். கட்டமைந்த உடலமைப்புக் கொண்ட வனப்பு மிக்க சுந்தரிகள் சலங்கை கட்டிச் சதிராடியது

கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அழகை ரசிக்கும் வேங்கடாத்திரிக்கு அரம்பையர்களை யொத்த அணங்குகளின் அழகு நடனம் விருந்தாக இருந்தது. சுந்தர புருஷனை அவன் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து வருபவன். போரென்று வாளெடுத்து விட்டால் சீறிப் பாயும் வேங்கையாக இருப்பான். வாளைக் கீழே வைத்ததும் அழகை ஆராதிக்கும் கலைஞனாக மாறி விடுவான். இப்படி இரு மனிதர்களின் வாழ்க்கை வாழும் வேங்கடாத்திரி இப்போது லலித கலைகளில் ஈடுபாடு கொண்ட கலைஞனாக நாட்டியத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.



ஆடல் மகளிர் தம் அங்கங்களின் அசைவுகளால் அற்புதமான பாவங்களைக் கொட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் விழிகளும் விரல் நுனிகளும்கூட எத்தனையோ உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. நாட்டியமாடும் நங்கையர்களையே பார்த்துக் கொண்டு அவர்களின் அங்க அசைவுகளை, நாட்டியத்தின் நெளிவு சுளிவுகளை ரசித்துக் கொண்டிருந்த வேங்கடாத்திரியின் பார்வையில், அவர்களில் பிரதானமாக விளங்கிய ஒரு பெண்ணின் உருவத்தில் திடீரென்று ஏதோ மாறுதல் தோன்றுவது போல் இருந்தது. அந்தப் பெண் பம்பரமாகச் சுழன்றாடி நின்றபோது அது அவளாக இல்லை. அப்படி யாருமல் அங்கே நிற்பது யார்? அவளா? அதிசயமாக இருந்தது வேங்கடாத்திரிக்கு. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான். ஆயிஷாவேதான்! அன்று ராமராயரின் முன்னால் அன்றொரு நாள் வாதாடி நின்ற அந்தச் சுந்தரி இங்கு எப்படி நடனமாட வந்தாள்? தலையைக் குலுக்கி விட்டுக் கொண்டு பார்த்தான். இல்லை, அவளில்லை. அங்கு ஆயிஷா நிற்கவில்லை. விரூபாட்சர் ஆலயத்தின் பிரதான ஆடலரசிதான் ஆடிக் கொண்டிருந்தாள் தன்னை மறந்து. ஆனால் வேங்கடாத்திரி பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவள் மறுபடியும் மெள்ள மெள்ள அழகுப் பாவை ஆயிஷாவாகி அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

"சே! என்ன பிரமை இது?" என்று விழிக்கோணங்கள் ஒன்று சேரும் பகுதியை விரல்களால் அழுத்திப் பிடித்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். ஆனால் மூடிய கண்களினுள்ளும் அந்த முஸ்லிம் அழகிதான் வந்து முறுவலித்து நின்றாள்!

முட்டாக மூடி நின்ற சாம்பலை ஊதி அகற்றியதும் உள்ளே பளபளத்துக் கனிந்து நிற்கும் கங்குபோல, போர்ப் பொறுப்பு என்ற சாம்பல் விலகிய போது, ஆயிஷா தணலாகத் தகதகத்து நின்றாள் தளபதியின் நினைவிலே. அவள் நினைவோடு ஆண்டவன் சந்நிதியில் இருக்கவோ ஆடலை ரசிக்கவோ முடியாத நிலையில் வேங்கடாத்திரி வெளியிலே வந்து காத்திருந்தான், அண்ணனின் வரவை எதிர் பார்த்துக் கொண்டு. இப்போது அவன் எண்ணமெல்லாம் 'ஆயிஷா ஆயிஷா' என்றே எதிரொலித்துக் கொண்டிருந்தது. எத்துணை அழகி அவள்? செந்தாமரை மடல் போன்ற உடல், சிந்தையை விட்டகலாத சுந்தரமேனி. அடிபட்ட பெண் புலி தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடுமே அந்த நிலையில்தான் அவளை முதலில் அவன் பார்த்தான். சினம் பொங்க நின்றாளே சிங்காரி, அந்தக் கோலத்திலும் கூட அவள் அழகு குறையவில்லை. கோபத்திலும் சோபிக்கும் சொகுசான தோற்றம் கொண்ட அந்த அழகி இத்தனை வருஷங்களாக இதே விஜயநகரத்தில் அதுவும் அரண்மனைக்குள் வளர்ந்து வந்தும் தன் கண்களில் படாது தப்பியது எப்படி என்று அதிசயப்பட்டான்.


பசியால் வாடி உணவுக்கு ஏங்கிப் பல நாள் பட்டினி கிடந்த ஒருவனுக்கு முன்னால் இரு ரொன்று அறுசுவை உண்டிகளைக் கொண்டு வந்து குவித்தால் எப்படி அவன் மகிழ்ச்சியால் திகைத்து ஆனந்தத்தால் திக்குமுக்காடிப் போவானோ அந்த நிலையில்தான் ஆயிஷாவை ஒற்றர்கள் பிடித்து வந்து அவன் முன் நிறுத்திய போது வேங்கடாத்திரி ஆச்சரியப் பட்டுப் போனான். அழகை ரசித்து ஆனந்திக்கும் வேங்கடாத்திரிக்கு விருந்தாக நின்றாள் அந்த வனிதை. கட்டுப்பாட்டை மீறிச் சென்ற குற்றத்துக்காகக் கைதியாகி விசாரணைக்கு வந்துள்ள ஒரு பெண்ணிடம் எந்த அளவுக்குப் பேசலாமோ அவ்வளவு தான் பேசினான் வேங்கடாத்திரி. அதுவும் அண்ணனின் முன்னிலையில் அவள் அழகில் அளவுக்கு மீறிய அக்கறை காட்டுவதும் முறையல்லவே! மறு முறை வசதியான சூழலில் எப்படியும் அவளைச் சந்திக்கலாம் என்று தன் ஆர்வத்துக்கு அணை போட்டுக் கொண்டான். ஆனால் அகமது நகரின் மீது படையெடுத்துச் செல்லும் பொறுப்பு அடுத்த நாளே அவனிடம் ஒப்படைக்கப்பட்ட போது வேங்கடாத்திரி வேறு மனிதனாக மாறி விட்டான். இப்போது இத்தனை நாட்கள் கழிந்து மறுபடியும் அவள் நினைவு வந்த போது..... அவளைக் காண வேண்டுமென்ற தாங்க முடியாததொரு தவிப்பு ஏற்பட்டது.

ஆயிஷாவின் நினைவிலே மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்த வேங்கடாத்திரியின் நேச நினைவுகளுக்கு ஆலயச் சடங்குகள் முரணாகத் தோன்றின. விரூபாட்சர் கோயிலுக்கு வெளியே வந்து விட்டான். இப்படித் தன்னைத் தாமதிக்க வைக்கும் சூழ்நிலையைத் தாங்க முடியாதவனாகத் தன் குதிரையைத் தடவிக் கொடுத்தபடி சிந்தனைப் புரவியைத் தட்டி விட்டுக் கொண்டிருந்தான். தலைவனின் ஸ்பரிசத்திலும் சந்தோஷமுற்ற குதிரை உடலைச் சிலிர்த்துக் கொண்டு அடிக்கடி கனைத்து முன்னங் கால்களால் பூமியைக் கீறித் தான் கிளம்புவதற்குத் தயார் என்பதை அறிவித்துக் கொண்டிருந்தது.

சம்பிரதாயங்களையும், ஆலயத்தின் புனிதச் சூழலையும் மறந்து போகுமளவுக்குக் காதல் வயப்பட்ட வேங்கடாத்திரி சற்றைக்கொரு தடவை அண்ணன் வருகிறாரா என்று கருவறைப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆலயத்தினுள்ளே....

ஆடல் முடிந்து, ஆண்டவனுக்குத் தீபாராதனை நடந்தது. தம்பி தரிசனம் செய்கிறானா என்பதைக் காணத் திரும்பினார் ராமராயர். தளபதியைக் காணவில்லை. எங்காவது தள்ளி இருந்தபடி தரிசனத்தில் ஈடுபட்டிருப்பான் என்று எண்ணித் தம் கவனத்தை மீண்டும் கருவறையினுள் பதித்தார். அவரது பார்வை பக்தி மேலிட்டால் பனித்தது. மகாமண்டலேசுவரருக்கு மரியாதை செலுத்த, பட்டர்கள் பரிவட்டங்களுடனும் பிரசாதத்துடனும் மகா மண்டபத்துக்கு வந்தார்கள். அப்போதும் தம் தம்பி வேங்கடாத்திரி அருகே வாராதது அவருக்கு வியப்பை அளித்துப் புருவங்களை நெறிக்க வைத்தது. நிலைமையைப் புரிந்து கொண்ட மெய்க்காப்பாளன் வெளியே ஓடினான். அடுத்த சில வினாடிகளில் கூட்டம் விலகி வழி வகுத்துக் கொடுக்க வேங்கடாத்திரி உள்ளே புகுந்து அண்ணனின் அருகே



நிச்சயமாகத் தெரியுமா?

சினிமா படத்தை நன்கு ரசித்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! ஆனால் பக்கத்திலுள்ளவர்களும் அம்மாதிரி ரசிக்க விடுகிறீர்களா என்பது நிச்சயமாகத் தெரியுமா?
வியர்வை நாற்றம் வெறுப்பூட்டுவதாக இருக்கும். அதுவும் ஏர்-கண்டிஷண்ட் தியேட்டரில் அதிகமாக எடுத்துக் காட்டும். வியப்பூட்டும் ஜி-11* கலந்த சிந்தால் டாய்லட் சோப்பை வழக்கமாக உபயோகிப்பது துர்நாற்றம் உண்டாக்கும் கிருமிகளை பயனுள்ள வகையில், ஆனால் இலேசாக, அழிக்கிறது.
சிந்தால் உங்களை எல்லோரும் விரும்புமாறு செய்கிறது, தவிர, அந்த நம்பிக்கையையும் அளிக்கிறது.




சிந்தால் சோப் கொண்டு நீராடி, துர்நாற்றத்தைப் போக்கும், இனிய மணம் கமழும் இதமான ஜி-11 கலந்த சிந்தால் டாய்லட் பவுடரைத் தூவி, சருமப் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்.

- * எல். ஜிவாடன் அண்டு கம்பெனியின் ட்ரேட் மார்க்
- விவரமான "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு கோத்ரெஜ், பம்பாய்-12 என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.

வியர்வை நாற்றத்தைப் போக்கி எழிலுடன் விளங்கச் செய்யும் சோப்



Godrej கோத்ரெஜ் சோப்புகளில் முதன்மையான பெயர்



வந்து நின்றான். ராமராயர் அவனிடம் ஏதும் கேட்கவில்லை. ஆனால் கூடக் குவித்த அவரது புருவங்கள் வீசிய விறுக் கணைகளைத் தாங்க முடியாமல் தலை குனிந்தான் வேங்கடாத்திரி. தாழ்ந்த கழுத்திலே ஆண்டவனின் தண்டு மாலையை அணிவித்துத் தட்டு நிறையப் பிரசாதங்களையும் நீட்டினார் பட்டர். மாலை மரியாதைகளை ஏற்று ஆண்டவனின் ஆலயத்தை விட்டு வெளியே வந்து குதிரை மீது ஏறிய பிறகும் வாய் திறக்கவில்லை மகா மண்டலேசுவரர் ராமராயர்.

ஹம்பியிலிருந்து அரண்மனைக்குச் செல்லும் கம்பீரமான ராஜ பாட்டையிலே வய்யாளி நடை போட்டு ஒய்யாரமாக நடந்து சென்று கொண்டிருந்தன குதிரைகள். வேகமாகச் செல்ல விரும்பும் தன் எஜமானனின் மனத்தை அறிந்துதானோ என்னவோ ராமராயரின் குதிரையை அடிக்கடி முந்திக் கொண்டு முன்னால் செல்லத் துடித்தது வேங்கடாத்திரியின் குதிரை. வேங்கடாத்திரியோ தன் விருப்பத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் தான் அண்ணனுக்கு அடங்கி வருவதைப் போலவே தன் குதிரையையும் இழுத்துப் பிடித்து அடக்கிப் பின்தங்கி வரலானான். இப்படி முன்னும் பின்னுமாகச் செல்லும் வழியில் வாய் திறந்தார் ராமராயர்.

''வேங்கடா! எங்கே போயிருந்தாய்? தீபாராதனை வேளையில் உன்னை அங்கே காணவில்லையே ?''

''எங்கும் போகவில்லை. ஆலயத்தின் வெளியில்தான் இருந்தேன்'' என்றான் வேங்கடாத்திரி.

''வழிபாட்டுக்கு வந்த இடத்தில் கூடக் கலையாராய்ச்சியில் இறங்கி விட்டாயோ ?'' என்றார் தம்பியின் பக்கம் திரும்பி. வேங்கடாத்திரியின் போக்கையெல்லாம் அறிந்தவர் அவர்.

''அப்படியொன்றுமில்லை. ஏனோ இன்று என் மனம் சரியில்லை. அலைபாயும் உள்ளத்துடன் ஆண்டவனின் சன்னிதியில் இருக்க வேண்டாமென்றுதான்...'' உள்ளக் கிடக்கையை ஒளிக்க முயன்றும் முடியாமல் குழறினான் வேங்கடாத்திரி.

ராமராயர் தம் தம்பியைப் பார்த்தார் மௌனமாக. அவர் உதட்டில் மலர்ந்த சிரிப்பை விடக் கண்களில் வழிந்த சிரிப்புத் தான் அதிகமாக இருந்தது. வேங்கடாத்திரியிடம் எப்போதுமே அவருக்கு ஒரு தனிப் பற்றுதல். அவன் நடத்திச் சென்ற படைகள் எதுவுமே தோல்வி கண்டதில்லை. எனவே, அவன் இல்லாமல் அவர் எந்தப் போரையும் திட்டமிட்டதில்லை. அவர் அன்புக்கு இது மட்டுமே காரணமல்ல. அரவீட்டு மரபின் கடைக் குட்டி என்பதினாலும் அவனிடம் இந்தப் பாசம் ஏற்பட்டிருந்தது. தன்னிடம் அவனுக்குப் பக்தியும் பாசமும் உண்டு என்பதையும் அறிவார் ராமராயர். தம்மைப் போலவோ, தம்பி திருமலையைப் போலவோ போர்க் கலையில் மட்டும் ஈடுபாடில்லாமல் லலித கலைகளை ரசிக்கத் தெரிந்த கலைஞன் தம் தம்பி என்பதிலும் அவருக்கு ஒரு பெருமை உண்டு. ஆனால் அவன் எதிரில் அவனைப் புகழவோ பாராட்டவோ மாட்டார். மற்றவர்களிடம்தான்

திரைத் துணுக்கு

பாடல் பெற்ற பிராணிகள்

திரைப் படங்களில் நிலவையும் கிளியையும் வைத்துப் பாடிய பல பாடல்களைக் கேட்டிருக்கிறீர்களல்லவா ?

பின்வரும் பிராணிகளை வைத்துப் பாடிய பாட்டுக்கள் எந்தெந்தப் படங்களில் வருகின்றன என்று சொல்ல முடியுமா?

1.	ஆட்டுக் குட்டி	6.	மயில்
2.	பூனைக் குட்டி	7.	கோழி
3.	காக்கை	8.	எருமை
4.	சிட்டுக் குருவி	9.	கழுதை
5.	குயில்	10.	காளை மாடு

விடைகள் :

1. மணியோசை
''ஆட்டுக் குட்டி, ஆட்டுக் குட்டி''
2. நாமதம் —
''மியாவ், மியாவ், பூனைக் குட்டி''
3. பராசக்தி —
''கா...கா...கா...ஆகாரம்உண்ண''
4. டவுன் பஸ் —
''சிட்டுக் குருவி ... சேதி தெரியுமா''
5. மனிதன் —
''குயிலே, உனக்கு அனந்த கோடி''
6. பார்த்திபன் கனவு —
''வண்ண மயிலே, வண்ண மயிலே'',
7. பதிபக்தி —
''கொக்கரக்கோ.... கோழியே...''
8. மந்திரிகுமாரி —
''என் அருமைக் கன்னுக் குட்டி...''
9. மர்மயோகி —
''தம்மகழுதை ரொம்பநல்லகழுதை''
10. பொன் வயல் —
''காளைகளா, ஓட்டமாய் ஓடுங்கடா''

வேங்கடாத்திரியைப் பற்றி மிக உயர்வாகச் சொல்லுவார்.

''மனத்தை அதன் போக்குப்படி அலைய விடக் கூடாது வேங்கடா! அடக்கியாளப் பழகிக் கொள்ள வேண்டும்'' என்றார் ராமராயர் தம்பியின் முகத்தைப் பாராமலே.

பின் தங்கி வந்து கொண்டிருந்த வேங்கடாத்திரிக்குத் 'திக்'கென்றது. தன் உள்ளத்தைப் புரிந்து கொண்டுதான் இதைக் கூறுகிறாரோ என்று ஒரு நிமிஷம் தவித்துப் போய் விட்டான். ஆனால் அவருக்குப் பதில் கூறவில்லை. அதன் பிறகு அவரும் பேசவில்லை.

ஆயிஷாவின் நினைவை அசை போட்டபடி அரண்மனைக்குத் திரும்பிய வேங்கடாத்திரி மனோகரமான மாலைப் பொழுதை எதிர்பார்த்துச் சற்றே களைப்பாறினான். பகல் முதிர்ந்து மாலையாக மலர்ந்தபோது உல்லாசப் பிரியனான வேங்கடாத்திரி, தேவி திருமலாம்பாளின் உத்தியானவனத்தை நோக்கிக் கிளம்பினான். அண்ணன் ராமராயரின் மூத்தபத்தினி—

கீர்த்தி பெற்ற கிருஷ்ண தேவராயரின் அருமை மகள் — தான் திருமலாம்பா. மன்னர் சதாசிவராயரிடம் சங்கடப்பட்டுப் போன ஆயிஷாவைத் தம் தர்மபத்தினி திருமலாம்பாவிடம் ஒப்படைத்து வரும் பொறுப்பையும் ராமராயர் அவனிடம்தானே விட்டுப் போனார்! ஆகவே அவள் எப்படி இருக்கிறாள் என்று அறிந்து போகும் சாக்கை ஏற்படுத்திக் கொண்டு அவளைச் சந்திக்கக் கிளம்பினான்.

யாருடைய அந்தப்புரத்திலும் வேங்கடாத்திரிக்கு விசேஷ வரவேற்பு உண்டு. காண்பவரை வசீகரிக்கும் தோற்றம், சிரிக்கச் சிரிக்கப் பேசும் சுபாவமும் கொண்டவன் அவன். பெண்களின் நன்மதிப்பைப் பெறும் கலையில் கைதேர்ந்தவன் வேங்கடாத்திரி. தேவி திருமலாம்பாளுக்கு அவனிடம் தனிப்பட்ட அன்பு. மைத்துனர் என்ற மரியாதையை விட அவனைத் தன் சொந்தத் தம்பி போலப் பாவித்துப் பாசம் வைத்திருந்தாள்.

வெயிலின் உக்கிரம் தணிந்து துங்கபத்திரையின் தண்ணென்ற இளங் காற்றுத் தவழ்ந்து கொண்டிருந்தது. பரந்து கிடக்கும் பசும் புல் வெளியிலே பகலெல்லாம் வயிறார மேய்ந்து விட்டு மடியில் பால் கனக்க, பசித்திருக்கும் தங்கள் மதலைகளை நினைத்தபடி மாடுகள் பட்டிக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் தேவி திருமலாம்பாளின் அந்தப்புர வாயிலில் குதிரையை விட்டுக் கீழிறங்கினான் வேங்கடாத்திரி.

தளபதியார் வருகை தரும் செய்தியைத் தேவிக்கு அறிவிக்க விரையும் காவல் பெண்ணைக் கையமர்த்தித் தடுத்தான். தான் திடீரென்று தோன்றித் தேவியைத் திகைக்க வைக்கப் போவதாகச் சொல்லி அறிவிப்போ அதனுடன் நிகழும் ஆர்ப்பாட்டங்களோ ஏதுமின்றி அந்தப்புரத்தினுள் நுழைந்தான். மாலை வேளையில் மங்கையர்கள் எங்கிருப்பார்கள் என்பதை அறிந்த வேங்கடாத்திரி உத்தியானவனத்தை நாடிச் சென்றான்.

விஜயநகர சாம்ராஜ்யத்திலே அந்தப்புரங்கள் அதன் அமைப்புக்கும் அழகுக்கும் வசீகரத்துக்கும் பெயர் பெற்றவை. மாநகரின் ஜீவாதாரமான துங்கபத்திரையைத் தங்கள் இஷ்டப்படியெல்லாம் இழுத்துக் கொண்டு போய், பொழில்களையும், பொய்கைகளையும், ஊற்றுக்களையும் பரிணமிக்க வைத்து அற்புதங்களைச் செய்திருந்தார்கள். ஆழங்காண முடியாமல் ஆர்ப்பரித்து ஓடும் அந்த நதியைத் தங்கள் அந்தப்புரங்களிலும் உத்தியானவனங்களிலும் சிருங்கார லீலைகள்புரியும் வசந்த மண்டபங்களைச் சுற்றிச் சலசலத்து ஓடும் வாய்க்கால்களாக்கி ஓட வைத்திருந்தார்கள். இயற்கையாக அமைந்துள்ள குன்றுகளைக் கொண்டு, தங்கள் இஷ்டப்படியெல்லாம் வளைந்து கொடுக்கும் பத்திரையைச் செயற்கை நீர்வீழ்ச்சியாக அதிலிருந்து விழுமாறு செய்து மகிழ்ந்திருந்தார்கள். நாட்டிலே மண்ணைப் பொன்னாக்கித் தந்த துங்கபத்திரை அரண்மனையிலே அந்தப்புரத்து மண்ணையெல்லாம் வண்ண மலர்களாக்கித் தந்து கொண்டிருந்தாள். இத்தகைய மலர்ச் சோலையிலே, செய்குன்றுகளிலிருந்து தாவி விழும் நீரூற்றுக்களின் அருகிலே பணிப் பெண்கள் புடைசூழ அமர்ந்திருந்தாள் தேவி திருமலாம்பாள். அந்த மூதாட்டியைக் களிப்பிக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருந்தார்கள் கலைகளில் தேர்ந்த கன்னியர் சிலர். உடல் அழகிலும் உருவத் தோற்றத்திலும் அத்தனை பேர்களிலிருந்தும் வேறுபட்டுத் தனித்து நின்று சோபித்தாள் ஒருத்தி. யார் நினைவாக யாரைத் தேடி ஓடி வந்திருக்கிறானோ வேங்கடாத்திரி அந்த ஒருத்தி — ஆயிஷாதான் அவள்! மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி உட்கார்ந்திருந்ததிலேயே அவள் அதிக அழகுடன் விளங்கினாள். சிரிப்பும் கொண்டாட்டமுமாக இருக்கவேண்டிய அந்த இடத்திலே அவள் அடக்கமும் அமைதியுமாக அமர்ந்து 'சிதார்' வாத்தியத்தை மீட்டிக் கொண்டிருந்தாள். அத்தனை பேரும் அதில் லயித்துப் போயிருந்தனர். வேங்கடாத்திரியே அதில் கட்டுண்டு நின்றான் சில விநாடிகள்.

தந்தி வாத்தியத்தை மீட்டிக் கொண்டிருந்த அந்தச் சுந்தரி அவர்களை எங்கோ ஒரு தனிப்பட்ட உலகத்துக்கு அழைத்துப் போய் அற்புதங்களைக் காட்டிக் கொண்டிருந்தாள். அப்போது 'படபட' வென்று கைதட்டல் கேட்டதும் திடுக்கிட்டவர்கள் திரும்பினார்கள்.

''எத்தனை இனிமையான இசை? நம் வாத்தியங்களிலேயே வீணைக்குத்தான் இதயத்தைத் தொடும் அந்த இனிமையும் குழுமையும் உண்டென்று எண்ணியிருந்தேன். இன்றுதான் அது தவறு என்று தெரிந்தது.'' பாராட்டுரைகளை வழங்கியவாறு அவர்கள் பக்கத்தில் சென்றான் வேங்கடாத்திரி.

மைத்துனனைக் கண்ட தேவி அகமும் முகமும் மலர வரவேற்றாள். ''வாருங்கள் தளபதியாரே! சண்டையிலிருந்து வந்தவர் சங்கீதத்தை ரசிக்க நேரே இங்கு வந்துவிட்டாற்போலிருக்கிறது!''

''வேறு என்ன செய்வது? உங்கள் அந்தப்புரத்திலிருந்து ஒலிக்கும் இந்த அற்புதமான இசையைக் கேட்ட பிறகு வேறு எந்தக் காரியத்திலும் மனம் ஈடுபட மறுக்கிறதே!''

''பாராட்டுவது போலப் பேசி என் பாங்கியை இப்படியா ஏளனப்படுத்துவது? அவளென்ன கொம்பு வாத்தியம் ஊதியா உங்களை இங்கு கூப்பிட்டாள்?'' என்றாள் திருமலாம்பாள் போலிக் கோபத்துடன்.

வேங்கடாத்திரி கடகடவென்று சிரித்துவிட்டான். அவர்களின் சிரிப்பில் பங்கு கொண்டபடியே பாங்கியர் மெல்ல அங்கிருந்து நழுவலாயினர். தேவியாரும் மகாமண்டலேசுவரரின் இளவலும் பேசிக்கொண்டிருக்கும்போது தாங்கள் அங்கிருப்பது நாகரிகமில்லை என்று நகர்ந்தனர். அவர்களுடன் ஆயிஷாவும் கிளம்புவதைக் கண்ட வேங்கடாத்திரி தவித்துப் போனான். ''மதனி! உங்கள் தோழியின் சங்கீதத்தை ரசிக்கவாமென்று வந்த என்னைக் கண்டதும் இப்படி எல்லோரும் ஓட்டமெடுக்கிறார்களே, நீங்களாவது சொல்லக் கூடாதா?'' என்றான் பரிதாபமாக.

அவன் யாரைப் பார்க்க வந்திருக்கிறான் என்பது அரசியல் சூழலில் அமிழ்ந்து ஊறிப் போன திருமலாம்பா தேவிக்கா தெரியாது?

தம் பொறுப்பில் விட்டுச் சென்ற அடிமைப் பெண் ஆயிஷாவின் நலன் அறிந்து போகவே வந்திருக்கும் வேங்கடாத்திரியின் விருப்பப் படி அவளை இருக்கும்படி சைகை செய்து நிறுத்தினாள். சலனமற்ற முகத்துடன் இவர்களின் மீது பார்வையைப் பதிக்காமல் எங்கோ பார்த்துக்கொண்டு நின்றாள் ஆயிஷா. அவளது கரத்தில் அணைக்கப்பட்டுக் கிடந்த சிதார் வாத்தியத்தைக் கண்ட வேங்கடாத்திரி பெருமூச்சுடன், ''மதனி, இம்மாதிரி வாத்தியங்களே அவற்றை வாசிப்பவர்களின் திறமையினால்தான் பெருமை பெறுகின்றன போலும். இத்தனை நாள் வரை எனக்கு இந்தச் சிதார் வாத்தியத்திடம் எவ்வித மதிப்பும் கிடையாது. ஆனால் இந்த அழகிய விரல்கள் அதை மீட்டிய போதுதான் எத்தனை இனிமையான நாதம் பிறந்தது அதிலிருந்து ?'' அவளையே பார்த்துக் கொண்டு பேசினான் வேங்கடாத்திரி.

மௌனப் பதுமை வாய் திறந்தது :

''மனிதர்களுக்கும் அவர்களது உணர்ச்சிகளுக்குமே மதிப்புக் கொடுக்காதவர்கள் கேவலம் வாத்தியங்களுக்கா மதிப்புக் கொடுக்கப் போகிறார்கள் ?'' என்றாள் ஆயிஷா.

மதி வதனத்திலிருந்து மது வழியவில்லைதான். எனினும், அவள் கோபத்துடன் பேசினாலும், அந்தக் கொவ்வைச் செவ்வாய் திறந்ததே. சூடானாலும், சுந்தரமான செம்பொறிகளைத் தெறித்ததே என்று புரிந்துப் போனான் வேங்கடாத்திரி. ''மதனி, மதனி, இவ்வளவுதானா நீங்கள்? இந்தக் கோதைக்கு நம் மீதுள்ள கோபம் தணியவே இல்லையே? கல்லையும் மெழுகாக்கும் உங்கள் திறமை இவளிடம் பலனளிக்க வில்லையா?'' என்ற போதும்கூட ஆயிஷாவிடம் பதித்த தன் பார்வையை அவன் எடுக்கவே இல்லை.

''போதுமே, உன் பாராட்டு! அவள் என்ன கல்லா நான் மெழுகாக்க? இந்த விஜயநகரத்தின் சிற்பச் செல்வங்களைப் பார்த்துப் பார்த்து மனிதர்களைக் கூடக் கல்லாகவே காணுமளவுக்கு உன் ரசிகத் தன்மை வளர்ந்து விட்டாற் போல் இருக்கிறது! அவள் அத்தனையும் கட்டித் தங்கமாக்கும்!'' என்றாள் தேவி திருமலாம்பாள், ஆயிஷாவைத் தாயன்பு நிறைய நோக்கியபடியே.

''தப்புத்தான் மதனி. உங்கள் திறமையை நான் குறைவாகத்தான் மதிப்பிட்டு விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள். கல்லைக் கட்டித் தங்கமாக்குபவர் நீங்கள் என்பது இப்போதுதான் எனக்குத் தெரிந்தது'' என்று அபிநயித்தான் அரவீட்டு இளவல்.

''பரிகாசம் போதும்.... அம்மா ஆயிஷா! வேங்கடாத்திரியிடம் 'நான் ஓடி விட மாட்டேன். நீங்கள் என்னைப் பற்றிய கவலை இல்லாமல் உங்கள் காரியத்தைப் பார்க்கலாம்' என்று உறுதி மொழி சொல்லி அனுப்பி விட்டு வா. இதற்காகத்தான் உன்னைக் காண வந்திருக்கிறார் தளபதி அவர்கள். நான் கோயிலுக்குப் போக வேண்டும். நேரமாகிறது, வரட்டுமா?'' என்று விடைபெற்றுக் கொண்டாள் தேவி. வேங்கடாத்திரியையும் ஆயிஷாவையும் தனியே விட்டு விட்டுச் செல்வதேகூட அவளுடைய நோக்கமாக இருக்கலாமோ என்னவோ!

தேவியார் போவதையே பார்த்துக் கொண்டு சிலையாகி நிற்கும் ஆயிஷாவின் அந்த அழகை அள்ளிப் பருகியபடி நின்ற வேங்கடாத்திரி அவள் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப அவள் கையில் கவனிப்பின்றித் தொங்கும் சிதார் வாத்தியத்தின் நரம்புகளில் ஒன்றை இழுத்துச் சுண்டி ஒலி உண்டாக்கினான். சிலையின் நரம்பையும் சுண்டி விட்டாற்போல, அது உயிர் பெற்றுத் திடுக்கிட்டுத் திரும்பியது. ''ஆயிஷா!'' – தன் இதயத்தின் அன்பை யெல்லாம் அந்த வார்த்தைகளில் வடித்தெடுத்து அழைத்தான் வேங்கடாத்திரி. ''இங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டும் என்ற நினைப்பு இன்னமும் இருக்கிறதா உன்னிடம்?''

ஏக்கம் இழையிட ஏந்திழையாள் சோகச் சிரிப்பொன்றை மலர விட்டாள். ''நினைப்பு இருந்து விட்டால் போதுமா? நிறைவேறக் கூடிய காரியமா அது? ஏழு அரண்களைக் கொண்ட ஏற்றமிக்க நகரத்தின் அந்தப்புரத்தி லல்லவா அடைத்து வைத்திருக்கிறீர்கள் ? அதுவும் ஆற்றல் மிக்க உங்கள் கண்காணிப்பிலிருந்து தப்பிவிட முடியுமா ?''

''ஆயிஷா! நான் உன்னைக் கண்காணிக்க வரவில்லை. கண்டு களிக்கவே வந்தேன்.''

''நான் என்ன காட்சிப் பொருளா? காவல் கைதிதானே களிப்பதற்கென்ன இருக்கிறது?'' என்றவள் விநாடி மௌனத்துக்குப் பிறகு, ''இருக்கத்தான் செய்யும். வலிமையுள்ள ஒரு சாம்ராஜ்யத்தின் தளபதி, தான் சிறைப் பிடித்து வந்தவர்களைப் பார்த்துக் களிப்படையாமல் கண்கலங்கவா செய்வார்?'' ஏளனம் அவள் இதழ்களை மலர வைத்தது.

''என்னை அத்தனை கல் நெஞ்சனாகவா கற்பனை செய்து விட்டாய் ஆயிஷா ?'' என்றான் வேங்கடாத்திரி வேதனையோடு. 'தனக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டது. தன்னைக் கொடுமைப் படுத்துகிறார்கள் என்று கொதிப் படைந்துள்ள அவள் உள்ளத்தை எப்படிக் குளிர்விப்பது என்று புரியாமல் தவித்தவன், ''கைதி கைதி என்று ஏன் இப்படித் தாழ்வு மனப்பான்மையிலே கிடந்து வெறுப்பை வளர்த்துக் கொள்ளுகிறாய்? உன்னைக் கைதியாகவா இங்கு வைத்திருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.


''உண்மைதான். என்னைக் கைதியாக வைக்க வில்லை. கைதி என்றால் கைகால்களில் விலங்கிட்டுக் காராகிருகத்திலல்லவா அடைத்திருப்பார்கள். நான் ஓர் அடிமை!''

''அப்படிப் பார்க்கப் போனால் என் அண்ணாவின் அன்புக்கு நானும்கூட அடிமைதான். உலகத்தில் ஒவ்வொருவருமே ஏதோ ஒன்றுக்கு அடிமையாகத்தான் இருக்கிறார்கள். இருந்தேயாக வேண்டும் ஆயிஷா!''

''இருக்க வேண்டியதுதான். அன்புக்கும், அழகுக்கும், பொன்னுக்கும், பொருளுக்கும் பண்பிற்கும், பகட்டிற்கும் அடிமையாகலாம். ஆனால் அநீதிக்கு அடிமையாக முடியாதே.'' பழி வெறி கொண்ட பெண் புலியின் கண்களாகப் பளபளத்தன ஆயிஷாவின் அழகிய நயனங்கள்.

(தொடரும்)


உங்கள் கூந்தலின் உண்மை
அழகை வெளிப்படுத்த
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
உபயோகியுங்கள்
உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும், கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத் தவறாமல் தேய்த்து வருவது கூந்தல் அடர்த்தியாக அழகுடன் வளர்வதற்கு இன்றியமையாதது!
தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்கால்களிலும், கேசத்திலும் தேய்த்துக்கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகி விட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.
எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் உங்கள் கூந்தலின் உண்மையழகை வெளிப்படுத்த கால்கேட் உதவுகிறது.
COLGATE
HAIR OIL
மகிழ்ச்சிதரும் நறுமணம் உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்பியூம்டு
கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கூந்தலுக்கு அழகும் நறுமணமும் சேர்க்க
ரோஜா, லவண்டர், மல்லிகை ஆகிய 3 வாசனைகளிலும் கடைகளில் கிடைக்கிறது



மூலத்தைச் சுருக்குவதற்குப் புதிய வழி

அரிச்சலைப் போக்குகிறது • வலியிலிருந்து துரித நிவாரணம் அளிக்கிறது.

முதல் தடவையாக, விஞ்ஞானம் மூலத்தைச் சுருக்கவும், அரிச்சல், இரத்தப்போக்கு மற்றும் வலியிலிருந்தும், புதியதொரு வலியில்லாத முறையில் நிவாரணம் அளிக்கக்கூடிய மருந்தொன்றைக் கண்டுபிடித்திருக்கிறது.

டாக்டர்களின் கண்காணிப்பில் நடத்தப்பட்ட சோதனைகளும் இதை நிரூபித்தன. வலியும் அரிச்சலும் உடனேயே குணப்படுத்தப்பட்டன. மேலும், இதமாக வலியைப் போக்குவதுடன் உண்மையாகவே சுருக்கமும் ஏற்பட்டது.

மேலும், வியக்கத்தக்கதென்னவென்றால் இந்த நல்ல முன்னேற்றம் 10-20 வருடங்களாகப் பாதிக்கப்பட்டவர்களிடமும்கூடக் காணப்பட்டது.

இதன் இரகசியம் ஒரு புதிய குணமளிக்கும் மருந்தாகும்- பயோ-டைன்*-உலகப்பிரசித்தமான ஒரு ஆராய்ச்சிக்கூடத்தின் கண்டுபிடிப்பு. இந்த புதிய குணமளிக்கும் மருந்து ப்ரிப்பரேஷன் H* என்ற பெயரில் களிம்பு வடிவத்தில் கிடைக்கிறது. உண்மையிலேயே மூலத்தைச் சுருக்குவதுடன், ப்ரிப்பரேஷன் H வழவழப்பாக்குவதன் மூலம் மலம் கழிக்கும்போதுள்ள வலியைக் குறைக்கிறது.

நீங்கள் மூலத்தால் அவதிப்பட்டால் ப்ரிப்பரேஷன் H புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு (ஆங்கிலம்-ஹிந்தி) இன்றே கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் 33, ஜாப்ரே மானேர்ஸ் & கோ லிட்., த. பெ. நிர். 976, பம்பாய்-1

ப்ரிப்பரேஷன் H *டிரேட் மார்க்

PJH-5 TAM

படித்துப் பாருங்கள்

***Bhavan's Journal :** *Decennial Number*

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள், ஸ்ரீ சிருங்கேரி பீடாதிபதிகள், ஸ்ரீ துவாரகா பீடாதிபதிகள், ஸ்ரீ புரி பீடாதிபதிகள் ஆகிய நான்கு பீடாதிபதிகளும் மற்றும் பல சான்றோர்களும் மனமாரப் பாராட்டி வாழ்த்துக் கூறியுள்ள ஒரு சஞ்சிகை இருக்கிறதென்றால் அது எது என்று கேட்கத் தேவையே யில்லை. குலபதி ஸ்ரீ கே. எம். முன்ஷி அவர்களின் 'பவன்ஸ் ஜர்னல்' இந்நாட்டின் அறிஞர்களிடையே பெற்றுள்ள மதிப்பு பத்திரிகை உலகுக்கே பெருமை தருவதாகும்.

ஆத்மிகப் பிரசாரத்துக்கும், பாரதீய நாகரிகத்தை எடுத்து ஓதுவதற்கும் ஒரு சக்தி வாய்ந்த சாதனமாகப் பத்தாண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ முன்ஷி அவர்கள் பவன்ஸ் ஜர்னலைத் தொடங்கினார்கள். தொடக்கத்தில் மூவாயிரம் பிரதிகளே அச்சிடப்பட்டன. உத்தமமான அபிலாஷைகளைக்கும் இறைவனின் அருளில் பத்திரிகை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்த் தழைத்து இன்று பத்தாம் ஆண்டு விழாவின்போது 60,000 பிரதிகள் செலாவணியாகின்றன. இந்நாட்டின் சநாதன தர்மத்துக்கு இவ்வளவு பேரும் சந்தாதாரர்கள் என்றே எண்ணிவிடலாம்.



'பவன்ஸ் ஜர்னலி'ன் பத்தாம் ஆண்டுவிழாமலர் நம் கண்ணையும் கருத்தையும் கவர்கிறது. காசியில் உறையும் அன்னபூர்ணா தேவியை சாந்நித்தியம் ததும்பும் முகப்புச் சித்திரமாகச் 'சில்பி' வரைந்திருக்கிறார். அதையடுத்து வேதம், உபநிஷதம், பௌத்த சமய கிரந்தமாகிய தம்மபதம், பைபிள், பெர்ஷியர்களின் பிரார்த்தனை, சீக்கியர்களின் கிரந்தசாகேப் முதலியவற்றிலிருந்து பொறுக்குமணிகளைத் திரட்டித் தந்திருக்கிறார்கள். வியாசர், ஆதி சங்கரர், விவேகானந்தர், அரவிந்தர், காந்தி அடிகள், ரவீந்திரநாத தாகூர், ஸ்வாமி ராமதீர்த்தர், சகோதரி நிவேதிதை ஆகியோர் அருள் உபதேசம் செய்கிறார்கள். எந்தப் பிரச்னையாயினும் உணர்ச்சி வசப்பட்டு ஆவேசமாகிவிடும் நிகழ்காலத்துக்கு மிக அவசியமான புத்திமதியைத் தலைவர் ராஜாஜி கூறுகிறார். மிகைப்படுத்துவதை விட்டு மிதப்படுத்துவதன் பெருமையைத் தெளிய வைக்கிறார்.

டாக்டர் ஸி.பி. ராமஸ்வாமி அய்யரவர்கள் ஆரிய — திராவிட நாகரிகங்கள் எனப்படுபவை பற்றிப் புதியதொரு மார்க்கத்தில் தம் சிந்தனையைக் கிளறி விட்டிருக்கிறார். ரிக்வேதத்தில் 'சப்பை மூக்கர்'களாகக் குறிப்பிடப்படும் தஸ்யுக்கள்தான் திராவிடர்களென்றே, அந்தத் திராவிடர்கள்தான் தீர்க்கமான மூக்குள்ள தமிழர்களென்றே எண்ணுவது சரியா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார். திராவிடர்களும் ஆரியர்களும் வெவ்வேறு இனம் என்பதுகூட அறுதியிட்டு உறுதியாக இல்லை என்று டாக்டரவர்கள் எடுத்துக் கூறியுள்ளார். 'சிந்து' என்பதுபோன்ற வேதத்தில் வரும் பதங்களும் தமிழ்ப் பதங்களோடு ஒப்புநோக்கக் கூடியனவாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டித அவர்கள் தாம் பல நாடுகளில் பயணம்செய்து கண்ட பற்பல அரசியல் பிரமுகர்களைப் பற்றிய நினைவுகளை ஓர் இனிய கட்டுரையாகத் தந்திருக்கிறார். பாரதப் பெண்குல திலகங்களின் மாண்புகளை டாக்டர் புரக பாலகிருஷ்ணன் கவிதையாகத் தருகிறார். மற்றும் பல பேரறிவாளர்களின் கட்டுரைகளிடையே ஸ்ரீ வி. பி. மேனன் அவர்கள் சுதந்திரப் போராட்டத்தின் நிறைவுப்பணி பற்றிச் சுவைபட எழுதியுள்ள நீண்ட வியாசம் மனத்தை வெகுவாகக் கவர்கிறது. தற்போதுண்டாகியுள்ள மத மறுமலர்ச்சி பெரும்பாலும் புராண இதிகாஸங்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளது என்றும், வேதத்தின் சிறப்பு இன்னும் மக்களால் போதிய அளவு புரிந்து கொள்ளப் படவில்லை என்றும் டாக்டர் சம்பூர்ணானந்த் கூறுகிறார். தற்போது வேதத்தில் பல அறிஞர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள். எனினும் இவர்கள் சமய நம்பிக்கையற்றவர்களாக, புத்தி பூர்வமாகவே ஆராய்ச்சி முறையில் விஷயத்தைப் பார்க்கிறார்கள் என்பதை அவர் துணிவுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

குலபதி முன்ஷி அவர்கள் கண்ணன் கதையைப் புதுக்கி எழுதும் 'கிருஷ்ணாவதாரத்தில்' நாலாம் பாகம் தொடங்கியுள்ளது.

மலரின் கடைசிப் பகுதியில் காஞ்சிக் கோவில்களைச் சில்பியின் சித்திரங்களிலும் துருவன் சரிதையை கதைப் படங்களாகவும் கண்டு மன நிறைவு கொள்கிறோம்.

முன்ஷி அவர்களும், 'ஜர்னலி'ன் ஆசிரியர் ஸ்ரீ ராமகிருஷ்ணன் அவர்களும் பவனத்தின் பணியைப் பற்றி இதயபூர்வமாக எழுதியிருக்கிறார்கள். இப்படியே 'பவன்ஸ் ஜர்னல்' மேலும் பல்லாண்டுகள் தனது தெய்வீகப் பணியைத் தொடர வேண்டுமென்பதே நம் பிரார்த்தனை.

---

*பிரசுரம்: Bhavan's Journal, Chowpathy, Bombay - 7



சிரிக்கவும் சிந்திக்கவும்



"நீங்கள் நீங்களாகவே இருங்கள்" என்று பொதுமக்களுக்குப் புத்திமதி கூறி விளம்பரம் செய்யும் தட்சிண ரயில்வேயின் டிக்கட் பரிசோதகர்கள் பிரயாணிகளை 'நீங்கள் நீங்கள்தானா?' என்று விசாரிக்கும் போது, ஒரு வேதாந்தியாக இருந்தால் "நான் நானல்ல... அஹம் பிரம்மாஸ்மி! நான் பிரம்மமாயிருக்கிறேன்" என்பார்.

ரயில் வண்டியில் பிரயாணம் செய்ய ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரில் இடம் ரிஸர்வ் செய்வது சம்பந்தமாய் ரயில்வே அதிகாரிகள் அளவுக்கு மீறி நாடக முறையில் அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 'பிரயாணிகளே! நீங்கள் எங்கள்மீது ஓயாமல் புகார் செய்து வந்தீர்களல்லவா? இதோ பழிக்குப் பழி வாங்குகிறோம்!' என்று சொல்வது போல் இருப்பதாகப் பொதுமக்கள் நினைக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

'மெட்ராஸ் ரப்பர் பாக்டரி' கம்பெனியார் சென்னையில் உள்ள தங்கள் காரியாலயத்தில் ஒரு கண்காட்சி நடத்தினார்கள். அதில், ஆக்டோபஸ் என்ற பயங்கர, விகாரமான பிராணியை ஒரு இருட்டறையில் வைத்துக் காண்பித்தார்கள். அது ரப்பரால் செய்யப்பட்டது! அதை இயங்க வைத்தும், அது பேசுவது போல் செய்தும் காண்பித்தார்கள். அது தன்னுடைய எட்டுக் கைகளாலும் எதையும் பலமாகப் பற்றிக் கொள்ளும். அது போன்று அவர்கள் தயாரிக்கும் மான்ஸ்பீல்ட் ரப்பர் டயர்களும் தரையைப் பற்றிக் கொள்ளும் என்பதை எடுத்துக் காட்டும் காட்சி இது.

சாதாரண ட்வைன் நூலளவு பருமனே உள்ள நைலான் நூல்களைச் சங்கிலி போல் கட்டி அதிலிருந்து ஓர் ஊஞ்சலைத் தொங்க விட்டிருந்தார்கள். அது ரப்பர் ஊஞ்சல். அதில் ஒரு பெண் உட்கார்ந்து ஆடினாள். அவள் புன்னகை புரிந்து கொண்டும், வெட்கப்பட்டுக் கொண்டும் பேசியதிலிருந்து அவள் ரப்பர் பெண் அல்ல என்று தெரிந்தது. எடை அறுபது அறுபத்தைந்து பவுண்டு இருக்கலாம். நைலான் நூல்கள் எவ்வளவு உறுதியானவை என்று இந்தக் காட்சியிலிருந்து தெரிந்தது. ரப்பர் டயர் அமைப்பில் நைலான் நூல்களும் சேர்ந்து கொள்கின்றன.

பழைய காலத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிய ரகசியத்தை ஒருவர் மற்றொருவருக்கு இலேசில் சொல்லிக் கொடுத்துவிடமாட்டார். அப்படிச் சொல்லும்போதும் அந்த ரகசியத்தை வெளியிட்டால் தலை சுக்கு நூறாக வெடித்துப் போகும் என ஒரு சாப நிபந்தனை விதிப்பார். இங்கே ரப்பர் டயர் செய்யும் விதத்தை விண்டு விண்டு எடுத்துக் கூறினார்கள். ஒரு டயர் செய்தும் காண்பித்தார்கள். நடுவில் ஒருவர் வேடிக்கையாகவும் உற்சாகமாகவும் பேசி வந்தார். நாகரிகமாகவும், விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு ரசிக்கும்படியாகவும் இருந்தது.

அரசாங்கத் தொழில் ஸ்தாபனங்களிலும் விஷயங்களை நன்றாக எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் தனிப்பட்டவர் துறையிலுள்ள ஸ்தாபன அதிகாரிகளிடம் காணப்படும் அந்த உற்சாகம், அந்த ஹாஸ்ய உணர்ச்சி அவர்களிடம் வெளிப்படக் காணோம். இத்தனை செலவாயிற்று, இத்தனை டன் உற்பத்தி, இன்னும் எத்தனை உற்பத்தியாகும் என்ற வரட்டுப் புள்ளிவிவரங்களை வாரி வீசுகிறார்கள். தாங்கள் வேலையிலிருப்பதற்கு ஏதோ சமாதானம் சொல்வது போல் தோன்றுகிறது.

ஃ ஃ ஃ

ரப்பர் காட்சியைப் பார்த்த அதே தினம், ராஜாஜி ஹாலில் நடைபெற்ற மரச் சாமான்களின் காட்சியையும் பார்த்து வைத்தேன். சென்னை தொழில் இலாகா இதை நடத்தியது. அங்கிருந்தவர்கள் மரம் மாதிரி இருந்தார்களே யன்றி, மரச்சாமான்கள் எல்லாம் பேசுவது போலிருந்தன! எல்லாம் நல்ல மரத்தில், முதல்தரமான வேலைப்பாடுள்ளவையாயிருந்தன. விலையும் நியாயம்தான்.

கட்டில் ஒன்றில் இரண்டு சிப்பந்திகள் நிம்மதியாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சி ஒரு நாவலின் கதையை ஞாபகப்படுத்தியது.

லண்டனில் ஒரு பெரிய சாமான் கம்பெனிக்காரர்கள் தாங்கள் புது விதமாகத் தயாரித்திருந்த ஒரு கட்டிலைப் பிரசித்தமானதாக்க விரும்பினார்கள். கட்டில் இரண்டு பேர் படுத்துக் கொள்ளக் கூடியது.

நல்ல அழகான ஓர் யுவதியையும் யுவனையும் பொறுக்கி எடுத்து அவர்களைச் சம்பளத்துக்கு அமர்த்திக் கொண்டார்கள். கடையின் முன் பக்கம் கண்ணாடி அறை ஒன்று தயாரித்துக் கட்டிலை அதில் போட்டார்கள். பெண்ணையும் ஆணையும் நன்றாக உடை தரித்துக் கொள்ளச் செய்து அதில் படுத்துக் கொள்ளச் செய்தார்கள். அவர்கள் அதில் குறிப்பிட்ட சில மணி நேரங்கள் படுத்திருந்து புத்தகங்கள் படிப்பார்கள், நடுநடுவே பேசிச் சிரிப்பார்கள். இந்தச் சம்பவம் விரஸம் எதுவும் மனதில் படாதிருக்கும் முறையில் எழுதப்பட்டிருந்தது. "பிரிட்டனில் கணவன் மனைவிக்குமிடையே மனஸ்தாபங்கள் அதிகரித்து வருகின்றன, விவாகரத்துக்கள் அதிகரித்து வருகின்றன; இதற்கெல்லாம் காரணம் தம்பதிகள் தனித் தனியாக சிறிய ஒற்றைக் கட்டிலில் படுத்துக் கொள்வது தான். எங்கள் இரட்டைக் கட்டிலை வாங்கி உபயோகியுங்கள்" என்று கம்பெனி விளம்பரப் பிரசாரம் செய்தது.

தம்பதிகளுக்குள் மனத்தாங்கல் ஏற்படும் போது உட்கார்ந்து கொள்ளக் கூடிய ஒரு ஸோபா பற்றி நான் ஒரு யோசனை சொல்கிறேன். ஸோபா முதுகின் ஒரு பக்கத்தில் ஓர் ஆசனமும், இன்னொரு பக்கத்தில் ஓர் ஆசனமும் அமைத்தால் கோபம் தீரும்வரை கணவனும் மனைவியும் அதில் தனித் தனியே உட்கார்ந்திருக்கலாம்.

— என். ஆர்.

ஊன்றுகோல்

கஜமுகன்



அதோ யார் வருகிறது? கம்பை ஊன்றிக் கொண்டு மெல்ல மெல்ல வரும் அந்தக் கம்பீர உருவம் ... யார் அம்மாவா? என் அம்மா தடிக் கம்பு பிடித்து நடக்கும் காலம் வந்துவிட்டதா? ஐயோ! என் மனம் பதறுகிறதே, நெஞ்சம் துடிக்கிறதே, அம்மா... இப்படித் தளர்ந்து விட்டாயா? உன் கால்கள் ஓய்ந்துவிட்டனவா? உன் நடை அழகையும் வேகத்தையும் மிடுக்கையும் கண்டு வியந்தது போக அந்தத் தளர் நடையைக் கண்டு கலங்கும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிட்டதே!

''என்னடா ராஜா, அப்படி வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாய்?'' அம்மா என் அருகே வந்து கேட்டாள்.

''உன் மூன்றாவது காலைப் பார்க்கிறேன் அம்மா. ஏனம்மா பிடியில்லாமல் நடக்க முடியவில்லையா?''

''அப்படி யெல்லாம் ஒன்றுமில்லையடா, ராஜா. வயசாகி விட்டது. எங்கேயாவது தடுக்கி விழுந்து என்னைத் தூக்கிக் கொள்ளும் சிரமத்தை உங்களுக்கெல்லாம் வைக்கக் கூடாது என்று முன் ஜாக்கிரதையாக ஒரு கம்பை எடுத்துக் கொண்டேன். அதுவும் நன்றாகத்தான் இருக்கிறது இல்லையா?'' என்றாள்.

என் உள்ளத்து உணர்ச்சிகளை அடக்க முடியவில்லை. கண்களில் நீர் பொல பொல வென வந்து விட்டது. ''ராஜா, ஏன் அழுகிறாய்? நீ என்ன சிறு குழந்தையா? கண்ணீர் விடும்படியாக என்ன வந்துவிட்டது?''

''அம்மா, என்றுமே உனக்கு நான் குழந்தைதான். உன் வயோதிகத்தை நான் பார்க்க விரும்பவில்லை. உன் தளர்ச்சியை நான் காண இஷ்டப்படவில்லை. ஊன்றுகோலின்றி கம்பீர நடையோடு நீ வருவதைத்தான் நான் பார்க்க விரும்புகிறேன். என் அம்மா கிழவி என்று பட்டம் வாங்குவது எனக்குப் பொறுக்காது.''

அம்மா இடி இடி என்று சிரித்தாள். அந்தச் சிரிப்பின் நாதம் இருக்கிறதே அதிலே முதுமையின் ஒலியைக் காணோம். இளங் குமரிக்குரிய முத்தொலியாகவல்லவா இருக்கிறது! சிரிப்பைக் கேட்டால் அம்மாவுக்கு வயதாகி விட்டது என்று எவருமே சொல்ல முடியாது. ஏன் அந்த முகத்தில்தான் முதுமையின் கோடுகள் உண்டா? பசு மஞ்சள் பூசி மங்கள ஜோதியாக விளங்கும் அந்த முகத்தைப் பார்த்தாலே கவலைகள் யாவும் பறந்திடுமே!

''அம்மா, உன் முகம், உன் சிரிப்பு எல்லாம் அப்படியே இருக்கின்றன, ஆனால் நடை .....அது ஏன்...?''

''ராஜா, உள்ளம் இளமையாக இருக்கிறதடா, ஆனால் உடலில் இளமை குன்றி முதுமை பரவி விட்டது. நான் வாழ்க்கையில் வெகுதூரம் நடந்துவிட்டேனடா ராஜா. எல்லைக்கு வந்துவிட்டேன். இனிமேல்....''

''அம்மா, இப்படி யெல்லாம் அச்சானியம் போலப் பேசாதே. நீ என்றென்றும் வாழ வேண்டும்.''

''உன்னைப் போலப் பிள்ளையை விட்டுப் போக எனக்கு மனம் வராதுதான். ஆனால் உலகத்து நியதிக்கு நானும் கட்டுப்படவேண்டியதுதானே! எழுபது வயதாகிவிட்டது. என்னைப் போலவே எல்லோரும் இருக்க ஆரம்பித்தால் பூதேவி பாரம் தாங்க மாட்டாளடா.''

''அம்மா, போதும். தடிக்கம்பு ஊன்றும் படியாகி விட்டதே என்றால் நீ மரண வாயிலையே எட்டிப் பார்க்கிறேன் என்கிறாய்! உன் தத்துவத்தையெல்லாம் நீயே வைத்துக் கொள். எனக்கு ஆபீஸுக்கு நாழியாகிறது.''

''ராஜா...உன்னிடம் ஒன்று கேட்கிறேன் கோபித்துக் கொள்ளாதே!''

''ஒன்றென்ன, ஆயிரம் கேள்...''

''ஆயிரமெல்லாம் வேண்டாமடா. அந்த ஒன்றுதான் வேண்டுமடா. அவர் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து என் மாங்கல்ய பாக்கியத்துக்குரியவரிடம் என்னை அழைத்துப் போவாயா?''

அம்மா எனக்கு நினைவு தெரிந்த நாளி லிருந்து கேட்கும் கேள்விதான் இது. அவள் வயதோடு முதுமையாகி விட்ட வேண்டு கோள். நானும் எத்தனையோ முயன்றும் அவளது ஆசையைப் பூர்த்தி செய்ய முடிய வில்லையே! எவ்வித ஆதரவுமின்றி தனித்து விடப்பட்ட ஒரு பெண். வெறும் மன வலி மையிலேயே இந்த உலகத்து இடுக்கண்களை யெல்லாம் வெற்றி கண்டு தன் மகனை ஆளாக்கி விட்டாள். இந்த உலகத்தைப் பொறுத்தவரையில் அவள் பணி பூர்த்தியான மாதிரிதான். மறு உலகத்துக்குப் போகும் போது அவள் மனக் குறைவுடன் போக விரும்பவில்லை. மஞ்சள் சரட்டுடனேயே சிதையேற விரும்புகிறாள். இந்த விருப்பத் துக்கு ஆதாரமான என் தந்தையை நான் தேடியே ஆகவேண்டும். அவள் கோல் பிடித்து நடக்க ஆரம்பித்தது இந்த முயற்சியின் அவசரத்தையும் அவசியத்தையும் எனக்கு எடுத்து உணர்த்தி விட்டன.

''அம்மா, இந்த உன் விருப்பத்தை நான் பூர்த்தி செய்யாவிட்டால் இந்த உலகத்தில் நல்லவர்களுக்கே இடமில்லை என்றாகிவிடும். உன் ஆசையை இத்தனை வருஷங்களாக மறந்திருந்தாயோ என்று அசிரத்தையாக இருந்து விட்டேன். நீ கம்பு ஊன்றி நடக்க ஆரம்பித்துவிட்ட பின் நான் அயரக்கூடாது. இன்றே அதற்கு ஏற்பாடு செய்கிறேன் அம்மா'' என்று அவளுக்கு உறுதிமொழி கூறி விட்டு அலுவலகத்துக்குக் கிளம்பிவிட்டேன்.

என் தாய் கருவுற்றிருந்தபோது என் தந்தை மறைந்தவர்தான். பிறகு அவரைக் காணவேயில்லை. என் தாய் அழகிதான். குடும்ப நிர்வாகத்திலே மிகவும் தேர்ந்தவள். மனைவிக்குரிய சகல லட்சணங்களும் பொருந் திய அவளை விட்டு அவர் ஓடுவானேன்? என் தாயாருக்கும் அந்தக் காரணம் புரியவில்லை.

''ராஜா, எனக்கு அப்பா அம்மாகூடக் கிடையாது. அத்தை ஒருத்தி இருந்தாள். அவளையே அடைக்கலம் என்று போய் விழுந்தேன். அவள் தானடா என்னைப் பல வரு ஷங்கள் காப்பாற்றி இந்த வீட்டை என் பெயருக்கு எழுதி வைத்து விட்டுச் செத்தாள். அவள் மட்டும் இல்லாமல் இருந்தால் நீயோ, நானோ இந்த உலகத்தில் இருந்திருக்க மாட் டோம்'' என்று என் தாயார் அடிக்கடி கூறுவாள்.

என் படிப்புக்காக அம்மா தன் உடம்பைச் சக்கை சாறாகப் பிழிந்து உழைத்திருக்கிறாள். என்னென்ன வேலைகள் உண்டோ அவ்வளவும் செய் திருக்கிறாள். அவள் சுறுசுறுப் பும், வெடு வெடு என்ற நடை யும் இத்தனை பலம் இந்த உடம்பில் எங்கிருந்துதான் வந் ததோ என்று வியந்து கொண் டிருப்பேன். அத்தகைய அம்மா இப்போது கோலூன்றி நடக்கும் காலம் வந்து விட்டது என்றால் என் நெஞ்சு பொறுக்குமா?

என் அம்மாவுக்காக நான் மண வாழ்க்கை யையும் விரும்பவில்லை. அவள் எத்தனையோ தடவை சொல்லியும் பிடிவாதமாக நான் மணக்க மறுத்து விட்டேன். என் தாய்க்கும் எனக்கும் இடையே உள்ள அன்பைப் பகிர்ந்து கொள்ள இன்னொருத்தியை அனுமதிக்க என் மனம் இடம் தரவில்லை.

நான் படித்து வேலைக்குப் போன நாள் முதலாக அம்மா என்னிடம் என் தந்தை யைத் தேடுமாறு கூறி வருகிறாள். நானும் எங்கெங்கோ போய் அலைகிறேன். ஏதாவது தடையம் கிடைத்தால்தானே? தந்தை வழி யிலும் உற்றார் உறவினர் கிடையாது. அத னால் அவரைப் பற்றி யாரிடம் விசாரிப்பது?

மன வியாகூலத்துடன் அலுவலகத்துக் குள் நுழைந்தேன். எனது காரியதரிசி விஜயா பரபரப்புடன் என்னை நாடி வந்தாள். விஜயாவும் நானும் இந்த அலுவலகத்தில் பல வருஷங்களாக வேலை செய்கிறோம். அவளுக்கு வயது முப்பத்தைந்துக்கு மேல் இருக்கும். அவளும் ஏனோ மண வாழ்க்கை யைப் பற்றிச் சிந்திக்காமல் இருந்துவிட்டாள். வேலையில் மிகவும் கெட்டிக்காரி. ஒரு காரிய தரிசிக்கு உண்டான அவ்வளவு யோக்யதாம் சங்களும் நிறைந்தவள். வீட்டில் என் தாயார் எப்படி எனக்கு ஒரு குறைவும் வைக்காமல்



பார்த்துக் கொள்வாளோ அது போல் விஜயா என் அலுவலகத்தில் எனக்கு எவ்விதக் குறைவும் இன்றிப் பார்த்துக்கொள்வாள். அவள் குணத்திலும் சரி, நடத்தையிலும் சரி, அப்பழுக்கற்றவள். இனிய குரலில் சிரித்துப் பேசி எல்லோரிடமும் இதமாக நடந்து கொள்ளும் பண்பு கொண்டவள்.

"என்ன விஜயா, ஒரே பரபரப்பாகக் காணப்படுகிறாயே!" என்று கேட்டேன்.

"எனக்கு நாலு நாள் லீவு வேண்டும்."

"உனக்கா லீவு வேண்டும்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டேன். ஏனெனில் அவள் என் அலுவலகத்துக்கு வந்த நாள் முதல் 'லீவு' வேண்டும் என்று கேட்டது ரொம்பக் குறைவு. உடல் நலம் குறைந்து ஆபீஸுக்கு வராமல் இருந்திருக்கிறாளே தவிரச் சாதாரணமாக லீவு என்று கேட்டதே கிடையாது.

அப்படிப்பட்டவள் லீவு வேண்டுமென்று கேட்டால் ஆச்சரியமாயிராதா?

"உன் கணக்கில் இருக்கும் லீவெல்லாம் சேர்த்தால் இப்போதே நீ ரிடையராகி விடலாமே விஜயா" என்றேன் தமாஷாக.

"அதைக்கூட நான் யோசித்துக் கொண்டு தான் வருகிறேன்."

நான் திடுக்கிட்டேன்.

"ஏன், உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?"

"என் வேலைகளெல்லாம் முடிந்துவிட்டன மிஸ்டர் ராஜா."

"என்ன வேலைகள்?"

"என் தம்பி, தங்கைகளைப் படிக்கவைத்துக் கல்யாணம் கார்த்திகை யெல்லாம் செய்து வைத்தாகி விட்டது. அவர்களெல்லாம் தன் வீடு, குடும்பம் என்று போய் விட்டார்கள். இனி நான் யாருக்காக உழைக்க வேண்டும்? என் தந்தை எனக்கு விட்டுப் போன பொறுப்புக்களை யெல்லாம் நிறைவேற்றியாகி விட்டது. ஒன்றே ஒன்றுதான் பாக்கி."

"உன் திருமணம்..."

"அதைச் சொல்லவில்லை. இத்தனை வயசுக்கு மேல் என்னை யார் மணம் செய்து கொள்வார்கள்? இன்னும் ஒரு ஜீவனைக் காப்பாற்றும் பொறுப்பு இருக்கிறது. அவருக்குத்தான் இரண்டு நாட்களாக உடம்பு சரியாயில்லை. அதற்குத்தான் லீவு."

"தாராளமாய்ப் போய்வா. என்னுடைய உதவி தேவையானால் டெலிபோன் செய்!"

ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக தன் வாழ்வின் சுகத்தையே தியாகம் செய்துவிட்டு உழைத்து வருகிறாள் இந்தப் பெண். இத்தனை நாள் அதைக் கூட அவளிடமிருந்து நான் கேட்டறியவில்லை. என் அலுவல்தான் எனக்கு முக்கியமாக இருந்திருக்கிறதே தவிர, அதை நிறைவேற்றுவதில் உழைப்பவர்களின் சுக துக்கங்களை அறிய வேண்டுமென்று நான் முயன்றதில்லையே! சேசே! எத்தனை சுயகாரியப் புலி நான்.

ஒரு அரை மணி நேரம் சென்றிருக்கும். டெலிபோன் மணி அடித்தது. "மிஸ்டர் ராஜா, நீங்கள் கொஞ்சம் உடனே என் வீட்டிற்கு வர முடியுமா?" என்று விஜயா கேட்டாள். நான் என்ன ஏது என்று கேட்காமல் அவள் விலாசத்தைத் தேடி எடுத்துக் கொண்டு டாக்ஸியில் விரைந்தேன்.

அவள் வீட்டு வாசலில் ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று நின்றது.

ஒரு வயதான மனிதரை ஸ்ட்ரெச்சரில் வைத்துத் தூக்கிக் கொண்டு போனார்கள்.

"மாமா, மாமா" என்று விஜயா கதறி அழுதாள்.

"விஜயா" என்று நான் அழைத்ததும், "வந்து விட்டீர்களா சார். மாமாவுக்கு உடம்பு ஜாஸ்தியாகி விட்டது. வேறு ஒருவரும் துணை இல்லை. அதுதான் ஆம்புலன்ஸுக்குப் போன் பண்ணிவிட்டு உங்களுக்கும் டெலிபோன் செய்தேன். எனக்கு இத்தனை வருஷங்களாகத் துணையாக இருந்தவர்; அவர் பேச்சு மூச்சற்றுப் போகவே இந்த உலகமே என்னைக் கைவிட்டது போலாகி விட்டது. என் நெஞ்சுறுதி யெல்லாம் கரைந்தோடிவிட்டது. அதுதான் உங்களைக் கூப்பிட்டேன்" என்றாள்.

இருவரும் அவளது மாமாவுடன் ஆம்புலன்ஸ் வண்டியிலேயே அமர்ந்துகொண்டோம். அந்தப் பெரியவருக்கு எழுபத்தைந்து வயதிருக்கும். உடம்பெல்லாம் எலும்புக்கூடாக இருந்தது. சரீரம் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கி ஒடுங்கிக் குறுகிவிட்டது. முகத்தில் மட்டும் ஒரு களை இருந்தது. சுவாசம் நிற்கவில்லை. கைகால்களெல்லாம் சூம்பிப் போயிருந்தன.

"விஜயா, இவருக்குக் கைகால் சுவாதீனம் கிடையாதா?"

"ஆமாம். நான் பிறப்பதற்கு முன்பிருந்தே இப்படித்தான் இருக்கிறார். இவரைக் காப்பாற்றுவதற்காகத்தான் நான் மண வாழ்வைப் பற்றியே நினைக்கவில்லை. இவர் உடல் ஊனமுற்றிருந்தாலும் மனோதிடமிருந்தவர். அதுவே என் குடும்பத்துக்குத் துணையாக இருந்து வந்திருக்கிறது. என் தந்தை இறப்பதற்கு முன் என்னிடம் 'விஜயா, உன் தம்பி தங்கைகளைவிட, பாலகோபாலைத்தான் நீ அதிகம் கவனிக்கவேண்டும். அவனுக்குத்தான் நாதி கிடையாது' என்று சொன்னார்.

"என் தந்தைக்குப் பிறகு நான்தான் அவருக்கு ஊன்றுகோலாக இருந்து வந்திருக்கிறேன். இப்போது அவரும் என்னை விட்டுப் பிரியும் காலம் வந்து விட்டது."

"விஜயா, உன்னைப் போல ஒரு தன்னலமற்ற பெண்ணைப் பார்க்கவே முடியாது. உலகத்துக்கு எவ்விதப் பலனுமற்ற ஒரு மனிதனுக்காக உன் இளமையை யெல்லாம் பலி கொடுத்து விட்டு நிற்கிறாயே. உன்னால் எப்படி இந்த மனத் திண்மை பெற முடிந்தது?"

ஆஸ்பத்திரிக்கு வந்ததும் விஜயாவின் மாமாவை உள்ளே எடுத்துச் சென்றார்கள். அப்போது மற்றொரு ஆம்புலன்ஸ் வந்து நின்றது. அதிலிருந்து எனது அடுத்த வீட்டுக்காரர் குதித்தார்.

"ராஜா, நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்? உங்கள் தாயார் பாத்ரூமில் வழுக்கி விழுந்து எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கும் போலிருக்கிறது. உங்களுக்கு டெலிபோன் செய்தேன். நீங்கள் எங்கோ அவசரமாகப் போயிருப்பதாகச் சொன்னார்கள். சரி, தாமதிக்கக் கூடாது என்று நான்தான் ஆம்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி

ப்யூர் சில்விக்ரீன்



கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



SP/1/P/8/64

இருமலை அகற்றுக

இருமல்

அகல விரைவான, கெடுதலற்ற, நிச்சயமான நிவாரணி

க்ளைகோடின்

டெர்ப் வசாகா

இந்த ஆறு காரணங்களால், க்ளைகோடின்
இருமலுக்கு சிறந்த நிவாரணி:



1. எந்தவிதமான இருமலுக்கும், எப்பொழுதும் சிறந்தது
2. மருத்துவர்களால் அனுமதிக்கப்பட்ட சரியான பார்முலா
3. சிறுவரும் பெரியோரும் விரும்பும் இனிய சுவை
4. சிபார்சு செய்யப்பட்ட அளவில் உட்கொண்டால் கெடுதல் செய்யாதது
5. 4-வித சிக்கனமான சைசுகளில் கிடைக்கிறது
6. அலம்பிக்கின் நம்பகமான தரம்

Alembic

30 வருடங்களுக்கு மேலாக இருமலுக்கு வீட்டிலேயே குணமளிக்கும் நிவாரணி

GTV 1282 TAM EVEREST

புலன்னை வரவழைத்து அவர்களை அழைத்து வந்தேன்....''

''அம்மா!'' என்று அலறிக்கொண்டே ஓடினேன்.

என் தாயார் வேதனையால் முனகிக் கொண்டிருந்தாள். என் குரலைக் கேட்டதும் ''ராஜா, வந்துவிட்டாயா?'' என்று அரற்றினாள்.

விஜயாவையோ அவளுடைய மாமாவையோ பற்றி நான் நினைக்கவில்லை.

தாயாரைக் கொண்டு போய்ப் பரிசோதனை செய்து எலும்பு முறிவுக்கு வேண்டிய சிகிச்சை செய்து வார்டில் கொண்டு சேர்ப்பித்தார்கள். பக்கத்துப் படுக்கையில் விஜயா



'' உங்களுக்குப் பிடித்தது?''
''படாதிபதியின் செக்!''
'' பிடிக்காதது?''
'' அது பாங்கிலிருந்து திரும்புவது!''

வின் மாமா இன்னும் மூர்ச்சை தெளியாமல் படுத்திருந்தார். விஜயா என்னைப் பார்த்ததும் ஓடிவந்தாள்.

''கேள்விப்பட்டேன். உங்கள் தாயாருக்கு எப்படி இருக்கிறது?''

''பிளாஸ்டர் போட்டிருக்கிறார்கள். வயதான தேகம். எலும்பு ஒட்டுமோ ஒட்டாதோ? அம்மா, இவள்தான் விஜயா. என் காரியதரிசி. பாரிச வாயுவால் கைகால் சுவாதீனமற்ற தன் மாமாவுக்காகத் தன் வாழ்க்கையையே தியாகம் செய்தவள் அம்மா.''

''இங்கே வாம்மா. உன்னைப் பற்றி ராஜா சொல்லுவான். ஆனால் இது எனக்குத் தெரியாது. அதோ படுத்திருக்கிறாரே அவரா உன் மாமா?'' என்று என் தாயார் அந்தப் பக்கம் பார்த்தாள். அவள் கண்கள் சிறிது நேரம் அந்தக் கட்டிலையே நோக்கின. அவை திடீரென்று ஒளி வீசுவது போல் இருந்தது.

''ராஜா!'' என்று கூவினாள்.

நான் பதைபதைத்து ''என்னம்மா, கால் வலிக்கிறதா? என்ன செய்கிறது?'' என்றேன்.

''உன் அப்பாவைப் பார்த்துவிட்டேன்டா. அதோ அதுதான்டா உன் அப்பா. என் ஆசையைப் பூர்த்தி செய்துவிட்டாய். என்னை அவரிடம் அழைத்துப் போ. கட்டிலோடு நகர்த்து...''

''என்னம்மா இது. அவர் பெயர் பாலகோபாலல்லவா? அப்பா பெயர் வெறும் கோபாலன்தானே அம்மா?''

''அவர்தான்டா உன் தந்தை. ஆளை மறைந்து வாழும்போது பெயரை மாற்றிக் கொண்டதில் என்ன வியப்பு? அம்மா விஜயா, உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். என் மாங்கல்யத்தைக் காப்பாற்றுவதற்காக நீ எத்தனை பெரிய தியாகம் செய்திருக்கிறாய்? என் மகன் எனக்காக மண வாழ்க்கையில் ஈடுபடாதது கூடப் பெரிய தியாகம் இல்லையம்மா. நீ செய்ததுதான் மகா தியாகம்.''

''நீங்கள் என்னம்மா சொல்கிறீர்கள்?''

''இவர் உன் மாமா என்று சொல்கிறாயே, இந்த மனிதர், ராஜாவின் தந்தையம்மா. நாற்பத்து ஐந்து வருஷங்களுக்குமுன் மறைந்தவர்... இவர் எப்படியம்மா உனக்கு மாமா? இவருடன் உடன் பிறந்தவர் யாரும் கிடையாதே...''

''அதுகூட என் தகப்பனார் இறப்பதற்கு முன் தானம்மா எனக்குத் தெரியும். சுமார் முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் என் தந்தை வெளியூர் போயிருந்த போது இந்தப் பாரிச வாயு நோயாளியை எங்கள் வீட்டிற்குக் கூட்டி வந்தார். இவர் தமக்கு உற்றார் உறவினர் யாருமில்லை என்று சொல்லவே எங்கள் வீட்டு மனிதராகவேவாழ்ந்தார். நாங்கள் அவரை மாமா என்றே அழைத்தோம். தந்தையை இழந்த எங்களுக்கு ஆண் துணை என்ற பெயரில் வீட்டில் இருந்து வந்தார். பாசத்தின் பிணைப்பால் அவரைத் தனியேவிட மனமில்லை. இப்போது காலன் அவரை அழைத்துப் போய் விடுவான் போலிருக்கிறது...''

''அப்படிச் சொல்லாதேயம்மா...''

என் தாயாரை அந்த மனிதரின் கட்டிலருகே கொண்டு போனேன். என் தாய் அவரது கால்களையும் கைகளையும் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

தான் நிரந்தரமாக ஊனமுற்று விட்டோம் என்றும் இனிக் குடும்பத்துக்குப் பயனில்லை என்ற ஒரு முடிவுடன் கட்டிய மனைவியைத் துறந்த அவரது செயலை என்றும் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படியும் மனிதர்கள் மனம் விசித்திரமாக வேலை செய்யுமா?

என் தந்தைக்கு வெகு நேரம் கழித்துப் பிரக்ஞை வந்தது. சுற்று முற்றும் பார்த்தார். 'விஜயா' என்று அழைத்தார்.

அவள் ஓடி ''மாமா'' என்று அருகில் அமர்ந்து கொண்டாள். அவரது கண்கள் பக்கத்துக் கட்டிலை நோக்கின.

''இது யார் இவ்வளவு அருகில் போட்டிருக்கிறது?''

''உங்கள் மனைவி மாமா.''

அவர் பதிலேதும் பேசவில்லை. விஜயாவைப் பரிதாபமாகப் பார்த்தார். ''மாமா, இதோ பாருங்கள், உங்கள் பிள்ளை ராஜா!'' அவர் என்னைப் பார்த்தார். கண்களில் மளமளவென்று நீர் வந்துவிட்டது. என்னை அருகில் கூப்பிட்டார். நா புரள மறுத்தது. கஷ்டப்பட்டு ''என்னை மன்னித்துவிடு...விஜயாவைப் பார்த்துக்கொள்... இனி நீதான் அவளுக்கு ஊன்றுகோல்'' என்று கூறினார். அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை.

அம்மாவை எழுப்பினேன். மூச்சுப் பேச்சைக் காணோம். அவள் நீண்ட நித்திரை போய்விட்டாள். பிணக்குற்ற மனைவிபோல பேசாமலே போய்விட்டாள். அவளது மாங்கல்யத்தை இழக்காமலே போய்விட்டாள்.

லோக சஞ்சாரம்



கரும்புத் தீவில் கம்பனும் வள்ளுவரும்



"நீங்கதான் கோபாலசாமியா?"

"ஆமாம்! நான்தான்."

"அத்தாட்சி?"

"இதோ! என் பெட்டி மேல் பெயர் எழுதியிருக்கிறது! இந்தப் பெயர் போட்டு எனக்கு வந்த கடிதம் பையிலே இருக்கிறது. கையெழுத்து வேண்டுமானாலும் போடுகிறேன். ஒத்திட்டுப் பார்க்கலாம்."

"சரி சரி! 'லக்கேஜ்' கொஞ்சம் அதிகமாக இருக்கும்போலிருக்கிறதே!"

"அதிகமாக இருந்த அரை கிலோகிராமிற்குக் கட்டணம் கட்டி ரசீது வாங்கிவிட்டேன்! பார்க்கிறீர்களா?"

"ரொம்பச் சரி! நீர் உம் 'பெர்த்'தில் சௌகரியமாக ஏறிப் படுக்கலாம்!"

இந்த ரீதியில் ஒரு பிரயாணிக்கும் ஒரு ரயில்வே உத்தியோகஸ்தருக்கும் நம்முடைய ரயில் நிலையங்களில் சம்பாஷணை நடப்பது இப்போது சகஜம். ஆனால் பிரயாணக் கட்டணமோ, ரிசர்வேஷனோ, மூட்டை முடிச்சுகளுக்கு உச்ச வரம்போ, எதற்குமே கவலைப்படாமல் சர்வ மித்திர பந்துக்களுடன் ரயில் கூரைமேல் கூடத் தடுக்கப்படாமல் பிரயாணம் செய்யக் கூடிய நாடு ஒன்று இந்த உலகத்தில் இருக்கிறது என்று பலருக்குத் தெரியாது. இப்போது தெரிந்துகொள்ளலாம், அது ஃபிஜி தீவு என்று!

ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த 'கலோனியல் ஷுகர் ரிஃபைனரி கார்ப்பரேஷன்' என்ற ஸ்தாபனம் கரும்பு வளம் நிறைந்த பிஜித் தீவுகளில் கரும்புத் தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்து, கரும்பு தயாரித்து ஏற்றுமதி செய்ய நூற்றி இருபது மைல் நீளத்திற்கு ரயில் பாதை அமைத்துக் கொண்டிருக்கிறது. அந்த ரயில் பாதை போடுவதற்கான நிலத்தை அந்த ஸ்தாபனம் விலை கொடுத்து வாங்க இயலவில்லை. காரணம், ஃபிஜி நாட்டவர்கள் எந்தக் காரணம் கொண்டும் தங்கள் நிலத்தை விற்கக் கூடாது எனச் சட்டம் இருக்கிறது. ஆகவே நிலத்தின் விலைக்குப் பதிலாக இலவசப் பிரயாணச் சலுகையை அளித்திருக்கிறது. அதற்காகவே கூட்ஸ் வண்டிப் போக்கு வரத்தைத் தவிரத் தினசரி பிரயாணிகள் வண்டியையும் ஓட்டுகிறார்கள்.

இது போன்ற ஃபிஜித் தீவுகள் சம்பந்தப்பட்ட பல சுவாரஸ்யமான தகவல்களை, சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த அந்த நாட்டுப் பத்திரிகை ஆசிரியரான 'சாமுவேல் லாரன்ஸ் பெர்லிக்'கைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

சாமுவேல் பெர்லிக் சாதாரண ஃபிஜித் தீவுப் பிரயாணியாக வரவில்லை என்பது குறிப்பிட வேண்டிய விஷயம். ஃபிஜியையும் தமிழ் நாட்டையும் இலக்கியத்தின் மூலம் இணைக்கும் பாலமாக விளங்குபவர் அவர். ஆம்! திருக்குறளையும், கம்பராமாயணத்தையும் ஃபிஜி பாஷையில் மொழிபெயர்த்திருக்கிறார். இத்தனைக்கும் அவருக்குத் தமிழ் தெரியாது. ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் அவருக்குத் துணையாக இருந்தன. ஆனாலும் தேமதுரத் தமிழோசையையும் ஒலியையும் செவிகளில் வாங்கிக் கொண்டேதான், அவர் அந்த ஓசை நயத்திற்கொப்பத் தம் பாஷையையும் கையாண்டிருக்கிறார். இந்த மொழிபெயர்ப்பு ஆசைக்கு அவருக்கு 'கக்களாம் பரதரம்' சூட்டியவர் திரு பால கணபதி அவர்கள். தமிழ் நாட்டிலிருந்து ஃபிஜிக்குப் போய் வாழும் தமிழன்பர். சாமுவேல் பெர்லிக் செவிகளில் தமிழோசையை ஒலிக்கிறவரும் அவர்தான். சாமுவேல் பெர்லிக் தமது மொழிபெயர்ப்பைப் படித்துக் காண்பித்தார். பொருள் புரியாதபோனாலும் அதில் அருள் இருப்பதை உணர முடிகிறது.

ஏறத் தாழ ஆறாயிரம் மைல்களுக்கப்பால் பசிபிக் மகாசமுத்திரத்தில் இருக்கும் ஃபிஜித் தீவுவாசிகளின் தாய்மொழிக்குப் பிரத்தியேக லிபி கிடையாது. ரோமன் லிபியைத்தான் உபயோகிக்கிறார்கள். ரா, ரு ஒலிப் பிரயோகங்கள் அதிகமாக இருக்கின்றன. ஜனத்தொகை சுமார் ஐந்து லட்சம். ஆனால் ஃபிஜியர்களைப் போல இரண்டு மடங்கு இந்தியர்கள் அங்கு வசிக்கிறார்கள். இந்தியர்கள், ஃபிஜியர்கள், ஐரோப்பியர்கள், சீனக்காரர்

என்ற வரிசைக் கிரமத்தில்தான் ஜனத் தொகை எண்ணிக்கை அமைந்திருக்கிறது.

ஃபிஜித் தீவு என்பது ஒன்றல்ல இரண்டல்ல! சுமார் இருநூற்றி ஐம்பது தீவுகளை ஒன்றாகக் கொண்டது. இவைகளில் நூற்றுக்கு மேற்பட்ட தீவுகளில் யாரும் வசிப்பதில்லை. தென்னந் தோப்புகள் நிறைந்த அந்தக் குட்டித் தீவுகளை உல்லாச யாத்திரைக்காகப் பயன்படுத்துகிறார்கள்.

பெரிய தீவில்தான் தலைநகரான 'ஸுவா' நகரம் இருக்கிறது. நாற்பது ஆயிரம் மக்கள் வாழும் பெரிய நகரம் அதுதான். 'நந்தி' (Nandi) என்று குறிப்பிடப்படும் அகில உலகப் பாதைகளை இணைக்கும் விமானதளமும் அங்குதான் இருக்கிறது.

ஃபிஜியர்களுக்குப் பிரதான தொழில் விவசாயம்தான். கொஞ்சம் சுகவாசிகளும் கூட. இசை, நாட்டியம் முதலியவற்றில் அதிக ஈடுபாடு உண்டு. அதேபோல் விருந்தோம்பலிலும் அவர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். தங்கள் வீட்டு வாசல்களில் யார் எட்டிப் பார்த்தாலும் அவர்களுக்கு வயிறு நிரம்ப உணவளித்துவிட்டுத்தான் அவர்கள் வந்த விஷயம் பற்றி விசாரிக்கிறார்கள். கரும்பு நிறைய விளைகிறது. குணத்திலும் அவர்கள் கரும்புதான். இங்கிலாந்துக்கும் அடுத்தபடி அமெரிக்காவுக்கும் நிறையச் சர்க்கரை ஏற்றுமதி செய்கிறார்கள்.

1874ம் ஆண்டில் ஃபிஜியர்கள் தாங்களாகவே பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் வந்தார்கள். ஆகவே, ஃபிஜித் தீவுகள் இப்போது பிரிட்டிஷ் காலனியாக விளங்குகின்றன. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் பத்தாந் தேதி அந்த நாட்டவர்களுக்கு விசேஷமான கொண்டாட்ட தினம். பாரதத்தினர் ஆகஸ்டு பதினைந்தாம் தேதியைச் சுதந்திர தினமாகக் கொண்டாடுவது போல ஃபிஜியர்கள் அக்டோபர் பத்தாம் தேதியை பிரிட்டிஷ் ஆதிக்க ஜோதியில் கலந்துகொண்ட மகிழ்ச்சி தினமாகக் கொண்டாடுகிறார்கள்!

அவர்களில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் மாதா கோவில் உண்டு. பள்ளிக்கூடங்களும் நிறைய உண்டு. சர்க்காரால் நடத்தப்படும் வெள்ளையர்கள் உயர்நிலைப் பள்ளி எல்லாம் பக்கத்தில் இருக்கின்றன. எந்தப் பருவத்திலும் இனவேறுபாடு, மத வேறுபாடு என்ற பிரச்னைகளுக்கு இடம் கொடுக்காமல் ஒற்றுமையாக வாழ்க்கை நடத்துகிறார்கள்.

'மெட்ரிகுலேஷன் வகுப்புக்களுக்கு மேல் படிக்க இங்கு வசதியில்லை. உயர் கல்வி பெற விரும்பும் மாணவர்கள் ஆஸ்திரேலி



கணவனும் மனைவியும்



லாயிட் ஜார்ஜ் பிரிட்டிஷ் பிரதமராக இருந்து புகழ் பெற்றவர். சிறந்த பேச்சாளர். அவர் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒரு பெண் அடிக்கடி குறுக்கிட்டாள். லாயிட் ஜார்ஜ் அதைப் பொருட்படுத்தாமல் பேசினார். ஆனால் அந்த அலட்சியத்தைத் தாங்க முடியாத அவள் கூச்சலிட்டுக் கொண்டே எழுந்து, ''நீர் மட்டும் என் கணவராக இருந்தால் உமக்கு நஞ்சைக் கொடுத்திருப்பேன்'' என்றாள். லாயிட் ஜார்ஜ், ''நீ மட்டும் என் மனைவியாக இருந்தால் நானும் வாங்கி மகிழ்ச்சியுடன் சாப்பிட்டிருப்பேன்'' என்றார். அந்தப் பெண் இருந்த இடம் தெரியவில்லை!

யாவுக்கோ, இங்கிலாந்துக்கோ தான் போக வேண்டும்! மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேற முடியாதவர்கள் மட்டும் இந்தியாவுக்கு வந்து மெட்ரிக்குலேஷன் எழுதிப் பாஸ் செய்துவிடுகிறார்களாம்! திரு பேர்லிக் இதை வேடிக்கையாகவே குறிப்பிட்டார்.

கவர்னரைத் தலைவராகக் கொண்ட சட்ட சபைக்கு அந்தந்த இனத்தவர்கள் இனப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஃபிஜியர்கள், இந்தியர்கள், ஐரோப்பியர்கள் தலா நான்கு பேர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இம் மூன்று பிரிவுகளிலிருந்து தலா இரண்டு பிரதிநிதிகளை கவர்னர் நியமனமும் செய்கிறார்.

அதிகபட்ச உபயோகத்திலிருக்கும் மொழி ஹிந்துஸ்தானிதான். அப்புறம் ஆங்கிலம், கடைசிதான் ஃபிஜி பாஷை. பத்திரிகைகளும் இந்தத் தேவையை ஒட்டித்தான் வெளியாகின்றன. பல மொழிப் பத்திரிகைகளையும் ஒருங்கே நடத்தும் ஸ்தாபனம் இங்கு இயங்குகிறது. ஹிந்துஸ்தானிப் பத்திரிகையை வாரத்திற்கு மூன்று முறையும், ஆங்கிலம், ஃபிஜிப் பத்திரிகைகளை வாரத்திற்கு ஒரு முறையும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை மாதத்திற்கு இரு தடவைகளாகவும் பிரசுரிக்கின்றார்கள். தலையங்கக் கருத்துக்களும், கொள்கைகளும் எல்லா மொழிப் பத்திரிகைகளிலும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று அந்தப் பத்திரிகை நிருவாகம் வற்புறுத்துவதில்லை. ஆங்கில மொழிப் பத்திரிகைத் தலையங்கம் ஆதரிக்கும் விஷயத்தை ஃபிஜி மொழித் தலையங்கம் ஆவேசமாக எதிர்க்கும் சந்தர்ப்பங்களும் நேரிட்டிருக்கின்றன.

''எங்கள் நாட்டு மக்கள் கூடி வாழ்வதில் ஆர்வம் காட்டுபவர்கள். எந்தக் காரியத்தையும் பத்து இருபது பேர்கள் கலந்து பேசித்தான் முடிவு காண்பார்கள். பத்திரிகைக்காரனுன என்னால் இதைப் பாராட்ட முடியவில்லை. காரணம் ஒரு பத்திரிகைப் பிரதியை வாங்கி அந்தக் குழுவினர் முழுதும் படித்துவிடுகிறார்கள். அப்புறம் பத்திரிகை விற்பனையை எப்படிப் பெருக்குவது?'' என்று சிரித்துக்கொண்டே குறிப்பிட்டார் திரு பேர்லிக். அவர் 'வக்கலேல்வா–நி–பலிபிகா' என்னும் ஃபிஜி மொழிப் பத்திரிகை ஆசிரியர். ஆசாமி கெட்டிக்காரர். வாரா வாரம் நான்கு நான்கு திருக்குறள் அடிகளை மொழிபெயர்த்துத் தமது பத்திரிகையில் வெளியிட்டு வாசகர்களுக்குக் குறளில் ருசியை உண்டாக்கிவிட்டார். புத்தக உருவில் அதற்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்று நம்புகிறார். டாக்டர் மு.வ.வின் முன்னுரையையும் புத்தகத்திற்கான அட்டையையும் தன்னுடன் எடுத்துச் செல்கிறார்.

''உயர் கல்விக்காக நீங்கள் ஆஸ்திரேலியாவுக்குப் போனீர்களா? அமெரிக்காவிற்கா?'' என்ற கேள்விக்கு அவர் ஒரு பதில் கேள்வி போட்டார். ''நான் ஆங்கிலம் பேசும் பாணியிலிருந்து கேட்கிறீர்களா?'' என்றார். தொடர்ந்து ''நான் மெட்ரிகுலேஷன் வகுப்பிற்குக்கூட வரவில்லை. எல்லாம் அனுபவத்திலும் கிடைத்ததுதான்'' என்றார் பலமான சிரிப்புடன்.

''உலகில் எங்குமே சுதந்திர ஆர்வம் பொங்கி எழும் இந்த நாட்களில் ஃபிஜியர்கள் தங்கள் நாட்டுக்குச் சுதந்திரம் கோரவில்லையா ?''


''இல்லை! நிச்சயமாக இல்லை! அவர்கள் ஆங்கிலேய ஆட்சியிலேயே இருக்க விரும்புகிறார்கள். காரணம் இந்தியர்கள் ஃபிஜிக்குச் சுதந்திரம் வேண்டும் என்கிறார்கள். ஆனால் அவர்கள் அக்கறையெல்லாம் அவர்கள் தாயகத்தில்தான் இருக்கிறது. அவர்களும் தங்களுக்கு வாழ்வும் வளமும் அளித்த ஃபிஜி நாட்டைத் தங்கள் தாயகம் என்று நினைக்கத் தொடங்கினால் ஒருவேளை ஃபிஜியர்களும் அவர்களுடன் சேரலாம்! வெள்ளையர்கள் இந்தப் பிரச்னையில் யார் பக்கமும் சேராமல் நடுநிலைமையாளராக இருக்கிறார்கள். அவர்களுக்கு அது சௌகர்யமாக இருக்கிறது'' என்றார் பேர்லிக்.

'கரும்புத் தோட்டத் துன்பக் கேணியில் துயருற்றிருந்த' இந்தியர்களுக்கு அன்று மகா கவி பாரதி கண்ணீரால் கவிதை எழுதிக் காற்றைத் தூது விட்டார்! இன்று காலம் மாறிவிட்டது. பல இந்தியர்கள் இன்று அங்கு வர்த்தகத்திலும் வாணிபத்திலும் ஈடுபட்டுச் சௌகர்யமான வாழ்க்கை நடத்துகிறார்கள். அந்த நாட்டில் டாக்ஸி ஓட்டும் தொழில் நடத்துபவர்களில் தொண்ணூற்றி ஐந்து சதவிகிதம் இந்தியர்கள்தானும்!

சாமுவேல் பேர்லிக் 'சயாட்ரா' என்று முகமன் கூறி என்னை வரவேற்றார். விடை கொடுக்கும்போது 'பூலா' என்றார். நானும் பதிலுக்கு ஒரு 'பூலா' சொல்லிவிட்டு வந்தேன்.

— திருமூலர்

இதோ
லிமிகால் பிஸ்கட்டுகள்



இனி, வாய்க்கு ருசியாக, மொறுகலான லிமிகால் பிஸ்கட்டுகளை உண்டு பசியாறி உடலையும் இளைக்க வைக்கலாம். காலை, மதிய, இரவு உணவுக்குப் பதிலாக ஏற்க லிமிகால் பிஸ்கட்டுகள் மிகவும் ஏற்றவை. இந்த மாறுதல் உணவை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்.

வீட்டைவிட்டு வெளியே செல்லும் போதும் உங்கள் உணவு முறைத் திட்டம் பாதிக்கப் படாமல் இருக்க ஆறோ ஏழோ லிமிகால் பிஸ்கட்டுகளைக் கையோடு எடுத்துச் செல்லலாம்.

லிமிகால் பவுடர் தயாரிக்கும் முறையில் தான் லிமிகால் பிஸ்கட்டுகளும் தயாரிக்கப்படுகின்றன

ஆறு அல்லது ஏழு லிமிகால் பிஸ்கட்டுகளை ஒரு கப் டீ அல்லது காப்பியுடன் (பால் குறைவாக, சர்க்கரையின்றி) சாப்பிட்டால் திருப்தியளிக்கும், சத்துள்ள ஆனால் கலோரிகள் குறைந்த, ஒரு வேளை பரிபூர்ண உணவுக்குச் சமமாகும். லிமிகால் பிஸ்கட்டுகள் சாப்பிட்டு வந்தால் நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் திகழ்வீர்கள்.

லிமிகால் பிஸ்கட்டுகளையும் லிமிகால் பவுடர் பானத்தையும் சேர்த்து ஒருங்கே சாப்பிடலாம். அல்லது உங்களுக்கு விருப்பமானால் மாற்றி மாற்றியும் உபயோகிக்கலாம்.



இலவசம்! ஒவ்வொரு லிமிகால் பிஸ்கட் டின்னுடனும் ஒரு அழகிய பிளாஸ்டிக் பெட்டி இனாம். இதில் உங்கள் மதிய உணவான 6 லிமிகால் பிஸ்கட்டுகள் சரியாகக் கொள்ளும்!

எடை குறைந்து எடுப்பாய் விளங்க லிமிகால்

ஸாராபாய் கெமிகல்ஸ், தபால் பெட்டி 1688, பம்பாய்-1

சில்லறையில் ரூ. 7/- வரிகள் தனி

Shilpi SC 195 Tam

ஆட்சியும் கொலுக்காட்சியும்



திருப்பழனம் சீனிவாசன்

காட்சி – 1

[விசித்திரப் பிரதேஷ் சட்டசபை; அங்கத்தினர்கள் பையில் ஏதாவது கவண், கல் இருக்கிறதா என்று பரிசோதித்து உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். ஒரு வயோதிக அங்கத்தினர் பையில் பல் செட் இருக்கவே, அதை அனுமதிக்கலாமா எனத் தயங்குகிறார் அதிகாரி. விவாத நேரத்தில் வீராவேசமாகப் பேசிப் பல்லை நறநறவென்று கடிப்பதற்கே போலிப் பற்கள்; யாரையும் தாக்குவதற்கல்ல என உத்தரவாதமளித்த பிறகு உள்ளே நுழைகிறார். சபை ஆரம்பமாகிறது.]

எதிர்க் கட்சித் தலைவர்: விபத்தூரில் கொலுப் படி சரிந்து அதன் காரணமாக மூன்று குழந்தைகளுக்குப் படுகாயமும் பல பொம்மைகளுக்குச் சேதமும் ஏற்பட்ட விவரம் ஆட்சியாளருக்குத் தெரிந்திருக்கும். அதனை விவாதிக்க இந்த அவசரப் பிரேரணையை அனுமதிக்க வேண்டுகிறேன்.

முதன் மந்திரி: விபத்து ஸ்தலத்துக்குக் குறிப்பிட்ட மந்திரி விரைந்து சென்றிருப்பதால் அவரது அறிக்கையும், படிப் பில்லும் வந்த பிறகு இந்த விவாதத்தை எடுத்துக் கொள்ளலாம்.

எ. க. தலை: இது பலருடைய நலன்களையும் உயிர்களையும் பாதிக்கும் விபத்து. வீடு தோறும் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. எனவே இதனை உடனே விவாதித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சபாநாயகர்: அங்கத்தினரது ஆர்வம் எனக்குப் புரிகிறது. எனினும் பூரணத் தகவல்களுடன் மந்திரியார் வந்தவுடன் இந்தப் பிரச்னை எடுத்துக் கொள்ளப்படும்.

(எதிர்க் கட்சிகளில் முணுமுணுப்பு)

காட்சி – 2

[ச ட்டசபை கூடுகிறது: கலாசார மந்திரி விபத்து சம்பந்தமான விவரங்களை வெளியிடுகிறார்.]

மந்திரி: ஒரு குறிப்பிட்ட வீட்டில் அஜாக்கிரதையின் விளைவாக நடந்த சம்பவம்; அவ்வளவு சீரியஸ் அல்ல. குழந்தைகளுக்கு உள்ளூர் ஆஸ்பத்திரியில் உடன் சிகிச்சை அளிக்கப்பட்டது. எனவே இது விவாதத்துக்கு உரியதல்ல.

எதிர்க் கட்சித் தலைவர்: இதனை ஆட்சேபிக்கிறேன். இதோ எனக்கு வந்துள்ள தந்தியில் குறிப்பிட்ட பஞ்சாயத்து போர்டு ஆஸ்பத்திரியில் குழந்தைக்கு முதல் உதவிகூட அளிக்க டாக்டரின்றி, சிறுமியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனைக் கனம் மந்திரி அறிவாரா? (டெஸ்கில் ஒரு குத்து!)

மந்திரி: நேரில் சென்ற எனக்குத் தெரியாத விவரங்கள் அங்கத்தினருக்கு இங்கிருந்தே தெரிந்திருக்கும் 'ஞான திருஷ்டி'யை வியக்கிறேன். விவரங்கள் தந்தால் விசாரணை செய்யப்படும்.

தலைவர்: சர்க்கார் தரப்பின் பரிகாசச் சொல்லுக்கு வருந்துகிறேன். இது சம்பந்தமாக 'நியாய விசாரணை' செய்ய வேண்டுமென வற்புறுத்துகிறேன்.

முதன் மந்திரி: ஓய்வுபெற்ற நீதிபதிகள் யாவருமே ஏதோ ஒரு விசாரணைக் குழுவுக்குத் தலைமை வகிப்பதால், தங்கள் பிரேரணையை ஏற்பதற்கில்லை.

முன்னேற்ற அணி உறுப்பினர் தம்பிராக: வருங்காலத்தில் காட்சி சாலையில் இத்தகைய விபத்துக்களைத் தடுப்பதற்கு மாட்சிமைமிக்க ஆட்சியாளர் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகின்றனர்?

மந்திரி: இனி நவராத்திரி ஆரம்பிக்குமுன் எல்லாக் கொலு ஸ்டாண்டுகளும் சர்க்கார் இன்ஸ்பெக்டர்களால் பரிசீலிக்கப்பட்டுத் தகுதி சர்டிபிகேட் வழங்கப்படும். அதற்குப் பிறகுதான் கொலு வைக்கலாம். இந்த லைசென்ஸ் வழங்க ஒவ்வொரு நகரத்திலும் புதிய இலாகா ஒன்று ஆரம்பிக்கப்படும்.

சிக்கனம் சின்னக் கண்ணு: இதனை ஆட்சேபிக்கிறேன். இது வீண் செலவு. கொலு என்பதே இந்த எமர்ஜன்ஸி நேரத்தில் அநாவசிய ஆடம்பர நிகழ்ச்சி. லட்சுமி பூஜை செய்யும் யாரோ வட இந்தியர்கள் தென்னகத்தில் புகுத்திய சடங்கு; சூழ்ச்சி.

ஸ்ரீமதி வாணியம்மை: அங்கத்தினரது ஆட்சேபகரமான கருத்துக்களை வாபஸ் பெற வேண்டுகிறேன். ஆழ்ந்த சமயப் பற்றுள்ள குறிப்பிட்ட இனத்தாரின் 'சென்டிமென்ட்'டைப் பாதிப்பதாக இருக்கிறது. நவராத்திரி பூஜை நாமறியாத காலம் தொட்டே வழி வழியாக வரும் பண்பாடு. பார்க்கப் போனால் சமயப் பாதுகாப்பு மந்திரி, நவராத்திரியை மைசூரில் நடத்துவதுபோல் ஒரு சர்க்கார் நிகழ்ச்சியாகவே அமைக்கலாம்.

சின்னக்கண்ணு: வனமஹோத்சவம், காட்டு விலங்கு வாரம், ஈ வாரம்..... என்று சர்க்காருக்கு இருக்கிற தொந்தரவு போதாதென்று இது வேறு. செக்யூலர் ஸ்டேட் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

சபா நாயகர்: அங்கத்தினர்கள் உணர்ச்சி வசப்பட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எ. க. தலைவர்: அப்படியானால் இவர்களது ஆட்சிக் குறைகளைக் கண்ட பின்னும் கொலுப் பொம்மைகளாகச் சும்மா இருக்கச் சொல்கிறீர்களா?

மூ. மந்திரி: தகுதி இருந்தால் எங்களைப் போல் ஆட்சி பாரத்தை சுமந்து கொண்டு நில்லுங்கள்.

எ. க. தலைவர்: அதன் லட்சணந்தான் தெரிகிறதே. வருகிற தேர்தலில் கொலுப்படி போல வீழ்ச்சி அடைவீர்கள்.

ச. நாயகர்: அமைதி.

மந்திரி: விபத்து பற்றி நீங்கள் அடையும் அளவுக்கு நாங்களும் கவலைப்படுகிறோம். இனி கொலு ஸ்டாண்டுகளைச் சர்க்காரே சர்டிபிகேட் செய்து லைசென்ஸ் வழங்கும்.

சுயேச்சை சுப்பு: ஓஹோ, லைசென்ஸ் கோட்டா ஆட்சியா?

மந்திரி: நண்பர் கலாட்டா பண்ண வேண்டாம். இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய இலாகா செலவைச் சரிக்கட்டவே லைசென்ஸ் கட்டணம்.

எ. க. தலைவர்: சரிதான், கொலுப்படி சீர்திருத்தத்தில் இது முதற்படியோ? மொத்தப் படிகளில் ஏதாவது உச்சவரம்பு உண்டா?

மந்திரி: அது பற்றியும் யோசிக்கப்படும். அடுத்தபடியாகக் 'கைத் தொழில் போர்டின் ஆலோசனை'யைச் சர்க்கார் கோரி இருக்கிறது. பலம் பொருந்திய ஸ்டாண்டர்டு ஸ்டாண்டுகளைக் கைத்தொழில் போர்டு தயாரித்து மார்க்கெட் செய்யும்.

ஸ்ரீமதி வாணி: இது அடுத்த ஆண்டுத் திட்டமா? பத்தாண்டுத் திட்டமா?

மந்திரி: உடனடியாக அமுலாக்கப்படும். இதனால் மரக் கட்டுப்பாடு காரணமாக வேலை இழந்த பல தச்சர்களது திண்டாட்டம் குறையும்.

சுயேச்சை: சர்க்கார் ஏஜண்டுகள் பாடு கொண்டாட்டம்!

தம்பிராசு: இது மத்திய தரக் குடும்பத்தினர் வாங்கக் கூடிய அளவில் கணிசமான விலையில் அகப்படுமா? அல்லது இதுவும் தானிய விலைவாசியைப் போல் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்ளுமா?

மந்திரி: அங்கத்தினருக்கு வேதாளப் பழக்கம் இருக்கலாம். எனக்கு இல்லை. ஆகையால் அது சம்பந்தமாக 'அதாரிட்டி'யுடன் பேச முடியாததற்கு மன்னிக்கவும்.

அருள் செல்வன்: ஒரு சந்தேகம்: புதிய மரப் படிகள் நிர்ப்பந்தப்படுத்தப்படுமானால்,



முன்பு கொலுப்படி கட்ட உபயோகிக்கப் பட்ட பழைய டப்பா, ஒடிசல் டேபிள், பலகை முதலியவைகளையெல்லாம் என்ன செய்வது? சர்க்கார் பழைய விலையில் வாங்கிக் கொள்ளுமா?

மந்திரி: இது பற்றிச் சமயம் வரும்போது அறிவும் அனுபவமும் மிக்க தங்கள் ஆலோசனையைக் கோருகிறோம். நிற்க, இந்த ஸ்டாண்டுகள் தயாரிப்பு சம்பந்தமாக எந்த இடத்தில் தொழிற்சாலையை நிறுவுவது என்று 'எக்ஸ்பர்ட் குழு' ஒன்று விரைவில் சுற்றுப் பயணம் செய்யும்.

தங்கராசு: நிச்சயமாக மந்திரியாரின் கிராமத்தில் நிறுவப்படாது என நம்புகிறேன். காரணம் அங்கு மருந்துக்குக் கூட மரம் கிடையாது.

மந்திரி: உண்மை; எங்கள் கிராமம் வெறும் நெட்டை மரங்களை நாட்டுக்குத் தரவில்லை. நல்ல அறிஞர்களைத் தந்திருக்கிறது.

தங்கராசு: சபாநாயகர் அவர்களே! மந்திரியாரது நியாயமற்ற மறைமுகத் தாக்குதலை ஆட்சேபிக்கிறேன்.

சபாநாயகர்: பயனுள்ள மரமும், பயனற்ற அறிவாளியும் உண்டு. எனவே கவலைப்பட வேண்டாம்.

மந்திரி: ஜாவா, போர்னியோ முதலிய இடங்களில் நவராத்திரிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது எனச் சரித்திர நூல் ஒன்று கூறுகிறது. அங்கு இந்தப் படிகளை ஏற்றுமதி செய்து அயல்நாட்டு வணிகச் செலாவணி பெற இயலுமா என்பதை அறியத் தொழில் நிபுணக் குழு ஒன்று அனுப்பப் படவிருக்கிறது.

சின்னக் கண்ணு: அக்குழுவில் மந்திரியாரும் இடம் பெறுவார் என எதிர்பார்க்கலாம் அல்லவா?

சுயேச்சை: குழு எப்படி வேலை செய்தாலும், மந்திரியார் திரும்பி வந்த பிறகு, 'கிழக்கு ஆசியத் தீவுகளில் பழக்க வழக்கங்கள்' என்ற நீண்ட கட்டுரைத் தொடரை எதிர்பார்க்கலாம்.

வாணி: நவராத்திரி சம்பந்தமாக வரி விதிக்கும் சர்க்கார் இந்த விழாவுக்கு எந்த வகையில் உதவி செய்ய முன் வருகிறது?

மந்திரி: கைத்தொழில் போர்டு அமெரிக்க உதவியுடன் பண்ருட்டியில் பொம்மைத் தொழிற்சாலை நிறுவப் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. இது சாத்தியமானால் மிகக் குறைந்த விலையில் உயர் ரகப் பொம்மைகள் சந்தைக்கு வரும்.

எ. க. தலைவர்: அவை சர்க்கார் மந்திரிகளின் உருவச் சிலைகளாக இருக்குமா?

மந்திரி: அப்படி யிருந்தால் எதிர்க் கட்சியாளர்களுக்கு வசதி தானே? ஆட்சியாளரை எதிர்க்கப் பொம்மை உடைப்புப் போராட்டங்கள் நிகழ்த்தச் சௌகரியமாக இருக்குமல்லவா?

எ. க. தலைவர்: அப்படித் தான் சர்க்கார் பொம்மைகள் விற்க வேண்டும்! ஆட்சிப் படியில் இந்தப் பொம்மைகள் ஏறி விடலாம். ஆனால் கொலுப் படியில் வீற்றிருக்க மக்கள் இருதயத்தில் இடம் பிடிக்க வேண்டும்.

மந்திரி: லஞ்ச ஒழிப்பு, ஐந்தாண்டுத் திட்டம் போன்ற 'ஸப்ஜெக்ட்'க்குரிய பொம்மைகள் தயாரிக்கப்படும். லஞ்ச ஒழிப்பு சம்பந்தமான புதிய சாகித்தியங்களை அரசாங்கத்தின் தகவல் இலாகா நவராத்திரியின்போது பிரசாரம் செய்யும்.

வாணி: அதை யெல்லாம் ஆட்சி அலுவலகக் கொலுக்களில் வைத்துக் கொள்ளுங்கள். தேங்காய், தானியம், மஞ்சள் பழம் இவற்றின் விலையை அரசாங்கம் நிர்ணயம் செய்யுமா ?

மந்திரி: இது பற்றி வர்த்தக மந்திரியைக் கேளுங்கள்.

அருட்செல்வி: நவராத்திரியின் போது சர்க்கார் பஸ்களில் 'சலுகை டிக்கட்'டுகள் வழங்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

மந்திரி: இந்த யோசனை போக்குவரத்து மந்திரிக்கு அனுப்பப்படும்.

தங்கராசு: நவராத்திரி ஒன்பது நாட்களும் சட்ட சபையில் சுண்டல் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மந்திரி: எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பாடினால் அவர்களுக்கு வழங்கப்படும்.

எ.க.தலைவர்: அப்படியெல்லாம் 'சம்திங்' வழங்கி எங்கள் வாயைக் கட்டிவிட முடியாது. நினைவிருக்கட்டும்!

(இடைவேளைக்குச் சபை கலைகிறது.)



"வணக்கம் காக்கையாரே! நீங்க இப்ப உட்கார்ந்திருக்கிற சிலை தமிழுக்காகத் தொண்டுசெய்த பெரியவருடைய சிலை. அதைப் பாழடையச் செய்து விடுகிறீர்களே!"

"கொஞ்ச நேரம் என் நிழல் அவர் தலைக்குச் சுகம் தருமே அதைக் கவனித்தீர்களா? சரி, அவர் கழுத்தில் கருகித் தொங்கும் மலர்மாலை எப்பொழுது அவருக்குப் போட்டது?"

"இச் சிலையை நிர்மாணம் செய்த நாளன்று!"

"வருஷம் இரண்டாச்சு. இன்னும் அந்தக் கருகிய மாலையைக் கழற்ற ஒருவன்கூட வரவில்லையே! மாலையைப் போடும்போது ஆடம்பரமாகப் போட்டோ எடுத்துக்கிட்டாங்க! அது மாதிரி அந்த மாலை கழற்றுவிழா என்று நடத்தினால்தான் அதைக் கழற்றுவீர்கள் போலிருக்கிறது!"

"காக்கைக்கு ஏன் முதலில் ஆகாரம் போடும் பழக்கம் வந்தது?"

"அட! ஏதோ ஒரு நல்ல ஆத்மா, தான் சாப்பிடுவதற்கு முன்னால் பிறருக்குப் போட்டுச் சாப்பிட வேண்டும் என்று நினைத்திருப்பான். தினமும் சாப்பிடுவதற்கு ஓர் ஆள் அந்தக் காலத்திலே கிடைச்சிருக்காது. சரி! நம்மோடு தொடர்பு கொண்டுள்ள காக்கைக்குத்தான் போடுவோமே என்று இப்படிச் செய்ய ஆரம்பித்திருப்பான்."

"நீங்க அதையும் தின்றுவிட்டு ஏமாந்தால் குழந்தை கையில் இருக்கும் அப்பமோ வடையோ அபேஸ் செய்துகொண்டு போய்விடுகிறீரே!"

"அது உங்கள் குற்றம். அஜாக்கிரதையாகக் குழந்தை கையில் கொடுப்பது தப்பு."

"காக்கா பிடிக்கிறான்" என்று ஆபீஸில் சொல்லும் பழக்கத்துக்கும் உங்களுக்கும் சம்பந்தம் என்ன? உங்களுக்குத் தெரியுமோ?"

"அது உங்க பழக்கம். எனக்குத் தெரியாது!"

"எல்லாப் பட்சிகளும் பல வர்ணங்களிலே இருக்கும் போது நீங்க மட்டும் ஏன் கருப்பா இருக்கிறீங்க?"

"'காக்கைச் சிறகினிலே நந்தலாலா, நின் கரிய நிறம் தோன்றுதடா'ன்னு பாரதியார் பாடியிருக்கிறார். கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"உங்க குரலைக் கேட்டு யாரேனும் எழுந்து சூரியோதயம் பார்த்திருக்கிறார்களா?"

"சில வீடுகளில் உள்ள இரவு பாராக்காரர்கள் தான் எனக்குத் தெரிந்தவரை நான் கூவியவுடன் வாரிச் சுருட்டி எழுந்துவிடுகின்றனர். சூரியோதயம் பார்க்கத்தான் என்று சொல்ல முடியாது!"

"குயில் அழகாகப் பாடுகிறது. நீங்களும் அதே இனம்தான். உங்களுக்கு ஏன் பாட்டு வரவில்லை?"

"பாடிண்டுதான் இருந்தோம்... பஞ்சதந்திரக் கதைகளில் ஒரு நரி, வாயில் வடையுடன் மரத்தில் உட்கார்ந்திருந்த காக்கையைப் பார்த்து 'ஆஹா! உன் குரல் என்ன இனிமை! காக்கையாரே! ஒரு பாட்டுப் பாடும்' என்றவுடன் அந்தக் காக்கை பாட ஆரம்பித்து வடை போனது உமக்குத் தெரியுமல்லவா? அன்றையத் தேதியிலிருந்து நாங்கள் பாடுவதை விட்டுவிட்டோம்!"

குண்டுமல்லிகை

அரு.ராமநாதன்

காதலின் வேகத்தோடு பிச்சுமணியின் உஷ்ணமான மூச்சுக் காற்றுக்கள் உமாவின் முகத்தில் இறைந்தன. உமா உள்ளூற அதிர்ந்தாள் என்றாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ள வில்லை. பிச்சுமணியிடமிருந்து திமிறித் தப்பித்துக் கொள்ளவோ, அதற்காகப் போராடவோ அவள் முயலவில்லை. உணர்ச்சிகளற்ற பாலைவனத்து ஜடம் போலவோ, மரப் பொம்மை போலவோ அவள் அசைவற்று நின்றாள். அந்த மௌனமான செயலின்மையே அவளுக்குப் பிச்சுமணியை விட அதிகப் பலத்தைக்கொடுத்தது. அது பிச்சுமணியின் உள்ளத்தில் உறுத்தியது.

''உமா! இப்படி ஏன் மௌனமாக நிற்கிறீர்கள்? ஏன் பதில் எதுவும் சொல்லவில்லை?''

''நான் பதில் சொல்வதற்கு என்ன இருக்கிறது? புயல் தானாகவே அடங்கி நீ சுய நிலை பெறுவதற்காகக் காத்திருக்கிறேன்'' என்றாள் உமா.

''அப்படியானால் நான் இப்போது செய்வதெல்லாம் சுயநினைவு இல்லாமலேயா செய்கிறேன்? நான் என்ன பைத்தியக்காரனா? வெறிபிடித்த மிருகமா?''

''பிச்சுமணி! உன் தன்மைக்கும் கண்ணியத்துக்கும் மாறாக நடந்துகொள்ள முயல்கிறாய். அதனால் உனக்கும் எனக்குமே பெரும் தவறு செய்கிறாய்.''

''உங்களை அடைய நான் தவிதவிப்பது தவறா?''

உமாவின் கண்களில் நீர் முட்டியது. அவள் தழு தழுக்கும் குரலில், ''பிச்சுமணி! உனக்குப் பொருத்தமான ஒரு சின்னப் பெண்ணைத்தான் நீ காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்!'' என்று சொன்னாள்.

பிச்சுமணி விசித்திரமாகச் சிரித்தான்.

''உமா! உங்களைத் தவிர எனக்குப் பொருத்தமான பெண் இந்த உலகத்தில் வேறு யாரும் பிறக்கவில்லை!'' என்று உணர்ச்சி பொங்க விம்மினான்.

அது உமாவின் பெண்ணுள்ளத்தில் எதிரொலித்ததே தவிர அவள் இளகிவிடவில்லை. தன் திடசித்தத்தையே நிலைநிறுத்திக் கொண்டு அவள் தீர்மானமான குரலில், ''பிச்சுமணி! அது வீண் நினைப்பு! அதை நீ இனிமேல் மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்!'' என்று கச்சிதமாகச் சொன்னாள்.

பிச்சுமணியின் முகபாவம் மாறி அது பாறை போல் இறுகியது. அவன் உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகளும் கண்களில் பெருகும் அளவுகடந்த துயரமும் அவனது உதடுகளிலே வார்த்தைகளாக வெடித்தன.

''உமா! உமா! உங்கள் இருதயமென்ன கல்லா? நீங்களும் ஒரு பெண்ணா? இது எனக்கு வாழ்வா சாவா என்ற பிரச்னை என்பது உங்களுக்குத் தெரிய வில்லையா?'' என்று அவன் கூவினான்.

உமா தன் கண்ணிமைகளை இறுக மூடிக் கொண்டு தலையாட்டியபடி, ''இல்லை, பிச்சுமணி! இதில் உன்பிரச்னை ஒன்று மட்டும் இல்லை!'' என்று அழுத்திச் சொன்னாள்.

''அப்படியானால்.. அப்படியானால்.......நீங்கள் என்னைக் காதலிக்க வில்லையா?'' என்று பிச்சுமணி



குமுறியபடி தத்தளித்தான்.[1] உமா பதில் சொல்ல வில்லை.

''நீங்கள் என்னைக் காதலிக்கவில்லை! காதலிக்க வில்லை!'' என்று உள்ளமெல்லாம் உருக்குலைந்து முனகிய பிச்சுமணி, தன் ஜீவனை யெல்லாம் இழந்தவன் போல் ஒரு கணம் நின்று விட்டு, சட்டென்று தன் பிடியைத் தளர்த்தி உமாவை அப்பால் தள்ளி விட்டு வேகமாகத் திரும்பி வெளி வாசலை நோக்கி விடுவிடுவென்று நடந்தான்.

''பிச்சுமணி! சற்று நில்!'' என்று உமா பரபரப்புடன் கூவினாள்.

பிச்சுமணி நின்றான். ஆனால் திரும்பிப் பார்க்க வில்லை.

உமா தன் பலத்தை யெல்லாம் திரட்டிக் கொண்டு அவன் முன்னால் வந்து நின்று, ''நீ இப்போ எங்கே போகிறாய்?'' என்று கேட்டாள்.

''நான் எங்கே போனால் உங்களுக்கென்ன, உமா? நான் யாரோ, நீங்கள் யாரோ!'' என்று பிச்சுமணி படபடத்தான்.

அவன் கண்களில் சீறியெழும் துயரம் உமாவின் கடினமான உள்ளத்தைக் கீறிப் பெண்மைக்கே இயல்பான கழிவிரக்கத்தைப் பொங்கி எழச் செய்தது. கண்களில் வாஞ்சையின் நீர் ததும்ப, மிருதுவான குரலில், ''பிச்சுமணி! உன் வீட்டில் ஏதோ மோசமான விஷயம்



நடந்திருக்கிறது. உனக்கு ஏதோ நேர்ந்திருக்கிறது. உனக்கும் உன் தாத்தாவுக்குமிடையே எதனால் சண்டை மூண்டது?'' என்று கனிவாகக் கேட்டாள்.

''அதை யெல்லாம் இனி மேல் உங்களிடம் சொன்னால்தான் என்ன, சொல்லா விட்டால்தான் என்ன?''

''சொன்னால்தான் என் மனசுக்கு ஆறுதலாக இருக்கும். சொல்ல மாட்டாயா, பிச்சுமணி?'' என்று உமா ஏதோ பிச்சை கேட்பது போல் அவனைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்தாள்.

''சரி, சொல்லுகிறேன்! நான் காதலித்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாவிட்டால் வேறு எந்தப் பெண்ணையுமே கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்றும் எனக்காகத் தாத்தா நிச்சயித்திருந்த லலிதாவை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் அவரிடம் சொல்லி விட்டேன். அதனால் தான் எங்களுக்குள் சண்டை மூண்டது'' என்று ஆரம்பித்த பிச்சுமணி எல்லா விஷயங்களையும் சுருக்கமாகச் சொல்லி விட்டு, கடைசியில் உமாவுக்காகத் தன் தாத்தாவையும் துறந்து வீட்டிலிருந்து வெளியேறி நிர்க்கதியாக வந்திருக்கும் நிலையையும் உருக்கமாக உணர்த்தினான்.

அவ்வளவையும் கேட்ட பிறகுங்கூட உமாவின் திட மனசு சிறிதும் அசைந்து கொடுக்க வில்லை.

''உனக்காகப் பரிதாபப்படுகிறேன், பிச்சுமணி!''

''தாங்க்ஸ்!''

''பிச்சுமணி! உன் தாத்தாவுக்கு இருப்பதெல்லாம் நீ ஒருவன்தான்! அவரைப் போல் உன் மீது அன்போ, உன் எதிர்கால நன்மைகளில் அக்கரையோ வேறு யாராலும் வைக்க முடியாது. அதனால் உன் அந்தஸ்துக்கும் வயசுக்கும் உன் எதிர்காலத்துக்கும் சரியான ஒரு பெண்ணைத்தான் நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்றும், பொருத்தமில்லாத பெண்ணை நீ நாடக் கூடாது என்றும், அவர் நினைப்பதும் அதற்காக உன்னோடு சண்டை பிடிப்பதும் இயற்கைதான்! அது நியாயந்தான்! அவரைப்போலவே நானும் நினைக்கிறேன். ஆகவே என்னை முன்னிட்டு உங்களுக்குள் இப்படி ஒரு சண்டை மூண்டிருக்கவே வேண்டியதில்லை.''

''அதுதான் மூண்டுவிட்டதே. இனி மேல் என்ன?''

''நீ நேரே வீட்டுக்குப் போ. உன் தாத்தாவைச் சமாதானப்படுத்து.''

''சரி; அப்புறம்?''

''உன் தாத்தாவிடம் நான் சொன்னதாக இதைச் சொல். உன்னைப் பொறுத்த வரையில் அவருடைய அபிப்பிராயந்தான் சரி என்று நானும் நினைக்கிறேன். ஆகவே உன் விஷயத்தில் என்னைப் பற்றி அவர் சிறிதும் கவலைப்படவோ மனக் கசப்படையவோ உன் மீது மனஸ்தாபப்படவோ வேண்டியதில்லை. ஏனெனில், நான் ஏற்கனவே கல்யாணப் பெண்ணாக அலங்கரிக்கப்பட்டு அந்தக் கல்யாணம் பாதியிலேயே நின்று போய் அதன் துயரங்களையெல்லாம் நன்றாக அனுபவித்து விட்டேன். இனி மேல் மறுபடியும் எனக்குக் கல்யாணம் என்ற பேச்சுக்கே இடம் கொடுக்கப் போவதில்லை.''

''சரி; உமா! என் கல்யாணத்துக்கு உங்களுக்கு ஒரு இன்விடேஷன் அனுப்ப வேண்டும் என்றோ, என் தாத்தா நிச்சயித்த பெண்ணையே நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்றோ நீங்கள் ஏன் சொல்ல வில்லை?''

உமா தலை குனிய முடியாமல் கண்களை உயர்த்திப் பார்த்தாள்.

அப்போது பிச்சுமணியின் கண்களில் நையாண்டித்தனமான ஓர் ஒளி ஊசி முனை போல் ஒருகணம் மின்னி விட்டு மறைந்தது.

''பிச்சுமணி! உன் கல்யாணத்துக்கு இன்விடேஷன் அனுப்பினால் நான் நிச்சயம் வருவேன்'' என்றாள் உமா. அதை அவளால் எப்படித்தான் சொல்ல முடிந்ததோ?

''சரி, உமா! நான் போகிறேன். அடுத்த தடவை நான் வந்தால் உங்களிடம் முரட்டுத்தனமாகவோ சிறு பிள்ளைத்தனமாகவோ நடந்து கொள்ள மாட்டேன். கண்ணியமான மனிதனாகவே நடந்து கொள்வேன்.''

''மறுபடியும் நீ என்னைச் சந்திக்க வருவதென்பது கூடவே கூடாது!'' சட்டென்று கூவிய உமா, ''இதை நீ தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும், பிச்சுமணி!'' என்றாள் கனிவுடன்.


''புரிகிறது உமா! எனக்கு இறுதி விடை கொடுத்து விட்டீர்கள். கடைசியாக நானும் உங்களிடம் ஒரு விஷயம் சொல்லுகிறேன். உங்களிடம் ஒரு சின்னப் பிள்ளையார் இருக்கிறதல்லவா? அவரிடம் யாராவது மனப்பூர்வமாக ஒரே ஒரு வரம் கேட்டால் அது நிச்சயம் பலிக்குமென்று நீங்கள் முன்பொரு தடவை கூறினீர்கள். அந்த ஒரேவரத்தைப் பிள்ளையாரிடம் முன்பே கேட்டு விட்டேன். அது என்ன வரம் என்பதையும் இப்போது சொல்லட்டுமா?''

''வேண்டாம்!''

ASP/GM-33 TM



தொல்லை
பல் முளைக்கும்போதா?
காற்று பிரியும்போதா?
வயிற்றுவலியாலா?



மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்

கொடுத்து மீண்டும் புன்னகை தோன்றக் காணுங்கள்

இக்காலத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் தருகின்றனர். அது இனிய சுவையுள்ளது; சுகாதார முறைப்படி 'பேக்' செய்யப்பட்டுள்ளது.

அதிர்ஷ்டக் குழந்தைகளுக்கு
மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர்
கிடைக்கிறது



இப்பொழுது
அழகான, புதிய
சிவப்பு நீல நிறங்களில்
'பேக்' செய்யப்பட்டு
கிடைக்கிறது

GEOFFREY MANNERS & COMPANY LIMITED

பிச்சமணி சிரித்தான். நெஞ்சைப் பிழிவது போலவே சிரித்தான்.

பிறகு அவன், ''நான் அந்தப் பிள்ளை யாரிடம் கேட்ட வரம் பலிக்குமா அல்லது பொய்த்து விடுமா என்பதை இனி மேல் அந்தப் பிள்ளையாரே தான் கவனித்துக் கொள்ள வேண்டும். இதைக் காது கொடுத்துக் கேட்க விரும்பா விட்டால் அவரும் தன் காது களை இறுக்கிப் பொத்திக் கொள்ளட்டும்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பி விடுவிடு வென்று நடந்தான்.

உமாவைத் திரும்பிக் கூடப் பாரா மல் வெளி வாசலைத் தாண்டி தெருக் கோடி வரை போனான்.

அவன் அப்படிப் போவதை உமா வின் கண்களால் நம்பவே முடியவில்லை!

உமாவின் பார்வையிலிருந்து பிச்ச மணி மறைந்ததும் உமா தன் நெஞ் செல்லாம் முட்டும்படி நீண்டதொரு பெருமூச்சை இழுத்தான். சாரமில்லாத ஒரு வெற்றிக்காகப் போரிட்டதில் தன் பலம் அனைத்தையும் செலவழித்து விட் டது போலவே இருந்தது அவனுக்கு!

அத்தியாயம் ஐம்பத்தெட்டு

முதுமையின் முடக்கம்

பிச்சமணி தன்னுடைய தாத்தா வின் பங்களா காம்பவுண்டுக்குள் நுழைந் ததுமே பட்லர் இருதயசாமி, ''தம்பி! தம்பீ!'' என்று கூவிக் கொண்டே ஓடி வந்து அவனைக் கட்டித் தழுவிக் கொள் ளத் தவிதவித்தான்.

பிச்சமணியோ ஜீவ வதைப்பட்டு, போர்க்களத்திலேயே எல்லாவற்றையும் இழந்துவிட்டு வந்தவன்மாதிரி நின்றான்.

கிணற்றுக்குள்ளிருந்து குரல் எழுப்புப வன் போல், ''தாத்தா எங்கே?'' என்று பிச்சமணி கேட்டான்.

''தம்பி! நீ போனதிலேயிருந்து அவர் உண்ணாவிரதம் இருக்கிறார். நேற்று ராத்திரி முழுதும் ஜன்னலைவிட்டு நகரவே முடியாது என்று சத்தியாக் கிரகம் பண்ணினார். நேற்றுப் பெய்த பேய் மழையையும் வாடைக் காற்றை யும் அந்த ஜன்னல்கூடத் தாங்கியிருக் காது. இந்த வயசில் அவர் எப்படித் தான் தாங்கினாரோ? பலவீனத்தால் பெரியவருக்கு மயக்கம் வந்து விடுமோ என்று பயந்தோம். ஆனால் வேலைக் காரர்கள் என்ன செய்ய முடியும்? நைஸாக டாக்டரைக் கூட்டி வரலா மென்று நான் நினைத்தேன். ஆனால் நல்ல வேளையாக டாக்டர் ஜகந்நாதனை கூட்டி வரும்படி அவரே சொல்லி விட் டார்'' என்றான்.

''டாக்டர் ஜகந்நாதன் இங்கு வந் தாரா?'' என்று பிச்சமணி பரபரப் புடன் கேட்டான்.

''ஆமாம்! ஆனால் டாக்டர் கொடுத்த மாத்திரைகளை அவர் தொடவேயில்லை! குசுகுசு வென்று சொன்ன புத்திமதி களைத்தான் காதுக்குள் போட்டுக் கொண்டார்.''

''இப்போ தாத்தா என்ன பண்ணு கிறார்?''

''விளையாடிக் கொண்டிருக்கிறார்!''

''டாக்டர் ஜகந்நாதனோடு சீட்டு விளையாடிக் கொண்டிருக்கிறாரா?''

''இல்லை! அவர் மட்டும்தான் தனி யாக உட்கார்ந்து தம் மெடல்களைப் பூச்செண்டுகள் போல் விட்டெறிந்து பிடித்து விளையாடிக் கொண்டிருக்கிறார். பைத்தியம் பிடித்து விடுமோ என்று பயமாக இருக்கிறது, தம்பி!''

''இதெல்லாம் என்னால்தானே? என் னால்தானே?'' என்று பிச்சமணி தன் நெஞ்சில் அடித்துக் கொள்ளாத குறை யாகக் கண்களில் நீர் துளிக்க விம் மினான்.

''நீ என்ன பண்ணுவாய், தம்பி! நீ இளங் குருத்து! விவரம் தெரிந்த பெரியவர்கள்தான் அனுசரித்துப் போக வேண்டும். அதுவும் இந்தக் காலத் திலே.....''

''இப்போ தாத்தா எங்கே இருக் கிறார்?''

''அதே ஜன்னல் பக்கம்! அதே நாற்காலியில்தான்! வாடைப் பனியில் உடம்பு ஜில்லிட்டுப் போய் விடக் கூடாதே என்று அவர் மீது கம்பளிப் போர்வையை நான் போர்த்தி விட்டு வந்ததுகூட அவருக்குத் தெரியவில்லை!''

பிச்சமணி துடிதுடித்தான். தனக் குப் பின்னால் தன் எதிர்கால வாழ்க் கையை இழந்து விட்டு வந்தவன், தன் கண்ணெதிரே தனக்கு அடைக்கலமான இன்னொரு உயிரை எட்டிப் பிடித்து கொள்ளப் பறப்பது போல், பிச்சமணி தாவி ஓடி அந்த ஜன்னல்பக்கம் வந்தான்.

அங்கே ஜன்னல் ஓரத்தில், பெரிய சிம்மாசனத்தின் மீது மேஜர் ராம துரை கண்களை மூடியபடி ஆடாமல் அசையாமல் சாய்ந்து கிடந்தார். அவர் முகத்தில் உறைந்திருந்த சூனியமே அவ ரைச் சுற்றிலும் பயங்கர நிசப்தமாக

நிலவியிருந்தது. பிச்சுமணியின் நெஞ்சு திக்கென்று அடித்துக் கொண்டது. தன் உயிரே பிரிந்து விட்ட மாதிரி மரண வேதனை எழுந்தது.

'தாத்தா!' என்று அலறக்கூட முடியாமல் வாயடைத்துப் போய், ஏதோ ஓர் ஆவேச உணர்ச்சியால் உந்தித் தள்ளப்பட்டு மேஜர் அருகில் வந்து, அவரது நெற்றியைப் பரபரப்போடு தொட்டுப் பார்த்தான். முதலில் நெற்றி ஜில்லிட்டது. பிறகு அந்தக் குளிர்ச்சியினூடே ஒரு மெல்லிய உயிர்ப்பு தோன்றி கடுமையான ஜுரத்தின் அனல் வேகம் பரவித் தகித்தது.

''தாத்தா!'' என்று பிச்சுமணி கூப்பிட்டான். அப்போதும் மேஜர் ஆடவில்லை; அசையவில்லை. கண்களைத் திறக்கவுமில்லை. முன் இரவில் அவர் அடிக்கடி ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி எட்டிப் பார்த்திருக்கிறார் என்பதற்கு அறிகுறியாக மழையின் ஈரம் ஆங்காங்கே சுவர்ந்து கறைகள் கட்டியிருந்தன. பிச்சுமணியின் ஆடைகள் மழையில் நனைந்து எப்படி அலங்கோலமாகக் காட்சியளித்தனவோ அது போலவே மேஜரின் கம்பீரமான உடுப்புக்களும் அலங்கோலமாகிக் கண்களை உறுத்தின. ஆனால் பேய் மழையை இளமையால் தாங்க முடியும்! அது போல் முதுமையால் தாங்க முடியுமா? வாடைப் பனியிலே நனைந்து, நைந்து, அதிலே ஊறி ஊறிப் போனது போலவே கிழவரின் உடம்பெல்லாம் குளிர்ந்து போயிருந்தது. அவருடைய கைகள் ஐஸ் கட்டிகள் போலவே ஜில்லிட்டிருந்தன.

''தாத்தா! தாத்தா!'' என்று பிச்சுமணி தன் உயிரே கிழிவது போல் கூவி அவருடைய உடம்பையும் கைகளையும் பிடித்துக் குலுக்கினான்.

மயானக் கரை சமாதியிலிருந்து கண் விழிப்பது போல மேஜர் தம் கண்களை மெல்லத் திறந்தார்.

''தாத்தா! தாத்தா!'' என்று பிச்சுமணி புது ஜீவன் துளிர்க்க அப்படியே அவரைக் கட்டியணைத்துக் கொண்டான்.

கிழவர் அடர்த்தியான தம் புருவங்களைச் சுருக்கி நெறித்து அரைக் கண்களாலேயே பிச்சுமணியை நிஷ்டூரமாகப் பார்த்தார். அவருடைய அந்தக் கண்களில் வெள்ளைக் கல்லின் மினுமினுப்பு ஒன்றும் இறுகியது.

பிறகு அவர் தம் பேரனின் இரும்புப் பிடி போன்ற அணைப்பிலிருந்து திமிறி அவனது கைகளை அப்பால் உதறித் தள்ளினார். ''நீ ஏன் திரும்பி வந்தாய்? நீ இல்லாமல் என்னால் இருக்க முடியாது என்று நினைத்தாயோ?''

''ஆமாம், தாத்தா!'' என்றான் பேரன் அமைதியாக.

கிழவரின் மூச்சு இரைப்பில் ஒரு குமுறல் கொதித்து வெடித்தது. ''நான் இல்லாமல் உன்னால் வாழ முடியும் என்கிற போது நீ இல்லாமல் என்னால் வாழ முடியாதா? நீ எனக்குத் தேவையில்லை! போ! போய் விடு!''

''இல்லை, தாத்தா! உங்களை இந்த நிலைமையில் விட்டு விட்டு நான் எங்கும் போக மாட்டேன்! என்னைப் பிடித்துத் தள்ளவும் உங்களால் முடியாது!''

''நான் எப்படி இருந்தால் உனக்கென்னடா? என்னைத் தொடாதே!''

''இல்லை, என் தாத்தாவை இப்படித்தான் தொடுவேன்! இப்படித்தான் பிடித்துக் கொள்வேன்!'' என்ற பிச்சுமணி குழந்தை போல் செல்லமாகக் கொஞ்சியபடி தாத்தாவின் கழுத்தை மறுபடியும் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

''உன் வசிய வேலையெல்லாம் இனி மேல் என்னிடம் நடக்காது! என்னை தாத்தா என்று கூப்பிடாதே! மேஜர் என்று கூப்பிடு!'' என்று துப்பாக்கியால் சுடுவது போல் சொன்னார்.

குண்டடி பட்டவன் போல் பிச்சுமணி வேதனையால் முனகி விம்மி ஒரு கணம் நெளிந்து நின்று விட்டு நிமிர்ந்து பார்த்தான். பிறகு அவன், ''சரி! உங்களை மேஜர் என்று கூப்பிட்டால்தான் உங்களுக்குப் பெருமை என்றால் அப்படியே கூப்பிடுகிறேன். அதோடு உங்கள் பட்டங்களை யெல்லாம் சேர்த்து வேண்டுமானாலும் சொல்லுகிறேன்!'' என்றான்.

அவன் தமக்குச் சமதையான பலம் அடைந்து விட்டான் என்பதை கிழவர் உணர்ந்தார். கோபம் அதிகரித்தது.

''நீ இப்போ எதுக்காக வந்தாய்? பாகப் பிரிவினைக்கா? குடும்பச் சொத்தில் உனக்கும் உன் தகப்பனுக்கும் சேர வேண்டிய பங்குத் தொகைகளை யெல்லாம் தாராளமாகப் பிரித்து வாங்கிக் கொண்டு போ! இந்தப் பங்களாவையும் இரண்டாகக் கூறு போட்டு நடுவிலே சுவரும் எழுப்பிக் கொள்!''

''நான் பணத்துக்காக வரவில்லை!'' என்று பிச்சுமணி பொங்கினான்.

''பின்னே உனக்கும் எனக்கும் என்னடா சம்பந்தம்?''.

''தாத்தா! இப்படி அறுத்துப் பேசாதீர்கள்! நான் அழுவேன்!'' என்ற பிச்சுமணிக்கு உண்மையிலேயே அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

கிழவர் விறைப்பாகவே தம் பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொண்டார். அவர் காலில் விழுந்து கெஞ்சாத குறையாகப் பிச்சுமணி தழுதழுக்கும்

மியூனிச் நகரை மயக்கிய மணிபுரி நடனம்

கலை பேசும் மொழிக்குக் கட்டுப்பாடில்லை. இக்கலையினும் பெரிது கலையின் செல்வாக்கு; அது, பல நாட்டவர்களையும், பல்மொழி பேசுபவர்களையும் ஒருங்கே சேர்க்கும் தெய்வீக சக்தி வாய்ந்தது. பாரதக் கலைஞர்கள் பலர் ஜெர்மனிக்கும், ஜெர்மன் கலைஞர்கள் பாரதத்திற்கும் விஜயம் செய்து, தம் கலைத்திறனால் மக்களை மகிழ்வித்துள்ளனர். இதனால் இவ்விரு நாடுகளுக்குமிடையேயுள்ள நட்பு பெரிதும் வலுவடைந்துள்ளது. மணிபுரி நடனம் பல்லாயிரக்கணக்கான ஜெர்மன் மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது. ஜெர்மனி தேசத்து இசைப் பேரறிஞர்கள் பலர் பாரதத்திலுள்ள சங்கீத ரசிகர்களை இசை வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளனர். நலன்களைப் பகிரும் இப்பண்பு, இவ்விரு மக்களிடையே நேச உணர்வையும், மன ஒற்றுமையையும் வெகுவாக வளர்த்துள்ளது.

ஐக்கிய ஜெர்மன் குடியரசு



JWTFRG.3008-F

நாள் முழுவதும்
நீடித்த
பொலிவுடன் திகழ

ரேணுகா

டால்கம் பவுடர்



நறுமணம் கமழும் ரேணுகா டால்கம் பவுடரில் சேர்க்கப்பட்டுள்ள ஆக்டமர் வியர்வையினால் உண்டாகும் துர்நாற்றத்தை அறவே போக்குகிறது. ரேணுகா டால்கம் பவுடரில் மட்டுமே ஆக்டமர் சேர்க்கப்பட்டுள்ளது.

துர்நாற்றத்தை
அகற்றி
புத்துணர்ச்சி
அளிக்கிறது

கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்.
கல்கத்தா - 29 (இந்தியா)

தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1



ஜலதோஷத்திற்கும், ஜுரம் போன்ற உணர்ச்சிக்கும்

'ஆஸ்ப்ரோ'



'ஆஸ்ப்ரோ'வைவிடப் பத்திரமான-சிறந்த நிவாரணி எதுவுமே இல்லை

'ஆஸ்ப்ரோ'வின் ஒப்பற்ற வலி நிவாரணச் செயல்திறன் உடம்புவலிகளை எல்லாம் போக்க உதவுகிறது. தலைவலிக்கு, 1 அல்லது 2 'ஆஸ்ப்ரோ' மாத்திரைகளை பானத்துடன் உட்கொள்ளுங்கள்; பானம் சூடாக இருப்பது நலம். ஜலதோஷத்திற்கு, 3 முதல் 4 மணிகளுக்கொருமுறை, சூடான பானத்துடன் 2 மாத்திரைகள் 'ஆஸ்ப்ரோ' உட்கொள்ளுங்கள். தொண்டைப்புண்ணுக்கு (அழற்சிக்கு) 2 'ஆஸ்ப்ரோ' மாத்திரைகளை வெதுவெதுப்பான நீரில் கரைத்து, கொப்பளித்து விழுங்குங்கள். பல்வலிக்கு பாதிக்கப்பட்ட பல்லின் மேல் 'ஆஸ்ப்ரோ'வைப் பொருத்தி வாயைக் கொப்பளியுங்கள்.
'ஆஸ்ப்ரோ'வை எப்பொழுதும் வசமாக வைத்திருங்கள்.

ஒரு நிக்கோலஸ் N தயாரிப்பு [illegible]

A.G. 1711 TAM

குரலில் ''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், தாத்தா! நான் செய்தது தப்புத்தான்! நேற்று உங்களிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டேன் உங்களை விட்டெறிகிற மாதிரிப் பேசி விட்டேன்!'' என்றான்.

''நீ என்னடா என்னை விட்டெறிகிறது?''

''அதற்கெல்லாம் நான் சரியான தண்டனை அனுபவித்து விட்டேன், தாத்தா!'' என்று பிச்சுமணி சவக்களை படியக் கூவி விட்டு, ''இதற்கு மேலும் என்னை வதைத்தால் செத்த பாம்பை புரட்டிப் புரட்டி அடிக்கிற மாதிரித் தான்!'' என்று பொருமினான்.

''நீ ஏன் அந்தத் தப்பு செய்தாய்? மகாப் பெரிய மனுஷன் போல் அப்படி ஏன் வீட்டை விட்டு வெளியேறிப் போனாய்?''

''அதை யெல்லாம் அப்புறம் சொல்கிறேன், தாத்தா! இப்போ எழுந்திருங்கள். சாப்பிடப் போகலாம். எனக்குப் பசிக்கிறது!''

''நேற்று ராத்திரி உனக்கு யாரும் சோறு போட வில்லையோ?''

''ஆமாம், தாத்தா! நீங்களும் சாப்பிட வில்லை! இப்போ நீங்கள் எழுந்து வருகிறீர்களா இல்லையா? இல்லா விட்டால் நானே உங்களைத் தூக்கிக் கொண்டு போய் விடுவேன்!''

''நீ அவ்வளவு பலசாலி ஆகி விட்டாய்! அவ்வளவு பலசாலி!''

''இனி மேல் என் பலத்தை உங்களிடம் காட்ட மாட்டேன் தாத்தா! எல்லாம் ஒடுங்கிப் போய் விட்டேன்!''

கிழவர் தம் சிம்மாசனத்தை விட்டு மெல்ல எழுந்தார். ஆனால் எழுந்ததுமே நிற்கக் கூடச் சக்தி இல்லாமல் அதிகப் படியான சோர்வுகளுக்கு ஆளாகித் தள்ளாடிச் சுழன்று அப்படியே பொத்தென்று தரையில் சுருண்டு விழுந்தார்.

பிச்சுமணி பதறிப் பாய்ந்து சென்று அவரைத் தன் இரு கைகளாலும் தூக்கினான். உதவிக்கு பட்லர் இருதய சாமி ஓடி வந்தான்.

மயக்கக் கிறுகிறுப்போடு கிழவரின் கண்கள் மேலே சொருகத் தொடங்கின. அவருடைய கால்களும் கைகளும் குளிர்ந்து விடாதபடி பட்லர் இருதய சாமி பரபரப்போடு தேய்த்துச் சூடு உண்டு பண்ணினான். பிறகு அவரை இருவருமாகத் தூக்கிச் சென்று அவருடைய அறையில் உள்ள பஞ்சணைக் கட்டிலில் கிடத்தினார்கள். பட்லர் தன் மூளைக்கெட்டிய அவசரகால முதலுதவிச் சிகிச்சைகளை யெல்லாம் செய்தான்.

''தம்பி! இத்தனை வருஷங்களில் பெரியவர் ஒரு நாளாவது நோய்நொடி என்று படுக்கையில் கிடந்ததே இல்லை. இப்போதுதான் முதன் முதலாக...... என்று அதற்கு மேல் சொல்ல முடியாமல் பட்லர் பெருமூச்சு விட்டான். அந்தப் பெருமூச்சு கிழவருக்கு அந்திம கால யாத்திரை தொடங்கி விட்டது என்று முத்திரை வைப்பது போலவே தொனித்தது.

''தாத்தா! தாத்தா!'' என்று பிச்சுமணி பெரிதாக அழுது கொண்டே இருந்தான்.

அப்போது கிழவருக்குச் சிறிது சுய உணர்வு வந்தது.

''கடைசியில் என்னைத் தூக்கிக் கொண்டு வந்து படுக்கையில் போடத் தான் நீ வந்தாயா?'' என்று கிழவர் அந்த நிலைமையிலும் கூறினார்.

பிச்சுமணி அப்படியே அதே படுக்கையிலே சுருண்டு விழுந்து தன் தாத்தாவின் காலடியிலே கிடந்தான்.

அதன் பிறகு பயங்கர நிசப்தம் நிலவியது. (தொடரும்)

ஒரு குட்டிக் கதை

கதை வசனம்

ஜோ. ஸ்ரீமனோகரன்



கதாசிரியர் கார்மேகம் அமெச்சூர் நாடக உலகைப் பொறுத்த மட்டில் குறிப்பிட்ட பிரசித்தம். அவனுக்குத் திரையுலகைப் பற்றித் தெரியாது. தெரிந்து கொள்ளும்படியான ஓர் அநுபவமும் ஏற்பட வில்லை. 'எழுத்தாளன் – அதிலும் குறிப்பாகத் தமிழகத்து எழுத்தாளர்களுள் ஒரு சிலரை நீக்கி ஏனையவர்களின் பஞ்சப் பாட்டு ஒழிய வேண்டுமானால், அது திரையுலக நுழைவில்தான்' என்பது கார்மேகனுடைய கனிசமான கருத்து. எனவே அவனும் பெரிதாக முயன்று சிறிதாக ஒரு வாய்ப்பையும் பெற்று விட்டான். அடடா! அவனுடைய மகிழ்ச்சியைத்தான் விவரிக்க வேண்டுமே! இத்தனைக்கும் அவன் திருமணமாகாத தனிக் கட்டை. தாய் தந்தையர் நல்ல நிலைமையில் இருக்கவர். இல்லா விட்டால் தங்களுடைய பிள்ளையின் அறிவைக் கண்டு எழுத்தை நம்ப விட்டிருப்பார்களா ?

அன்று ஏதோ ஒரு பத்திரிகைக்கு முயற்சி செய்யச் சிறு கதை யொன்றை எழுத உட்கார்ந்த போதுதான் அந்தத் திரைப் படக் கம்பெனியின் கார் வந்து நின்றது. வந்த காரோட்டி சொன்னான்: ''அம்மா உங்களை அழைச்சிக்கிட்டு வரச் சொன்னாங்க!''

அம்மாவா? யார் அது?

கார்மேகத்துக்குப் புரிபட வில்லை. அவன் எத்தனையோ கம்பெனிகளை ஏறி இறங்கியவன்; எத்தனையோ முகங்களைச் சந்தித்தவன். திடீரென்று அம்மா என்றால்.....அவனுக்கு நினைவிருப்பது அவனுடைய அம்மா முகம்தானே !

''அம்மா என்றால்? யாருங்க?''

''அலையாண்டர் பிக்சர்ஸ் அம்மா....!''

''ஓ.... அந்த அம்மாவா? எதுக்காக?''

''கதை விஷயமாக!''

உச்சியில் 'ஐஸ் பேக்டரியே' குடியேறி விட்டது போன்ற ஒரு பிரமை. உடனடியாக எழுத எடுத்த சிறுகதைத் தாள்களை வீசி எறிந்து விட்டு, அலங்காரம் செய்து கொண்டு புறப்பட்டான்.

அம்மாவைச் சந்தித்தான். சற்றே வயதான பெண்ணாக அந்த அம்மாள் இருந்தாலும் பார்க்க இளம் பெண்ணைப் போலவே தோற்றமளித்தாள். ஒரு காலத்தில் கதாநாயகியாக நடித்துப் புகழ் பெற்றவள்தாம். இப்போதும் சிங்காரி சிந்தாமணி என்றால் ரசிகர்களுடைய கண்களில் அந்த முகம் வந்து நிற்கும்.

சிந்தாமணியம்மாள் புன்முறுவலுடன் வரவேற்றாள். கார்மேகமும் காலில் விழாத குறையாகக் கரங்களை மேலே உயர்த்திக் கும்பிட்டான். அவன் எப்போதோ ஒரு முறை சொன்ன கதை அது. அந்தக் கதைக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது. நூற்று ஓர் ரூபாய் முன் பணமாகக் கொடுக்கப்பட்டது. அது கார்மேகத்துக்கு ஆயிரத்து ஓர் ரூபாயாகத் தெரிந்ததில் ஆச்சரியமில்லை. ஒப்பந்தமோ ஐயாயிரம் ரூபாய்க்கு!

அன்று முதல் ஒரு மாத காலம் வரை தினமும் வந்து விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டும். விவாதம் செய்த காட்சிகளுக்கு வசனம் எழுதி முடிக்க வேண்டும். ஒரு மாதம் கழிந்தது. கதை வசனமும் தயாரானது. படமும் தொடங்கப்பெற்றது. விளம்பரமும் பத்திரிகையில் வெளி வந்தது. ஆயினும் கார்மேகத்தினுடைய பெயர் வரவேண்டுமே!

இதுபற்றி அவன் பெரிதாகக் குறைப்பட்டுக் கொண்டதன் பேரில் ஒரு நாள் தினப் பத்திரிகை யொன்றில் கொட்டை எழுத்தில் அவனுடைய திருப் பெயரை, கதை, வசனம் : கார்மேகம் என்று விளம்பரம் செய்தார்கள். அதுவே அவனுக்கு லட்ச ரூபாய் பெற்ற நிறைவு. இப்படிச் சில வெறும் பெயர்களைச் சினிமா உலகில் சாதாரணமாகக் காணலாம்.

படப்பிடிப்பு இரவு பகலாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நல்ல வசதியுள்ள கம்பெனி. விடாமல் 'ஷூட்டிங்' நடந்ததில் வியப்பில்லை.

கதாசிரியர் கார்மேகமும் நாள் தவறாமல் ஸ்டுடியோவுக்குப் போவான்; வருவான். முதல் நாளன்று கார் அனுப்பினார்களே அது தான் அவன் கண்டது. மற்றைய நாட்களில் அரசாங்க பஸ்ஸே சரணம்தான் !

படப் பிடிப்பு இல்லாத நாட்களில் அவனை வேண்டுமென்றே கம்பெனிக்கு வரச் சொல்லி அடுத்த படத்துக்கான கதையைப் பற்றி



நட்டுவனார் : உங்க பெண்ணுக்கு முதல்லே 'டிரில்' மாஸ்டர் ஒருத்தரை ஏற்பாடு பண்ணுங்க. அப்புறம் மற்றதைப் பார்க்கலாம்.

வியாதிப்பாள் சீதாமணியம்மாள். கார்மேகத்துக்கு நிலை கொள்ள வில்லை. என்றாலும், ஓரிரு போதுகளில் பண விஷயமாக மெல்லக் காதைக் கடிப்பான். சீதாமணியம்மாளிடமிருந்து ஒரு நமட்டுச் சிரிப்பு. அவ்வளவே!

அந்த அம்மாள் அதற்கு மேலும் அங்கு உட்கார மாட்டார்கள்! அவர்களுக்கென்ன பைத்தியமா? இம்மாதிரி எத்தனை பேர்களைப் பைத்தியமாக்கி யிருக்கிறார்களோ?

சீதாமணியம்மாள் காலி செய்த இடத்தை உடனே வந்தமர்ந்து நிரப்புவாள் அருமைப் புதல்வி — அழகிய புதல்வி—மஞ்சுளா தேவி. அவள்தான் அந்தக் கம்பெனிப் படங்களின் இரண்டாம் - கதாநாயகி. இன்னும் முதல் கதாநாயகியாக வில்லை. அவள் ஆகவில்லையோ? ரசிகர்கள் இன்னும் ஆக்கவில்லையோ!

வெயில் அற்புதமாகச் சூடேற்றிக் கொண்டு இருந்தது. முறுவலித்த முகக் கோணலுடன் முக்கால் உடல் தெரிய வந்தமர்ந்த மஞ்சுளா தேவியைக் கண்டு முகம் சுண்டினான் கார்மேகம். எப்போதும் இது நடைபெறுவது என்பதை அவனுடைய முகமே எடுத்துக் காட்டியது.

''கதாசிரியர் ஏன் களையிழந்து காணப்படுகிறார்?''

கிணு கிணுக்கக் கேட்ட கதாநாயகியை ஒரு கணம் ஏறெடுத்துப் பார்த்த கார்மேகம், ''என்ன செய்ய? அம்மா இளிக்க இளிக்கப் பேசுகிறார்கள்!'' என்று அவன் கூறி முடிக்க வில்லை; அதற்குள் இடைமறித்து, மஞ்சுளா தேவி, ''அதாவது உங்கள் வசனத்தைப் போல !'' என்று கூறிச் சிரித்தாள்.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன். ஆனால் பணம் என்று வாய் திறந்தால், உடனே எழுந்து போய் விடுகிறார்கள்; அந்த இடத்துக்கு 'ஏனோ' நீங்கள் வந்தமர்ந்து சமாதானப்படுத்துகிறீர்கள். இது தானே புரியாத சங்கடமாக இருக்கிறது!''

மஞ்சுளாதேவி கலகல வென்று சிரித்தாள்.

''இது புரியவில்லையா, உங்களுக்கு?''

''சத்தியமாகப் புரியவில்லை!''

''நல்ல அப்பாவிக் கதாசிரியர் நீங்கள்! நீங்கள் எப்படித்தான் காதல் காட்சிகளுக்கு வசனம் எழுதுகிறீர்களோ? மேக்கப் மேன் முதல், டைரக்டர் வரை புரிந்து கொண்ட ஒரு சாதாரண — அற்ப விஷயம் உங்களுக்குப் புரியவில்லையே! ஆச்சரியம்தான்! உங்களுக்குக் கல்யாணம் ஆகி விட்டதா?''

''ஏன் கேட்கிறீர்கள்? இன்னும் ஆக வில்லை!''

''ஓகோ! இதுவும் இரண்டும் கெட்டான் விஷயம்தான். அது சரி! நான் உங்களைக் கலியாணம் செய்து கொள்ள விரும்புவதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்போது என்ன நினைப்பீர்கள் ?''

''நிச்சயமாக முடியாது என்று மறுத்து விடுவேன் !''

''காரணம் ?''

''விளக்க வேண்டுமா? என் பெற்றோர் சம்மதிக்க மாட்டார்கள்.!'' கார்மேகத்தின் பதில்களிலிருந்து, அவனைப் பூரணமாக எடை போட்டு விட்டாள் மஞ்சுளா தேவி. இவன் ஓர் அசட்டு ராமன் !

அதற்குள் கடிகாரம் ஒரு மணியாகி விட்டது என்று அறிவித்தது. எல்லாரும் உணவுக்கு எழுந்தனர். அவனுக்கு இந்த ஆறு மாத காலமாகப் பகல் உணவு கம்பெனியில்தான். இது சினிமாக் கம்பெனிகளில் 'வாங்கும் கவளத்து ஒரு சிதிலை'ப் போன்றது.

'ஏமாறச் சொன்னது நானோ?' என்ற தலைப்புடன் படமும் வெளியானது. கார்மேகத்துக்கு நிலைகொள்ளவில்லை. இரண்டு வாரங்கள்வரை ரசிகர்களுடைய பாராட்டுக்களையும், பத்திரிகைகளின் விமர்சனங்களையும் கவனிப்பதிலேயே காலத்தைப் போக்கினான். படமும் விழுந்தது. அது கம்பெனியாரை நோக்கி 'ஏமாறச் சொன்னது நானோ?' என்று கேட்டது.

நூற்று ஓர் ரூபாய் முன்பணத்துடன் இருந்துவிட்ட கதாசிரியன் கார்மேகம், மீதிப் பணத்தை வசூலிக்க வேண்டி அன்று கம்பெனியில்' காலெடுத்து வைத்தான். அகிலாண்டம் பிக்சர்ஸ் கம்பெனி அழுது வடிந்து கொண்டிருந்தது. ஒரு பக்கம் சீதாமணியம்மாளும், செல்வப் புதல்வி மஞ்சுளா தேவியும் தலைமேல் கைவைத்துப் பேயறை பட்டவர்களைப் போலக் காணப்பட்டார்கள். வேறுபக்கத்தில் டைரக்டர் 'சந்தில் சந்த்' சிகரெட்டுக்களை ஊதிப் புகைத்துக் கொண்டிருந்தார். வெளியில் ஒப்பனைக்காரர், அடப்பக்காரர்கள், இத்யாதி - இத்யாதி... காத்துக் கொண்டிருந்தனர்.

உலகமறியாத பிள்ளையாக உள்ளே வந்த கார்மேகம் நேரே 'அம்மா'வைத் தரிசிக்கச் சென்றான். அவனை உட்காரச் சொல்லக்கூட ஒருவருக்கும் நாவெழவில்லை.

''அம்மா! படமும் முடிந்து விட்டது. எனக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுக்கிறீர்களா?''

என்ன துணிவு இவனுக்கு? சீதாமணியம்மாள் அண்ணாந்து பார்த்தாள். அந்தப் பார்வை பணமா வேண்டும் என்று கேட்டது.

''எவ்வளவு பணம்?''

பொருளாதார சுதந்திரம்

அடைய

திறமை மிக்க பாங்க் தொழில் அமைப்பு

சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியாவின் பாங்க் தொழில் அடைந்துள்ள அபிவிருத்தியும் முன்னேற்றமும் பொருளாதார சுதந்திரம் அடைய திறமை மிக்க பாங்க் தொழில் அமைப்பு எத்துணை அவசியம் என்பதற்கு மறுக்க முடியாத ஒரு சான்றாகும்.

“ஒரு நல்ல பாங்க் சமுதாயத்தின் இருதயம் மட்டுமல்ல, நாட்டின் மக்கள் எல்லா வகையிலும் வளமடையவும் சுபிட்சம் பெறவும் உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறது” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஐம்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது கனரா பாங்க்.

தோன்றிய நாள் முதலாய், நகர்ப்புறமட்டுமல்லாமல் கிராமப் புறங்களிலும் பாங்க் பழக்கத்தைப் பரவச் செய்து, வர்த்தகம், வியாபாரம், தொழில் இவற்றின் அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்து, நல்ல பண பரிவர்த்தனை மூலம் மக்கள் பணப் பாதுகாப்பு பெற, அமைதியாக ஆனால் அயராமல் உதவி செய்து வந்திருக்கிறது.

சிறந்த பாங்க் தொழில் மூலம் சிறந்த வாழ்வு பெறவும், நாடும் மக்களும் சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அபிவிருத்தியடையவும் பல்வேறு சேவைகள் அளித்து “பொருளாதார சுதந்திரம் அடைந்துவிட்டோம்” என்று மக்கள் கூறும்படி தொண்டு செய்து வருகிறது கனரா பாங்க்.

முன்னேறுங்கள் – கனரா பாங்குடன் முன்னேறுங்கள்



பாங்கின் நிர்வாகக் காரியாலயக் கட்டிடம்

கனரா பாங்க் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1906)

பதிவுக் காரியாலயம்: மங்களூர் | நிர்வாகக் காரியாலயம்: பெங்களூர்

பாங்க் மட்டுமல்ல பாங்கை விட மேலான பாங்க்

உலக முழுதும் பிரதிநிதிகள் | இந்தியாவில் 235 கிளைகளுக்கு மேல் உள்ளன

CB-.../...

''நாலாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றெண்பது ரூபாய்!''

''இவ்வளவுதானே?''

''ஒப்பந்தமே அவ்வளவுதானே?''

''ஓகோ! எங்களுக்கு நட்டம் எவ்வளவு தெரியுமா? பத்து லட்சம்!''

''அதைப்பற்றி எனக்கென்னம்மா கவலை?''

''உங்களுக்குக்கென்ன கவலையா? உங்களுடைய பரிதாபமான கதையைப் படமாக்கினோமே... எங்களுக்குக் கவலை!''

இதற்குள் மஞ்சுளாதேவி குறுக்கிட்டாள்.

''நான் அப்போதே சொன்னேன். புதிய 'ரெக்ரூட்'களைப் போட்டுக் கதை எழுத வேண்டாம். கதைதான் மூல அம்சம்; பிரபலமான எழுத்தாளர்களை வைத்து எழுதலாம் என்று தலைப்பாடாக அடித்துக்கொண்டேன். கேட்டால்தானே?''

பழியைத் தீர்த்துக் கொண்டவள் போல் அலட்சியமாக நோக்கினாள் மஞ்சுளா தேவி. கார்மேகத்தின் முகம் கசப்பை விழுங்கியதைப்போல் காணப்பட்டது.

இதற்குச் சற்றே தொலைவில் அமர்ந்திருந்த டைரக்டர் சந்தில் சத்தக் குரல் கொடுத்தார். ''சரி, சரி! இன்னொரு நூறு ரூபாய் கொடுத்து ஒப்பந்தத்தை முடித்து ஆளை அனுப்புங்க! நீங்கபாட்டுலே 'அவன்'கிட்டே ஏதேதோ பேசிக்கிட்டு...''

'அவன்!' — எத்தனை அகம்பாவமாகச் சொல்லுகிறான், இந்த டைரக்டர்! ஏன் சொல்ல மாட்டான்? ஏதோ பேரு பிடித்துவிட்டால் உடனே சினிமா சரணம் கச்சாமி! திரையில் பெயர் வந்தால் போதும்... கூஜா தூக்கவும் அவன் தயாராக இருக்கிறான்: அவன் செய்துவிட்டுப் போகும் அந்தக் கேவலமான செயலால் பின்னால் வரும் உண்மையான எழுத்தாளன் — நேருஜி சொன்னதுபோல் உலகின் முதுகெலும்பு — இலக்கிய மன்னன் அவமதிக்கப்படுகிறான். பிறகு சீ, சீ! இந்த உலகம் வேண்டாம் என்று அவன் ஒதுங்கிவிடுகிறான். இந்நிலையில் மேலை நாட்டைப்போல நம் நாடும் சினிமாத் துறையில் முன்னேற வேண்டும் என்று கூச்சல் போட்டால் எப்படி முன்னேறிவிடும்? முதுகெலும்பே முதலாவதாக முறியடிக்கப் படுகிறதே!

'அவன்' என்ற சொல் கார்மேகத்துக்குப் பெரிதாகப்படவில்லை. அவன் கேட்டான்: ''இது என்ன பிச்சைக் காசா?''

''இதாவது கிடைக்கிறதே என்று சந்தோஷப்பட்டுக் கொள்ளுங்கள். எங்களுக்கு இதுவுமில்லை.'' டைரக்டர்தான் சொன்னார்:

''உங்கள் முடிவு இதுதானா?''

''இதுவரை எங்கள் முடிவை நாங்கள் மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை.!'' சீதாமணியம்மாள் பதில் சொன்னாள்.

''அப்படியென்றால், 'கோர்ட்' முடிவைத் தான் தெரிந்து கொள்ளுகிறேன்!'' கார்மேகம் விரைவாக வெளியேறினான். எதிர்பாராத இந்த முடிவைக் கேட்டு அனைவரும் அதிர்ச்சி கண்டவர்களைப் போல் விறைத்து நோக்கினர். சீதாமணியம்மாள் சிரித்துக்கொண்டே முனகினாள்: ''இவனாவது கோர்ட்டுக்குப் போவதாவது!''

இருட்டுலகை ஆட்சி செய்து கொண்டிருந்த நிலவை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டே சிந்தனையில் மூழ்கி இருந்தான் கார்மேகம். பொழுது விடிந்தால்



விருந்தும் சந்தாவும்

பத்திரிகை ஆசிரியர் ஒருவர் தம் பத்திரிகை தொடங்கி ஓராண்டு முடிந்த பின் அதைக் கொண்டாடத் தம் நண்பர்களுக்கெல்லாம் விருந்து வைத்தார். விருந்து முடிந்தது. நன்றி கூறுமுன் வந்திருந்த நண்பரொருவர் "ஒவ்வொரு மூன்று மாத முடிவிலும் இம்மாதிரி விழாக் கொண்டாட இறைவன் அருள் புரிவாராக" என்றார். சட்டென்று பத்திரிகை ஆசிரியர் "ஆண்டுச் சந்தாவையும் மூன்று மாதங்களுக் கொருமுறை கொடுத்து விடுங்கள். அவ்வாறே செய்யலாம்" என்றார்.



வழக்கு விசாரணை. மெல்ல உறக்கம் வந்தது. போய்ப் படுத்துக் கொண்டான்.

பொழுது விடிந்தது. அவன் தெய்வ நம்பிக்கை இல்லாதவன். மனித நம்பிக்கைக்குப் பாத்திரமான வக்கீலுடன் சென்னை உயர்நீதி மன்றத்தை அடைந்தான். 'காப்பிரைட்' வழக்கென்றாலே சுவையான வழக்காயிற்றே! எனவே பத்திரிகைக் கூட்டம் அங்கிருந்தது.

வழக்கு விசாரணை காரசாரமாகத் தொடங்கியது. சில பொய்க் கணக்குகளையும் கையெழுத்துக்களையும் காட்டி வழக்கைத் திருப்ப முயன்றார்கள், அவ்வாண்டம் பிக்சர்ஸார். அது அவர்களுக்கே ஆபத்தாக முடிந்தது. அன்றைய விசாரணை அத்துடன் முடிந்தது.

சிதாமணியம்மாள் ஏற்பாடு செய்திருந்த வக்கீல் ராமநாதன் நாடி தளர்ந்து போய் விட்டார். அவர் அந்த அம்மாளை அருகே அழைத்து, "பேசாமல் ராஜியாய் விடுங்கள். பிறகு கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகிப் போய்விடும்! வேறு பொய்க் கணக்குகள் வெளியில் அம்பலமாகி விடக் கூடாதல்லவா?" என்று காதோடு காது வைத்தாற்போல் சொன்னார். சிதாமணியம்மாளாவது, ராஜியாவதாவது! அதுவும் கோர்ட்வரையில் இழுத்த அந்த அப்பாவிக் கதாசிரியனிடம்!

அன்று மாலையே கார்மேகத்தின் வீட்டுக்கு கார் வந்து நின்றது.

"உங்களை அம்மா அழைச்சிட்டு வரச் சொன்னாங்க!" — காரோட்டி சொன்னான்.

"ஏன்?"

"சமாதானமாகக் கணக்கைத் தீர்த்து விடுறாங்களாம்!"

கார்மேகத்துக்கும் ஒரு விதத்தில் மகிழ்ச்சி. வழக்குச் சாதகமானால் பரவாயில்லை; பாதகமானால்...? இந்தத் தொல்லையில்லாமல் பணம் வந்து சேருகிறதே! — கொண்டிருந்த பயம் தெளிந்தது. உடன் வக்கீலை அழைத்துக்கொண்டு செல்ல வேண்டுமே என்ற நினைவு கூட எழாமலேயே அவன் புறப்பட்டான். வக்கீலோடு சென்றால், அவருக்கு வேறு அதிகப்படியான பணத்தைச் சொன்ன படி கொட்ட வேண்டுமே! இப்போது ஏமாற்றி விடலாம் அல்லவா?

அதே பாணி. அதே புன்னகையுடன் வரவேற்று உபசரித்தாள் சிதாமணியம்மாள். மங்களா தேவியைக் காணோம். டைரக்டர் இருந்தார்.

"ஏதோ தவறுதலாக நடந்துவிட்டது. உங்களுக்குத் தெரியும், படம் மூன்று வாரங்களுக்கு மேல் மூச்சுப் பிடிக்கவில்லை என்று! என்றாலும் உங்களுக்கு மட்டும் கணக்கை முழுதும் தீர்க்கிறோம்" என்று கூறியவாறு ஐம்பது நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தாள் சிதாமணியம்மாள். எண்ணிப் பார்த்த கார்மேகம், மேற்கொண்டு இருக்கும் நூறு ரூபாயைப் பற்றிக் கேட்டான்.

"பரவாயில்லை. கோர்ட் செலவையும் நாங்கள் தரவேண்டும். என்றாலும் நூறு ரூபாய்தானே அதிகம் தருகிறோம். சந்தோஷமாக எடுத்துச் செல்லுங்கள்!"

"பெற்றுக் கொண்டதாக ரசீது...!"

"பரவாயில்லை. உங்கள்மீது எங்களுக்கு நம்பிக்கையுண்டு. நீங்கள் ஒரு நேர்மைவாதி!"

மனம் குளிர்ந்துவிட்டது, கார்மேகத்துக்கு. அவன் புறப்பட்டு விட்டான். பின்னால் சிதாமணியம்மாள் சிரித்த சிரிப்பு அவனுக்குத் தெரியவேண்டுமே—புரியவேண்டுமே!

அன்று முழுவதும் அவனுக்குத் தலைகால் தெரியவில்லை. ஐயாயிரத்துக்கு அதிபதியாயிற்றே! இரவு சரியாகத் தூக்கம் வரவில்லை. எப்படியோ பொழுதும் விடிந்து விட்டது. விடிந்தும், விடியாததுமாக வக்கீலைக் கண்டு வழக்கைத் திருப்பிப் பெற ஏற்பாடு செய்யப் புறப்பட்டான். அப்போது...

இரண்டு போலீஸ்காரர்களும் சப் இன்ஸ்பெக்டரும் சகுனத் தடையாக எதிரே வந்து நின்றனர்.

"கார்மேகம் என்பவர் இங்குதானே இருக்கிறார்?"

"ஏன்? நான்தான்!"

"வீட்டைச் சோதனை போட வேண்டும்!"

"எதற்காக?"

"உங்கள் வீட்டில் கள்ள நோட்டுக்கள் இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது."


"கள்ள நோட்டுக்களா?" — இடி விழுந்து போனான் கார்மேகம். அவனுடைய நினைவில் கோயமுத்தூர் கள்ள நோட்டுச் செய்தி இதழ் விரித்தது. அந்த நோட்டுக்கள்தான் நேற்று சிதாமணியம்மாள் கொடுத்தவையா?

சோதனைக்குப் பிறகு நோட்டுக்கள் பிடிபட்டன. இரவு கிடைத்த 'மொட்டைச் செய்தி' வீண் போகவில்லை, என்ற பெருமிதம் சப் இன்ஸ்பெக்டருக்கு ஏற்பட்டது. கார்மேகம் எத்தனை காட்டுக் கூச்சலுடன் விஷயத்தை எடுத்துச் சொல்லியும் சப்—இன்ஸ்பெக்டர் கேட்கவில்லை.

கார்மேகத்தின் இந்தக் 'கதையை'ப் பின்னால் கோர்ட்டே நம்பவில்லையே! இதற்கான ஆதாரங்கள்? தான் கொடுத்த நோட்டுக்கள்தான் இவை என்று ஒப்புக் கொள்ளச் சிதாமணியம்மாளுக்கு என்ன பைத்தியமா? அவள்தான் எத்தனையோ பேர்களைப் பைத்தியமாக்கி யிருக்கிறாளே!

சிவப்பு கார்டினல் பாலிஷ்

தரைகளையும் படிக்கட்டு களையும் பளபளப்பான செங்கிற ஒளிபெறச் செய்கிறது !



உங்கள் வீட்டுத் தரைகளை சிவப்பு கார்டினல் பாலிஷ் மூலம் உயிர்கொடுத்து ஒளிபெறச் செய்யுங்கள். சிவப்பு கார்டினல் பாலிஷ், உடனே ஒளி கொடுத்து தரைகளைப் பிரகாசிக்கச் செய்கிறது. மினுமினுப் பற்ற சாதாரண கல் தரையிலும் சிமிட்டித் தரை யிலும் பரீட்சை செய்து பாருங்கள். சிவப்பு கார்டினல் பாலிஷ் சீக்கிரத்திலேயே மங்கலான தரைகளை, புதியதோர் செங்கிற ஒளியுடன் பிரகாசிக்கும்படி செய்துவிடும்.

உங்கள் வீட்டுத் தரைகள் உயிருடன் கூடிய ஒளிபெற, இன்றே சிவப்பு கார்டினல் பாலிஷை உபயோகியுங்கள் !

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWT CP 1441


கதம்பசாரம்

ஒரே இரவில் முழு நீளத் தாடியை—செயற்கைத் தாடியல்ல! இயற்கைத் தாடியை யாராலும் வளர்த்துக் கொள்ள இயலுமா? 'முடியாது' என்றுதானே சொல்வீர்கள்! ஆனால் அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்த கிறிஸ்டோபர் கொலம்பஸுக்கு அப்படி ஒரே இரவில் தாடி தோன்றி விட்டது!

1893-ம் ஆண்டில் நடந்த ஒரு விசேஷத்தை யொட்டி அமெரிக்காவில் கொலம்பஸ் சம்பந்தப்பட்ட ஒரு செண்ட், இரண்டு செண்ட் தபால் தலைகளை வெளியிட்டார்கள். 'கொலம்பஸ் புது உலகத்தைப் பார்க்கிறார்' என்ற தலைப்புப் போட்ட ஒரு செண்ட் ஸ்டாம்பில் கொலம்பஸ் மழுமழுவென்ற முகத்துடன் காணப்பட்டார். 'கொலம்பஸ் புது உலகில் காலடி வைக்கிறார்' என்ற இரண்டு செண்ட் தபால் தலையில் முழு நீளத் தாடி உள்ளவராக இருக்கிறார் கொலம்பஸ். இத்தனைக்கும் முதல் நாள் தென்பட்ட புது பூமியில் மறுநாள் காலையில் கொலம்பஸ் தம் சகாக்களுடன் இறங்கினர் என்று சரித்திரம் சொல்லுகிறது!

* * *

கோடீசுவரராக விளங்கிய ஹென்றி போர்டு வியாபார சம்பந்தமாக லட்சக்கணக்கில் செலவழித்த போதிலும் தம் சொந்தத் தேவைகளுக்காக அவராகப் பணம் எடுத்துச் செலவழிப்பது என்ற வழக்கம் கிடையாதாம். காலை வேளைகளில் காரியாலயத்துக்குக் கிளம்பும்போது சட்டைப் பையில் பணமே எடுத்து வைத்துக் கொள்ளாமல் கிளம்பி விடுவார். இது தெரிந்த அவருடைய காரியதரிசி தயாராக ஒரு கவரில் இரு நூறு டாலர் நோட்டுக்களைப் போட்டு அவர் ஆபீஸ் மேஜை மீது வைத்திருப்பார். தம் நாற்காலியில் வந்து அமர்ந்ததும் கண் பார்வையில் விழும் அந்தக் கவரை ஹென்றி போர்டு எடுத்துத் தம் சட்டைப் பையில் போட்டுக் கொள்ளுவார். அதைப் பற்றி உடனடியாக மறந்தும் போய் விடுவார்.



இரவு படுக்கப் போகும் போது சட்டைப் பையில் இருக்கும் அத்தனை வஸ்துக்களையும் எடுத்துப் பக்கத்துப் பீரோ டிராயரில் போட்டு விட்டுத் தூங்கி விடுவார். அவர் காலமான பிறகு, அவருடைய படுக்கை அறையிலிருந்த பல பீரோ டிராயர்களில் ஏராளமான இரு நூறு டாலர் நோட்டுக்களுள்ள கவர்கள் அப்படியே இருந்தனவாம்!

* * *

ஜார்ஜ் பெர்னர்ட் ஷாவுக்கு ஒரு கடிதம் வந்தது. விலாசம் எழுதியவர் 'ஷா' என்பதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் 'ஷாம்' என்று எழுதி விட்டார். ஷாவுக்கு ஒரே கோபம். 'உலகப் பிரசித்தி பெற்ற என் பெயரைச் சரியாக உச்சரிக்கவோ எழுதவோ தெரியாத ஜடம்! மேலும் 'ஷாம்' என்ற பெயரோ வார்த்தையோ நடைமுறையில் கிடையாது' என்று தம் மனைவியுடன் இரைந்தார்.

ஷாவின் மனைவி அவர் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு தலையை அசைக்கவில்லை. அதற்கு மாறாக ஆங்கில அகராதியை எடுத்து விரித்து வந்து கொடுத்தாள். ஷாம் (Shawm) என்ற வார்த்தைக்கு எதிராக 'பழங்காலத்து ஊதுகுழல் வாத்தியம்' என்று போட்டிருந்தது. ஷாவின் முகம் சுருங்கி விட்டது.

* * *

பிரெஞ்சு நாடக ஆசிரியர் மோலியருக்கு டாக்டர்கள் என்றாலே பிடிக்காது. ஒரு தடவை மோலியர் உடல் நலமில்லாமல் படுத்து விட்டார். அவசரமாக டாக்டருக்குச் சொல்லி அனுப்பினார்கள். வேட்டைக்குப் போயிருந்த டாக்டர் இடைவழியில் இந்தச் செய்திகேட்டு அப்படியே கையில் பிடித்த துப்பாக்கியுடன் வந்தார்.

மோலியர் அவரை ஏற இறங்கப் பார்த்தார். "இந்தத் தடவை மருந்துகளினால் என்னைக் கொல்ல முடியாது என்று நினைத்துத் துப்பாக்கியைக் கொண்டு வந்து விட்டீர்களா?" என்று கேட்டார் நிதானமாக.

* * *

ஆங்கில நடிகர் சர் ஹெர்பர்ட் பீர்பாம் ஞாபக மறதிக்கு மிகவும் பெயர் போனவர். ஒரு நாள் பிற்பகலில் ஒத்திகையைப் பாதியில் நிறுத்திக் கொண்டு பக்கத்திலிருந்த சாப்பாட்டு விடுதிக்கு உணவருந்தச் சென்றார். கையில் நாடக வசனக் கடிதக் கத்தை இருந்தது. காலி மேஜை ஒன்றில் அமர்ந்து, சாப்பிட வேண்டியதைக் கொண்டு வரச்சொல்ல மறந்து கையிலிருந்த வசனக் கத்தையில் ஈடுபட்டு விட்டார்.

முப்பது நிமிடங்கள் இப்படியே ஓடி விட்டன. திடீரென்று கைக்கடிகாரத்தைப் பார்த்த பீர்பாம் உபசரிப்பாளரைக் கூப்பிட்டு, "இந்தாப்பா! நான் ஏதாவது சாப்பிட்டிருந்தால் அதற்கான பில்லைக் கொண்டு வா. இல்லையானால் சாப்பிட ஏதாவது கொண்டு வா" என்றாராம்!

* * *

அவள் ஒரு நடிகை. எழிலரசி. [illegible] பெற்ற வழக்கறிஞர் ஒருவரின் காரியாலயத்தை அடைந்தாள். எல்லோரும் முதலாவதாக அவளை அழைத்து "என்னால் ஆக வேண்டிய காரியம் உங்களுக்கு ஏதாவது இருக்கிறதா?" என்று அன்போடும் ஆதரவோடும் விசாரித்தார்.

"நான் விவாகரத்து விரும்புகிறேன்!" என்றாள் அவள்.

"அவ்வளவுதானே! நான் குறைந்த செலவில் வழக்கை வெற்றிகரமாக நடத்தித் தருகிறேன்" என்றார் வழக்கறிஞர்.

"என்ன செலவாகும்?"

"அதிகபட்சம் ஐந்நூறு ஆகலாம்...!"

"என்ன, ஐந்நூறு ரூபாயா? ஐம்பதே ரூபாயில் அவரைத் தீர்த்துக் கட்டுவதாக என்னிடம் எத்தனையோ பேர்கள் போட்டி போட்டுக் கொண்டு நிற்கிறார்களே! உங்கள் பீஸ் ரொம்ப அதிகம். வருகிறேன்."

நடிகை புறப்பட்டு விட்டாள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



உங்கள் எழிலுக்கு எழில் செய்யும்

மேரோலின் சோப்

இதோ உங்கள் மேனியைச் சுத்திகரித்து எழி
லுறச் செய்யும் வாசனை சோப். அழகிற்கு
ஆதாரமான வதனத்தின் பொலிவிற்குத்
தவறாமல் மேரோலின் உபயோகியுங்கள்.

உங்கள் கூந்தலை தவறாமல் மேரோலின்
சோப்பினுல் சுத்தம் செய்யுங்கள். அது தலை
யில் பொடுகு விழுவதையும் தடுக்கிறது.

வெஜிடபிள் சோப் ஒர்க்ஸ், கள்ளிக்கோட்டை மற்றும்
தபால் பெட்டி: 3254 பம்பாய்—3.

Aiyars VS. 253 TAM(R)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



தரத்திற்குத் தாயன்பே உரைகல்....

தரமறிந்த தாயன்பின் தங்கமான தேர்வு: டால்டா



சின்னஞ்சிறு வயதினிலே சீராட்டி வளர்க்கின்றாள், வளரும் பருவத்தில் வகைவகையாய்த் தருகின்றாள் வாயினிக்கும் நல்லுணவு ... அதன் ஒவ்வொரு கவளமும் ... உருவாக்குமே உடலுறுதிகொண்ட நாளையக் காளையினை. அவன் உண்ணும் ஒவ்வொரு கவளமும்... உரைக்குதம்மா எல்லையில்லா அன்பின் சுவை...நல்லநல்ல பண்டங்களின் நயம் ... டால்டா வனஸ்பதியின் திறம்! வைட்டமின்கள் செறிந்து, மங்காத புதுமையோடும், மாறாத தூய்மையோடும் ஸீலிட்ட டப்பாக்களில் மட்டுமே கிடைக்கும் டால்டா. ஆம், விழிப்புள்ள தாயறிவாள்: திறந்த டப்பாக்களிலிருந்து சில்லறையாக விற்கப்படுகின்றனவே அவை டால்டா அல்ல, வேறென்னவோ. பேரீச்சமர அடையாளமிட்ட டால்டா வனஸ்பதியே உரிமையோடு உபயோகியுங்கள். தூய்மையே உருவாக உமதன்பின் உரைகல்லிலும் அதன் அருமை மிளிரட்டும்.

தூய்மையான தனிப்பெரும் சமையல் சாதனம் டால்டா வனஸ்பதி

DL. 113-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு